புலத்திலும் உயிர்த்த ஒரு பீனிக்ஸ் கவிஞனின்

# அகவைப்பா

## NOT A POLITICS BUT A REAL STICKS

## AGAVAIPPAH

## உடைந்த கற்களில்...நடந்த கால்கள்

BY


THEEVAGAM V.RAJALINGAM

தீவகம் வே.இராசலிங்கம்



பாரதிவயல்~கனடா

# அகவைப்பா

# AGAVAIPPAH

அன்புடன்,

## நூல் விபரம்

நூலின் பெயர்: அகவைப்பா

நூலாசிரியர்: தீவகம் வே. இராசலிங்கம்.

வெளியீடு: பாரதிவயல் பதிப்பகம்.

முதற்பதிப்பு: ஐப்பசி-2013

தட்டச்சு: தீவகன்.
வடிவமைப்பு: தீவகன்.
அட்டைப்படம்: தீவகன்.



பதிப்புரிமை: நூலாசிரியருக்கே.



**NAME OF THE BOOK: AGAVAIPPAH**

**AUTHOR: THEEVAGAM. V. RAJALINGAM**
G.C.E(O.L/A.L ENGLISH MEDIUM), DIP. IN. WEB.DESIGN

**LANGUAGE:** TAMIL

**FIRST EDITION:**
JANUARY (THAI MATHAM) 2013

**TYPE SETTING, DESIGN AND FRONT COVER PAGE:** THEEVAGAN.

**NUMBER OF COPIES:** 500.



**COPY RIGHT:** AUTHOR.

# அகவைப்பா

## தீவகம் வே.இராசலிங்கம்

## சமர்ப்பணம்

மடைபரப்பிய சடலங்களாய்
ஒட்ட முடியாத உடலங்களாய்ச் சிதறி
பொட்டல் வெளியில் கந்தக நெருப்பில்
பொசுங்கி எரிந்த மனிதங்களே
புனிதம் ஒன்றுக்கான
மானிடத்தில் உயிர்த்த
அத்தனை ஆத்மாக்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணமாகுக

**AGAVAIPPAH**
**by**
**THEEVAGAM V.RAJALINGAM**

வெளியீடு: பாரதிவயல்-கனடா

## என்தமிழே வணக்கம்!

நினைக்கின்ற போதி லார்வாள்
நித்திரை தனிலும் சேர்வாள்
மனைக்குளே நடமே யாகி
மகிழ்வினைத் தருவாள் இந்த
வனப்புயல் அறிவு மாந்தர்
வண்ணமார் சபையி னாங்கே
எனைக்கொண்டு வந்தாள் என்றன்
இன்தமிழ் வணக்கம் செய்தேன்!

என்னையென் தாயார் கையில்
இருந்தவிழ் உண்ட போதும்
கன்னலாய்ப் பாலைப் பருகிக்
கனிமடி துயின்ற போதும்
சென்னியில் மின்னல் ஆகிச்
சிரசேறி என்னைச் சேர்த்த
அன்னையே, தமிழே என்றன்
அகத்தினாள் வணக்கம் செய்தேன்!

# அகவுரை

## தீவகம் வே.இராசலிங்கம்

ஒரு சின்னப்பொழுது என்
அன்னையின் கையில் இருந்து இந்த
உலகத்தைப் பார்த்த அந்தப் பொழுது இன்னும்
ஞாபகத்தில் இருக்கிறது.

அவள் உதிரத்தில் இருந்து என் உயிருக்கு
இரத்தம் பாய்ச்சிக்கொண்டிருந்த அந்தப் பொழுதுகளும்
பசுமையாக்கப்பட்டவை.

அவனுக்கு இன்னுமா தேவைப்படுகிறது ..நல்லா
அடிபோடுங்க என்றதும் என்காதுகளில் இப்போதும் கேட்கிறது.

நான் இப்போதும் என்தாயில் பால் அருந்துகிறேன் என்பது
எனக்குத் தெரியும்வரை அவள் மடியில் நான்
அலக்காகத் தூங்கினேன்!

நிலா நிலா ஓடிவா.. நில்லாமல் ஓடிவா
மலைமேல் ஏறிவா மல்லிகைப்பூக் கொண்டுவா..
என்பது அவள் கைமேல் ஏந்திக் கைகாட்டி நிலாவை அழைத்த
காலத்தில் இப்பொழுதும் நான் கட்டுண்டு கிடக்கிறேன்..

நிலைபெறுமால் எண்ணுதியேல் என்பது அவள் கடவுளை
எனக்குக் காட்டிய முதற் பண்..

எப்பொழுது அவள் கையைவிட்டு இறங்கினேனோ அப்பொழுதில்
இருந்து வயலும் வாய்க்காலும், அயிரைமீன் துடித்துப் பாயும்
அந்த மாரிநீர் ஆற்றையும் தெரிந்து கொண்டேன்..

ஊரடங்குச் சட்டம் பாய்ச்சிய அந்த நாளில், ஐம்பத்தி எட்டாக
இருக்கலாம், தூரத்துத் தெருவில் காவல் வண்டி செல்லும்
வெளிச்சத்தில் என்னை வீட்டுக்குள் இழுத்ததும் ஞாபகத்தில்
இருக்கிறது.

சத்தியாக்கிரகத்தில் என் அண்ணன் என்னையும்
இழுத்துக்கொண்டு போய் கச்சேரிமுன் இருந்தமை ஒரு
அடிமையான இனத்தை அறிய வைத்தது.

பண்டா சூடுபட்டு இறந்தபொழுது அடுத்த வீட்டு வானொலியிற்
செய்தி கேட்டேன்..

ஒரு வாக்கால் அரசாங்கம் தோல்வி கண்டமையால்
அப்பொழுதிருந்து அரசியல் எனக்குத் தேவையாக இருந்தது.

காந்தம் இழுப்பது இரும்புக்கு மட்டுமல்ல என் கண்களுக்கும்
இருக்கிறது.

வகுப்புக்குப் போகாமல் வள்ளுவர் விழாவுக்குச் சென்று
பெருங்குளம் அம்மன் தென்மாட வீதியிலே நடந்த அந்த
விழாவில் அரசியலில் திருக்குறள் என்றுரைத்த வித்துவான்
வேந்தனாரைக் கண்டேன்..

மூன்றுமைல் தூரத்திற்கு நடந்தே போனேன், நடந்தும்
வந்தேன்..

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றோ செல்வத்தைத்
தேய்க்கும்படை என்று அவன் மேடையில் அழுதபோதுதான்
அவன் அமிர்தலிங்கம் என்பதும் எனக்குத் தெரிந்தது..

துடித்துப் பதைத்துத் தேடிவந்த எனது தாய்..என்
கன்னத்தில்......

இந்தச் சம்பவங்களுக்கும் நாற்பத்தியேழில் நான் பிறந்த
நாளுக்கும் இடையில் இருக்கும் கணக்கை இப்பொழுதும் நான்
கணக்கிட்டுப் பார்க்கிறேன்.. நீங்களும் தெரிந்துகொள்ளும்
கணக்கும் இதற்குள் இருக்கிறது.

இந்த வயதோடு என் இனத்தின் அகழ்வாராய்ச்சியை எனக்கு
நானே எழுதிக்கொண்டேன்..

என் தமிழாராய்ச்சியும் இதற்குள் அடங்கிக் கொண்டது.

கலைமகள், கல்கி என்ற தமிழ்நாட்டு இதழ்களெல்லாம் எனது
மூத்தோர்களால் எனக்குக் கிடைத்தன.

அழ வள்ளியப்பா, தமிழழகன் போன்ற வண்ணக் கவிஞர்களின்
பாடல்களில் சிந்துக்களும் சந்தங்களும் இருக்கும்.
அவை தமிழக வார இதழ்களில் வாராத நாட்களே இல்லை.

கவிதை எனக்குத் தானாகவே வந்த காரணிகள் இதற்கு
மேலான எல்லா வரிகளிலும் உண்டு.

கண்ணீரால் எழுதப்பட்ட இனத்துக் கலவரங்கள் விழிகளில்
எனக்கு நீர் கொட்டவில்லை. இரத்தம் கொட்டியது.

பார்வைகள் பல இராச்சியங்களாக மாறின.

கொத்தாகச் செத்த ஒரே குடும்பத்தை இப்பொழுது முள்ளிவாய்க்காலிலே கண்டேன்.

என் விழியின் இடுக்கில் செருகிக் கொண்டவைகள், என் அகவையின் முடிச்சுக்களில் என்னென்ன அகப்பட்டவை என்பதும் இந்தப் புத்தகத்தில் இருக்கிறது.

அவை உங்கள் கண்களுக்கும், கண்ணீருக்கும் சொந்தமானவை ஆகக் கூட இருக்கலாம் என்பதும் உண்மை.

கற்பனைக்கும் கவிதைக்கும் ஒட்டுமொத்தமாக அகப்படாமல் இதன் அத்தியாயங்கள் உள்ளன.

இரத்த ஆறுகளிலும், உரத்த கூக்குரல்களிலும், நீதிக்கும் சமாதானத்திற்குமான நெஞ்சங்களிலும் இருந்து புறப்பட்ட என் அந்திமக் காலப் படிமங்கள்தான் இந்தப் புத்தகம்

இனவாதமும் சணல்வாதமும் என் மனவாதத்திற்குள் இல்லாதவை

நேசம், சகவாழ்வு, இனங்களுக்கிடையோன உறவு என என் அறுபத்தெட்டு வயதுவரைக்கும் எட்டிப்பார்த்தேன். அகப்படவில்லை.

அகப்பட்டதெல்லாம் இங்கே ஆண்டுக்கு ஒன்றாக அடுக்கி வைத்திருக்கிறேன்.

ஓரிரு வருடங்கள் எனக்குக் கடன்தாவென கடவுளிடம் நான் கேட்டு இருக்கின்றேன்.

தீர்ப்பு என்னிடம் இல்லை. ஆப்பு தெரிவுக்குழுவிடம் தான் இருக்கிறது என்ற அதிபரின் கூற்று இந்தியாவிற்கு மட்டுமல்ல முழு உலகிற்கும் தந்தி அடித்திருக்கிறது.

சமாதானமும் சந்நிதானமும்
அகத்துக்குள் இருந்தால் மட்டுமே வெளியேவரும்

ஆகவே, இங்கே எழுதப்பட்டவை எல்லாம் சமாதானத்தின் விடயதானமே.

கிடைக்குமா? நொருங்குமா? அழிக்கப்படுவதுதான்

அத்தியாயங்களாக முடியுமா?

கடன்பட்ட என் அகவைக்குள் தீர்வுக்கான ஒரு தேர்வு கிடைத்தால் என் ஆத்மாவின் சாந்தி நிலையம் அங்கேதான் இருக்கிறது

எழுத்தாளர் இணையம் வழங்கிய இலக்கண வகுப்பில் பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களிடம் பயின்றேன்..

தெரியாதவை இன்னும் இருக்கின்றன.

ஆனாலும் பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் சுகவீனத்தோடும் வகுப்புகளுக்கு வந்து கற்றுத் தந்தவர். மறக்கமுடியாத மகத்துவர் அவர்.

இந்த புத்தகத்தை அழகாக அச்சிட்டுத் தந்த சோதி-செல்வி தம்பதிகளுக்கு என்றும் கடப்பாடு உடையேன்.

தோன்றாத் துணையாக பலர் என் உடன்பிறபுக்கள் ஆகினர்.

நான் தூங்கினாலும் அவர்கள் தூங்காதது மட்டுமல்ல, இப்புத்தகங்கள் உங்களிடம் வந்து சேரவேண்டுமென எல்லோரும் சேர்ந்து எல்லோருக்குமாக உழைத்ததினால் இந்தப் புத்தகம் உங்கள் கைகளுக்கு வருகிறது.

என்னைச் சுமந்தவர்களே நான் நன்றியுடன் உங்களைச் சுமக்கிறேன்.

தமிழனாக இருந்தாலும் தமிழினவாதியாக இன்றி, இனத்தாடல் எதுவுமின்றி தொகுக்கப்பட்ட ஒரு புத்தம் இது.

அனைத்தும் சம்பவங்களின் சரத்தில் இருந்து பிடுங்கப்பட்டவை.

நாளை முகங்கள் மாறலாம்.
சரித்திர வரிகள் மட்டும் மாறாது.

குறிப்பேடுகளின் பக்கங்களில் இருந்து கொள்ளப்பட்ட இந்தப் பதிவேடுகள் இதே புத்தகத்தில் மட்டுமல்ல, கணினிக் கலங்களும் தங்களின் கைகளில் வைத்திருக்கின்றன.

**நன்றியுடன், தீவகம் வே.இராசலிங்கம்**

# அகவைப்பா

## அகவை: 01
## ஆயிரத்துத் தொழாயிரத்து நாற்பத்தேழு, மாசி-21
### (பாவடிவம்: வெண்செந்துறை)

மகவெனப் பூமியில் மலர்ந்தநற் போதில்
அகவையின் முதல்நாள் ஆனது கேளீர்!

தந்தைவே லாயுதர் தாய்சிவக் கொழுந்து
எந்தையர் ஆக எனைக்கொண் டாடினர்!

ஈழம் என்ற இரத்தின துவீபம்
ஆழக் கடல்நின் றலைக்குமோர் நாடு!

வாடை யுறைக்கும் வடபாற் செழித்து
கோடையும் விளையுங் குபேரப் பூமி!

யாழைப் பரிசாய் அடைந்தவன் பேரதால்
வாழை மலிந்த வளர்நா டதுவாம்!

யாழ்குடா வென்று யவனரும் வந்து
ஆழ்கடல் முத்து அளந்துசென் றனராம்!

இருநூற் றைம்பது இராசாக்கள் ஆண்ட
பெருகு நிலத்துப் பேரரசு ஆகும்!

யாழ்ப்பாண மென்று யாங்கணும் செப்பிய
வாழ்த்தும் நற்றமிழ் வரலா றானதே!

நல்லைச் சங்கிலி நயந்த ஆட்சியும்
நல்லை நாவலர் நயந்த சைவமும்

வேலணை நெடுந்தீவ் வெல்லமும் பரந்து
கோலமும் கொண்டதாற் குளிர்ந்தது தீவகம்!

தீவகத் தாயின் திருவூர் சரவணை
பாவகம் செப்பிய பரந்தநல் லூரே!

ஊரதிற் பிறந்த ஒருநாள் இந்நாள்
தூரனின் கிறுக்காய்த் துளிர்த்தேன் யானும்!

இந்த ஆண்டுதான் இலங்கையின் சுதந்திரம்
மந்திரம் போட்ட மகிமைசேர் ஆண்டாம்!

சுதந்திரச் சட்டம் சேரிட முன்னம்
விதந்தரு கோடு விளைத்தனர் இந்நாள்!

பாணமை யோடும் பற்றுத லோடும்
காணவே தமிழர் கனிந்தது நாடு!

இராம நாதன் அருணா சலமென்(று)
றிருவர் அரசியற் றிருக்கையில் நின்றார்!

சுதந்திரப் படிவம் செதுக்கிய பிரித்தனின்
விதந்திடும் பார்வை வெளிச்சமாய் வந்தது!

சுதந்திரம் பெறவே செந்தமி ழகத்தார்
விதந்தொரு ஒற்றுமை விளைத்தனர் அறிக!

இந்தச் சரித்திரம் இயைந்த போதுதான்
வந்துநான் பிறந்தேன்! வைகறை புதிதாய்!

தமிழ்நிலச் சார்வலம் தந்தநற் சைவமும்
அமிழ்தாய்க் கிறித்துவம் இசுலாம் கூடவே

தமிழ்த்தாய் கொண்ட தகவினாற் செந்தேன்
துமித்த லோடுமென் தொடரெண் பிறந்ததாம்!

பனித்த உளமும் பவளபுன் னகையுமாய்
இனித்த தாயொடும் என்கால் நடந்ததே!



அகவைப்பா: 02

# சுதந்திரம் செப்பிய நாற்பத்தெட்டு மாசி-04

**(பாவடிவம்: நிலைமண்டில ஆசிரியப்பா)**

சுதந்திரம் கிடைத்த சிலநாட் கழித்துப்
பதந்தரு மகவாய்ப் பாவிரு வாகினேன்!
குதம்பற் கோடும் கோடிய பார்வையும்
மதங்கொள் மாயமும் வன்சிறைக் கையில்
அகப்பட நேர்ந்து அரசியல் வன்முறை
வகைப்பட ஊர்ந்து வளர்ந்தது இலங்கை!
நகைப்பிட மானதாய் நற்தமிழ் வாழ்வியம்
திகைக்கட லானது! தேய்ந்தது தமிழ்மண்!
இரண்டர சாட்சி என்ற நிலையது
பிரித்தனால் மாற்றிப் பிரிக்கா விலங்கையின்
ஒற்றை யாட்சியாய் உதித்தது காண்க!
கற்றை வைக்கோலும் காடெரிந் ததுபோல்
இனநெருப் பொன்றதின் ஏடும் விரிந்தது!
சுதந்திரங் காணச் செந்தமிழ் அறிஞர்
விதந்த போதும் வேற்றுமை பின்னாள்
அடைந்த போதுதான் அன்றைய சோல்பரி
குடைந்த அரசியற் கூத்தைப் பார்த்தனர்!
சேனநா யகாவின் துல்லிய மூளையில்
ஆன சுதந்திரம் அறுத்தது இலங்கையை
தமிழனை வைத்தே தமிழனைக் குழியில்
அமிழ்த்திய சாதனை அவர்க்கே உரியது!
பெரும்பான் மையர்கள் பிறிது இனத்தைக்
கரும்பா கவேதான் கணிப்பர் என்ற
உறுதி ஒன்றினை ஊட்டிடச் சோல்பரி
அறுதியாய்க் கொடுத்து அளந்த சுதந்திரம்
மலையகத் தமிழரின் வாக்கைப் பறித்தது!
சிலையாய் இருந்து செப்பிய இலங்கையின்
சுதந்திரம் கிடைத்துக் கீறிய மையும்
பதைத்திட அழிந்தது! பண்தமி ழாளர்
பார்த்து இருக்கப் பறந்தது அரசியல்!
சேர்த்து இழுத்துச் சுதந்திரம் செய்தும்
வார்த்த தமிழன் வடித்தபேய் ஆனான்!

அகவைப்பா: 03

# வாக்குப் பறித்த நாற்பத்தொன்பதாம் ஆண்டு

(பாவடிவம்: இணைக்குறள் ஆசிரியப்பா)



சுதந்திர வரைந்த தீந்தை காயுமுன்
புதைந்து இருந்து
மதத்துக் கிடந்த
விதைத்த தமிழர் வெறுப்பு
உதைத்தவாறு வெளியே சிரித்தது!
மலைவாழ் தமிழரின் வாக்குப் பறந்ததே!

பிரஜா உரிமைப் பேடுஇல் ஆக்கிய
அரசால் மலையகச்
சிரசெனும் தமிழர்கள்
உரிமை வாக்குகள் இழந்தனர்
பெரிதமி ழாளர்கள் பொய்த்தனர்!
முரசுஞ் சுதந்திர மேன்மையும் பறந்ததே!

பத்தாம் வகுப்புச் சேனநா யகத்தின்
புத்தியில் தமிழர்
மொத்தமா யழிந்தனர்!
மெத்தப் படித்த ஜீஜீயோடு
சத்துளார் யாவருஞ் சரிந்தனர்!
பித்தாய்த் தமிழர் பேயர்போ லாயினர்!


சுங்கராய்ச் சோல்பரி சொல்லுக் கடங்கவே
சிங்கள அரசியல்
மங்களம் விரித்தது!
செந்தமிழ் மாந்தர் பதவியில்
முழுங்கப் பட்டதால் மூழ்கினர்!
வந்து விழுந்து வாயினாற் புலம்பினர்!

அமைச்சும் பதவியும் நமைச்சல் தரவே
அமைத்து அமைத்து
குமைச்சலாற் கெட்டுக்
கிடைப்பதற் கென்றே ஓடினர்
உடைந்து நின்றது தமிழினம்
ஏமாற்றப் படவும் காரணம் இதுவே!

அரசியல் மாற்று அடிப்படை நோக்கில்
உரசினர் தமிழர்!
இரண்டாய்ப் பிரிந்தனர்!
திரண்டதோர் வெறுப்புத் துலங்க
இரண்டாய்த் தமிழர் உடைந்தனர்!
இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பிறந்ததே!

செல்வ நாயகம் தந்தை தலைமையிற்
நற்றமிழ்க் கட்சியாய்
நாட்டிற் பரந்தது!
சொல்நயத் தாலே ஊர்ந்து
துல்லிய அறத்தைச் செப்பினர்!!
சுதந்திரம் தீய்த்தது அரசியல் என்றனர்!

அகவை மூன்றில் ஆனஅவ் வருடம்
முகப்பைப் பார்த்தேன்!
முழுசாய்ப் பதைத்தேன்!
செகத்தொடும் வந்த சுதந்திரம்
சுகமிலை யென்றே ஆனதுவே!
தகத்த நாடு தணல்போ லானதே!



அகவைப்பா: 04

# 1950:தேசியக் கொடியும் தேசிய கீதமும்!

**(பாவடிவம்: அடிமறிமண்டில ஆசிரியப்பா)**

ஐம்பதிற் பிறந்தது தேசியக் கொடியாம்
சுதந்திர இலங்கையின் தேசியக் கொடியாம்
சிங்கம்வாள் ஏந்திய தேசியக் கொடியாம்!
சிந்திக்க வைத்ததோர் தேசியக் கொடியாம்!

செம்மஞ்சள் தமிழர்க்குக் சிறுகோடு உடைத்தாம்!
எழிற்பச்சை இஸ்லாத்தின் இனத்தோடு ஆனதாம்!
சிங்கமும் சிவப்பும் சிங்களர்க்கே உரித்தாம்!
இலைநான் கும்இன் னாட்சி வடிவமாம்!

ஐம்பதில் உதித்ததும் தேசிய கீதமே!
ஆனந்தா சமரக்கோன் ஆக்கிய கீதமே!
இருமொழி ஒலித்திடும் தேசிய கீதமே
அழகிய தமிழிலும் ஆனதிக் கீதமே

**இரண்டாயிரத்துப் பதின்மூன்றில்!**

தேசிய கீதம் அரசியல் ஆனதே!
தீந்தமிழ் மொழியில் இல்லையென் றானதே!
தேசிய கீதமும் சிங்களமென் றானதே!
மன்றிடும் ஆட்சியில் மயக்குதே நாளுமே!

தேசியக் கொடியிலும் சிறுகோடு தமிழர்க்கே!
தேசியக் கொடியிலும் சிறுகோடு இஸ்லாமே!
தேசிய கீதத்தை தமிழிலா தாக்கினர்!
சிங்கள வேகத்தை செயலிலே காட்டினர்!

சுதந்திர இலங்கையில் இருந்ததும் போனது!
சுதந்திர இலங்கையில் இருந்தமிழ் அழிந்தது!
சுதந்திர இலங்கையில் தீவிரம் மலிந்தது!
தேசிய கீதமும் தமிழ்மொழி இழந்தது!

அகவைப்பா: 05

# 1951: ஜீ.ஜீ அவர்களும் தேசியக் கொடியும்

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

வைகறை வானம் கண்டேன்!
மதியொளி வெளிச்சம் கண்டேன்!
கைகளில் அன்னை ஏந்தக்
காண்நிலாச் சோறு கண்டேன்!
தைகரும் பான திங்கள்
தங்கமாம் அகவை ஐந்தில்
மைகரத் தாணி ஏற்று
மணிப்பள்ளி இயலைக் கண்டேன்!

அன்றாடம் உழைத்து உண்ணும்
அருந்தந்தை கரத்தில் நண்ணும்
ஒன்றாக உணவைக் காணும்
உருவமாய் அன்னை நின்றாள்!
என்றாலும் அவளின் ஊற்று
இன்தமிழ்த் தேவா ரங்கள்
மன்றாகத் தந்தாள்! ஆங்கே
வளர்கதை வளாகம் என்பேன்!

ஐந்துபேர் பெற்றாள்! ஆயின்
அண்ணனும் நானும் தங்கை
வந்திட மூவ ரானோம்
மற்றவர் பிரிந்தார்! அன்னை
தந்தவோர் உதிரத் தோடும்
தமிழதே ஓடக் கண்டேன்!
சந்ததம் கல்வி என்ற
சார்புலப் பள்ளி கண்டேன்!

சைவப்பி ரகாச சாலை
சங்கமத் தெழுத்தின் ஆணி
கைவரப் பெற்ற தாலே
கல்வியின் தொட்டில் ஆனேன்!
மைவதம் மணிப்பொன் சித்ரம்
மரகதம் என்கக் கல்வி
தைவரப் பரதம் போலே
தமிழொடும் வாழ்ந்தேன் அம்மா!

கல்வியிற் பழுத்த சாதி
கவின்கலை இலக்கி யங்கள்
வல்லமை பழுதென் றில்லா
வரலாறாய் நின்றும் என்ன?
அல்லதாய் அரசின் போக்கு
அகப்பட லாதல் ஆச்சு!
நல்லதோர் சுதந்தி ரத்துள்
நாசமும் விழுந்த தம்மா!

தேசியக் கொடியை ஜீ.ஜீ
சிறுகோடு ஒன்றில் மட்டும்
வாசநற் தமிழர்க் காக
வாங்கிப்பின் யாழில் வந்து
பேசுநற் கூட்டம் வைத்துப்
பெற்றதோர் கைதட் டலால்
ஆசிகள் என்று ஆர்த்து
ஆதரி தமிழா என்றார்!

பெரும்பான்மை என்ற ஒன்றிற்
பேணிய சட்டம் எல்லாம்
இருந்தமிழ் தன்னைச் சாய்க்கும்
இனமென அரசாங் கத்தால்
கருந்திரள் மேக மாக
காட்டிய தல்லால் வேறு
பெரும்மன தொன்றாய்க் காட்டப்
பேரினம் தோற்றே போனார்!

சுதந்திரங் கிடைத்த பின்னாற்
சென்றதோர் வருடம் ஐந்தில்
உதைத்திட வாக்கு இன்றி
உயர்மலைத் தமிழர் நின்றார்!
விதந்தரு தமிழர் செய்த
மேட்டிமைக் காக மட்டும்
பதிந்தொரு கோடு மட்டும்
பார்க்கொடி வைத்தார் தானே!

அகவைப்பா: 06

# 1952: பிதா சேனநாயக்கா மறைவு!

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்-2)

ஆழக் கடலில் ஆறாகி
அலைக்கும் போதில் விழியரும்பி
ஈழம் இலங்கை எனும்சாயல்
என்தாய் இட்டாள்! இன்தமிழில்
ஆழப் புனல்மண் அலைக்கும்பா
அள்ளித் தந்தாள்! அருவயலின்
சோழக் காற்றுச் சுழன்றடிக்கும்
தென்றற் காற்றில் நான்தவழ்ந்தேன்!

செல்லை யாவும் வைத்திலிங்கச்
சீமான் வாத்தி யாராகச்
சொல்லிற் பழுத்த அமுதம்போல்
தெளிந்தார் பல்லா சிரியர்கள்!
முல்லை யொளிரும் திருமண்ணில்
முல்லை போலும் நான்சிரித்தேன்!
கல்லிற் சிலையே ஆனதுபோல்
கல்விச் சிலையாய் யான்மலர்ந்தேன்!

சின்னக் கன்று துள்ளிவரும்
சிரிக்கும் வசந்தம் அள்ளிவரும்
கன்னற் தமிழின் கவியூறுங்
கந்தன் விழாவும் கவின்பெருகும்!
அன்னை கரத்துட் பிடியிறுகி
ஆடி ஆடி நடைநடந்து
என்னை இழந்தேன் ஒருகாலம்
இதுவே குழந்தை எழிற்காலம்!

ஆறிற் புதைந்த அரசியலாய்
ஆன எதுவோ? எனவறியக்
கூறுஞ் சுவடுக் கணினியிலே
சென்றேன்! எதுவோ? எனப்பார்த்தேன்!
சீறுஞ் சேன நாயக்கா
சொல்லார் இலங்கைப் பிரதமராய்ப்
பேறு பெற்றார் இவ்வாண்டு
பிரிந்தார் வாழ்வை எனக்கண்டேன்!

சேன நாயக் காவென்னுஞ்
சிறந்தார், பொறுமை தன்னடக்கம்
ஆன ஒருவர் எனப்புகழ்ந்த
ஆங்கி லேயர் சோல்பரியார்
வானஞ் செறிந்த சொல்லாலே
வழங்கித் துயரைப் பகிர்ந்தாரென்
ஞானஞ் சேன நாயக்கார்
திறமைக் கேதான் சொல்லாமே!

குதிரை மீது ஏறியவர்
குலவும் நடையில் வீழ்ந்தவர்தான்
அதிரும் மக்கள் கதறியழும்
அவலப் பிரிவு கண்டாரே!
புதிரும் பச்சை விவசாயப்
பேரார் குடியில் வந்தவர்தாம்
முதிருஞ், சிறகார் சிங்களரின்
முதிய பிதாவென் றானவரே!

**News Source: The history of Ceylon in Google search-1952**

அகவைப்பா: 07

## 1953: என்ஏழும் இலங்கை அரசியலும்!

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்-3)



தெங்குகுளம் நீர்நிரம்புஞ் சேர்ந்தகழி மிதமிஞ்சுந்
தொடுஞ்சால் வெள்ளம்
பொங்கிவரும் புரண்டுவரும் புள்ளிமீன்கள் துள்ளிவரும்
பெருஞ்சார் மண்ணின்
தங்கமழை பொழிந்துவருந் தாயாரின் கைகோர்த்துத்
தகர்த்த வெள்ளம்
முங்கிவிளை யாடியதும் மெய்யிழுக்கப் பிடித்ததுவும்
மீளு மாமோ!

பாடளந்த சுதந்திரத்தின் பனிகாய முன்னாகப்
பரந்த ஆட்சி
வீடழிய! டட்லியென்ற பிரதமரும் பதவிவிட்டு
விலகிப் போனார்
காடழியப் பட்டதுபோல் ஹர்த்தாலிற் கலங்கிடவே
கருதி நாடு
கோடுமொரு பிரதமராய்க் கொத்தலாவ லையென்ற
கோமான் வந்தார்


தீவகத்தின் மிகப்பெரிய தீங்கல்விச் சாலையதின்
தொளிரும் மாடி
மேவுபுகழ் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பெருந்தருவாம்
மலைவேம் பொன்றை
ஆவலொடும் நாட்டுவித்து அரங்கேற்றிக் கொத்தலாவல
அழகு சேர்த்த
தேவபுர நாளோடுஞ் சிந்தான என்கண்ணிற்
தேயா தம்மா!

## Hartal 1953:
## From Wikipedia, the free encyclopedia

Hartal 1953. Date 12–13 August 1953. Participants Sri Lankan public led by Sri Lankan leftist parties. Outcome Portions of the country placed under Emergency Regulations. Dudley Senanayake resigned as Prime Minister. John Kotelawala elected as Prime Minister. The rice subsidy was partially restored

The Hartal 1953 was a country-wide demonstration of civil disobedience and strike, commonly known as a hartal, held in Ceylon (now Sri Lanka) on 12 August 1953. It was organized to protest of the policies and actions of the incumbent United National Party government. It was the first mass political action in Ceylon and the first major social crisis after independence.[1] This event is of historical significance because it was the first people's struggle against an elected government in the country.


Led by the Lanka Sama Samaja Party (LSSP) and other leftist parties who called on the public to resist the government and demonstrate civil disobedience and strikes, the hartal was primarily a protest of the labouring class, and as such there were no exclusions based upon caste, ethnicity or religion.[2] The protests saw much sabotage and destruction to public infrastructure, as a means of frightening and halting the government. This occurred mainly in the Western, Southern and Sabaragamuwa Provinces as well as other minor protests around the rest of the island.[3] The demonstrations lasted only a day with at least 10 people killed, resulting in the resignation of the Prime Minister



அகவைப்பா: 08

# 1954: பிரபா உதித்த ஆண்டு

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்-4)



இந்த ஆண்டொரு எழிலிடுஞ் சரித்திரம்
என்கவே யிருப்பாகி
வந்த பொன்னெழுத் தாலொடும் மலர்ந்ததாய்
வண்ணமும் உரித்தாகி
எந்த நாளிலும் இயம்புதற் கானநாள்
என்கவே சிறப்பாகிச்
செந்த மிழ்ழொடுஞ் செப்பிட உதித்திடச்
சிறந்தது இவ்வாண்டே!

செல்வ நாயகத் தந்தையின் பேச்சினைத்
தேர்ந்திடாச் சிங்களத்தின்
ஒல்லு வாரொடும் இயம்பிய வொப்புதல்
எல்லமுங் கிழித்தெறிந்து
மல்லு வார்என வரைவுகள் பொடிபட
வந்ததோர் காதையெலாஞ்
சொல்லு மாறிய செந்தழ லானபின்
செண்பகன் பிறந்தானே!

சாத்வி கத்தொடுஞ் சமரசத் தும்பல
சந்திகள் கடந்தபின்பும்
ஆத்தி ரத்தொடும் ஆனதாம் சிங்கள
அரசியல் வன்முறைகள்
கூத்து கள்ளாகிக் கொழுத்ததும் பற்பல
கெஞ்சலுக் கிடையிலேயுஞ்
சாத்தி ரம்போலுந் தீர்வினை யாவதுஞ்
சரிதர மறுக்கையிலே..!

பின்னு ளார்தமின் போரென வதைபடப்
போகலாம் என்றவர்கள்
சன்ன மாயெழுந் துரைத்தனர் அக்கணம்
சாற்றிய தெல்லாமுங்
கன்ன வார்ச்செவி விட்டுவிட் டரசியல்
கண்டவர் தமிழோடுஞ்
சொன்ன வாறிலாச் சீண்டுதல் செய்தனர்
செத்தது தமிழ்நிலமே!

இந்த வோர்நிலை எய்தலாம் என்றவர்
இனப்புலம் கிடக்கையிலே
வெந்த வார்ப்புலம் மீதொடும் தோன்றிய
வித்தகப் பிரபாதன்
சிந்த னைத்துளி யானதுஞ் செருக்களம்
செப்பிய தும்மறிவீர்!
அந்த மாதுளன் அவதரித் திட்டதோர்
அணிகலன் இவ்வாண்டே!

சிங்க ளத்தொடுஞ் சேர்ந்தநல் இதயமார்
சீரிய அறிஞருடன்
வெங்க ளம்விட விரிவுரை யாக்கிய
வித்துவம் பலதுமுண்டு!
துங்க மாநிலம் தமிழொடுஞ் சிந்திய
தீர்வுகள் ஏதுமில்லா
அங்க வீனராய் ஆனது தமிழினம்
அடிமையென் றானதுவே!

தீர்வு ஆக்கிடத் தேசமும் ஏற்றிட
திருப்புமு னையினோடும்
ஆர்வம் முற்றிய அன்பினில் மிதந்திடும்
அரசியல் அகத்தினோடும்
போரென் றானதோர் பேய்வருங் காட்டினில்
போவது ஏன்எதற்கு?
சார்வு ஈன்றதோர் சந்தமும் பிரபனின்
சந்தர்ப்பம் விட்டதுவே!

## அகவைப்பா: 09

# 1955: ஒன்பதிற் றெறிந்த பகை!

(பாவடிவம்: எழுசீர் விருத்தம்-1)

சுதந்திரம் கிடைக்கச் சிற்பியாய்த் தமிழர்
சிங்களத் தோடுநின் றுழைத்தும்
மதத்தன வாறு மாறிய நோக்கில்
மன்றிலே அரசிய லாளர்
சிதைத்தனர்! கொள்ளுந் தேர்தலில் வெல்லச்
சிங்களம் மட்டுமே சட்டம்
விதைத்தனர்! அதனால் வேற்றுமை யாக
விழுந்தனர் தமிழரே வேறாய்!

தேர்தலை நோக்கித் திரண்டிடும் போதில்
சிங்களம் தமிழென இரண்டுங்
கோதரும் மொழியாய் கொள்ளுவேன் என்ற
கொத்தலா வலை,பறை சாற்ற
ஈதொரு சாட்டாய் எடுத்தவர் பண்டா
ஒருமொழி சிங்களம் என்றே
ஊதியே விட்டார்! இனப்பகை ஒன்றில்
இலங்கையை எரியவே செய்தார்!

இனப்படு கொலையும் இரத்தவா றுஞ்செய்
இலங்கையை வதைத்தவா றான
சனக்கொலை அனைத்தும் சம்பவம் பலதுஞ்
சரித்திரம் மானபல் லனைத்தும்
முனைப்பொடுந் தொடர மூட்டிய நெருப்பே
முதல்மொழி சிங்களம் என்ற
நினைப்பிலே எரியும் பேரினத் துள்ளே
நிறுத்திய வெறியது வாகும்!

கொத்தலா வலையார் கொடுத்தமுன் னோட்டம்
கொள்தமிழ் மொழியையுஞ் சேர்த்து
அத்தனை ஆட்சி அடுக்களை யாருக்கும்
அப்பிட வில்லையே யானால்
உத்தமர் என்ற ஒருவராய்க் காட்ட
உரைத்துளார் ஆயினும் பண்டா
தைத்திடப் பட்ட தகத்துளார் ஆகித்
தனிமொழிச் சிங்களம் என்றார்!

தமிழரின் உணர்ச்சி தமிழர்தம் வெறுப்பு
தந்ததும் இந்தவோர் ஆண்டே!
உமிழென வைத்து ஒடுக்கிய அரசில்
இதுபழி என்றவர் செல்வா!
அமிழ்தெனும் தமிழை அழிக்கிறா ரென்று
ஆனதும் இந்தவோர் ஆண்டே!
கமழ்திரு இலங்கை கனன்றுபோ கவே
கண்டது பேரினக் களமே!

என்னுள நோக்கில் இந்தவோர் ஆண்டின்
இயற்றிய தெல்லமும் வல்ல
முன்னுளார் வைக்கும் முழுவதும் பற்றி
முற்றிட எரிந்துமே நிற்குஞ்
சன்னமாய்ச் சிங்க ளத்தொடு மாகுஞ்
சம்பவ மனைத்திலும் ஆட்சிப்
பின்னமாய்க் கொள்ளும் பெருந்தமிழ் அழிப்பே
பிரித்தது இலங்கையைப் பாரில்!

**Google News: The history of Ceylon-1955-Asian Times**

## அகவைப்பா: 10

# 1956:

# பத்திலே கண்டேன் பதைத்த அரசியல்!

(பாவடிவம்: எண்சீர் விருத்தம்-1)



சுதந்திரத்தை விதைத்துவிடச் சிறப்பு ஆக்கிச்
சிங்களத்தைச் சோதரராய் விதந்து ஆக்கி
நிதந்தமிழர் ஒற்றுமையை நிகழ்த்திக் காட்டி
நீள்நிலத்திற் தேசமதை நிறுத்திக் காட்டிப்
பதந்திருவாய் வழிகாட்டிப் பங்கும் ஆற்றிப்
பண்பாட்டு இனமென்னும் பதிவை ஏற்றிச்
சுதந்திரத்தைச் செய்தவரே தமிழர்! ஆயின்
சீர்கெட்டுப் போனதடா இலங்கை நாடு!

ஆயிரத்தித் தொழாயிரத்தி ஐம்பத் தாறு
அவலத்தை விதைத்துவிட்ட இரத்த ஆறு
தாயரொடுந் தந்தையொடுந் தமிழர் செத்த
சரிதைக்குத் தொட்டிலெனத் தகர்த்த வாறு
நேயமிலா ஆட்சியென்ற நிகழ்வைக் காட்டி
நெறியாட்சி விலகியெரி நெருப்பில் வீழ்த்தி
தாயிலங்கை எழில்நாட்டைத் தறித்துவிட்ட
தமிழவதை ஆரம்பம் தளைத்த ஆண்டாம்!

மொழியொன்று ஆயிடிலே நாடி ரண்டாம்!
மொழியிரண்டு ஆளுமெனின் நாடே ஒன்றாம்!
சுழிபோட்டுப் பல்லோருஞ் சொன்ன போதுஞ்
சிங்களத்துத் தீவிரத்தார் செவியி லேறி
வழிகாட்ட வில்லையது வன்மம் பாய்ச்சி
வன்முறைக்குத் தொட்டிலென வார்த்த போது
அழிவான அரசியலில் ஆனாப் போட்டு
ஆக்கியதோர் நெருப்பாண்டு ஐம்பத் தாறே!

சிங்களத்தார் மகாசங்கச் சிற்பி பண்டா
சிறகாரும் புத்தரகித் தேரர் கூட்டும்
பொங்கிவரும் ஜெயவர்த்த னேயென் ஜேயார்
கே.எம்.பி இராஜரத்னா என்கப் பல்லோர்
அங்கமுள அரசியலில் ஆகும் புத்த
அணியினிலே தீவிரத்தின் அலகாய் நின்றார்!
சிங்களமே கருமமாழி என்னுஞ் சட்டம்
சிகப்பாகி வந்ததுவே சீறும் பாம்பாய்!

சூன்மாதம் ஐந்தான ஐம்பத் தாறில்
சிங்களமே அரசமொழி யாகுஞ் சட்டம்
தேன்போல இருந்தசிலோன் தேச நாட்டில்
தீயாக வந்ததந்தத் தினமே கொண்டு
கூன்கண்ட தமிழ்மொழியாக் கோரும் வையக்
குறிக்கோளைக் காட்டிவிடக் கொழும்பு மன்றந்
தான்சென்று எதிர்ப்பாக்கத் தமிழர் சார்ந்த
தமிழரசுக் கட்சியினர் திடலிற் சேர்ந்தார்!

காலிமுகத் திடல்மூலை தன்னிற் கூடி
காணிரண்டு நூறான தமிழ மாந்தர்

கோலுகின்ற கூட்டத்தைக் குழப்ப வென்றே
கொடுங்காடை ஆயிரம்பேர் குவிந்து தாக்கி
வேலியெனுந் தமிழர்தம் விதமார் கூட்டை
வீழ்த்தவே கல்லெறிந்து வீழ்த்த ரத்தங்
கோலுகின்ற முகஞ்சட்டைக் கிழிய லோடு
கூடாரும் நாடாளுங் கோடு சென்றார்!

நையாண்டி செய்தாரே நாட்டு ஆட்சி
நாயகராம் பண்டாவும் நக்கல் பேச
மாயாண்டிக் கூட்டமெனத் தமிழர் மீது
மரணத்தின் வன்முறைகள் விழுந்த தாமே!
பேயாண்டி போலாகச் சட்டம் வைத்துப்
பொலிகொண்டு பாராளும் மன்றந் தன்னிற்
காயாண்டு சிங்களமே கரும மென்ற
கனங்கொண்ட மொழிச்சட்டங் கனல விட்டார்!

ஆட்சியரே பார்த்திருக்க ஆங்கே யெங்கும்
அரிவாளுங் கொலைவாளும் அலைந்த தாமே!
காட்சியது கிழக்காகுங் கல்லோ யாவில்
கலைந்தோடத் தமிழரெலாங் கதறச் செத்தார்!
நீட்டோலைச் சுதந்திரத்தின் நிழலே காய
நெருப்பிட்டார்! சாவிட்டார்! நிலத்தைப் பறித்தார்!
கூட்டாறு தமிழரிடும் இரத்தம் கொண்டு
குவியலையாய் ஓடிவரக் குலைத்தார் நாடே!


**Anti-Tamil pogroms and killings 5th June 1956:Tamil Parliamentarians attacked by Sinhala mobs, 150 Tamils killed -** 1956 On 5th June 1956, the date the 'Sinhala Only' Bill was introduced by (Prime Minister) Bandaranaike in the House (of Parliament), as an act of protest, Chelvanayakam, the leader of the Federal Party, led a party of 300 Tamil volunteers and staged a sit down Satyagraha (peaceful protest) of the kind popularised by Mahatma Gandhi in the days of the Indian freedom struggle. **06 June 1956:** The "Sinhala only" official language Bill was introduced in the House of Representatives by Prime Minister Bandaranaike. At Galle Face Green overlooking the Parliament building, over 200 Tamil volunteers led by 12 Tamil Members of Parliament were staging a non-violent protest (Satyagraha) was attacked by a Sinhalese mob and stoned and assaulted non-violence demonstrators. Rioting spreads in the city with Tamils being manhandled in buses, trains and on the streets. Among the victims were two Tamil lawyers, A.C.Nadaraja and S.Sharvananda (later Chief Juseice of Sri Lanka –1986). They are pulled out of the car in which they were travelling and attacked by a mob. Indian Tamil shops are attacked and looted. More serious disturbances occur in the Eastern Province, in Batticaloa, Trincomalee and in Gal Oya valley, where a large number of deaths are reported. In 10 days of sporadic rioting, an estimated 150 persons are killed, the majority of the victims being Tamils. This marks the beginning of the phase in the island's history when Tamils are subject to physical violence **-Google News : Anti-Tamil pogroms killings of 1956 and**

**V.Navaratnam's Book: The Fall and Rise Of The Tamil Nation.-Chapter-7**

அகவைப்பா: 11

# 1957: கறுப்பு சுதந்திரதினமாகக் கவன அழைப்பு!

(பாவடிவம்: எண்சீர் விருத்தம்-2)



அரசியலின் அவலங்கள் அடிக்கடியே தொடரும்
ஆபத்து நிறைந்தஇன அழிப்பென்றே புகலுந்
தரவுகளைக் கேட்டறிந்து தனையாய்வு செய்யத்
தமிழ்ஏடு படிக்கவெனத் தாகமது கொண்டேன்!
வரவாகுஞ் செய்திகளை வாசித்து அறியும்
வழக்கமொன் றெனக்காகி வந்திடவே என்றன்
சிரசாளுங் குளத்திலலை தெறிப்புமிக வாகிச்
சிந்தையது கலங்கியதுந் தெளிந்ததுவுங் கண்டேன்!

தேசியத்துக் கொடியதனைத் தீட்டியதாற் சிங்கச்
சேனையரின் திட்டமிட்ட செயலதுவாய் எண்ணி
ஊசிமுனை நெஞ்சமொடு நிந்தனைகள் கொண்டே
உரைகாட்டுந் தமிழ்த்தலைவர் ஊடாடும் போதில்
தேசகரு மம்மொழியாய் சிங்களத்தை மட்டுஞ்
செய்ததொரு காரணத்தாற் சிந்தைமிக நொந்து
பேசுநடை யாத்திரையைத் திருமலையை நோக்கிப்
புறப்பட்டார்! மாநாடும் பிரகடன முமிட்டார்!

தமிழர்தம் தாயகத்தைச் சமாதான முடனே
தந்துவிடக் கோருமிந்த மாநாடு சுவறிச்
சுமையாகக் கருதியவர் பிரதமராம் பண்டா
செல்வாவோ டிசையவழி சென்றுகதை யுவந்த
அமைவான ஒப்பந்தம் அலசவரும் போதில்
ஆபத்து சிங்களத்தை அழித்துவிட்டா ரெனவே
தமையாளச் சேயாருந் தண்நகராம் கண்டி
தனைநோக்கி நடையாத்ரை தானுமது கொண்டார்!

கம்பகாவின் ஊடேதான் கனன்றபெரு யாத்ரை
கடுப்பாகி யரசபடை தடுத்திடவே வெந்த
செம்மாடைப் பிக்குவெலாம் சேர்நெருப்பு ஆகிச்
சீற்றமுற்றார்! பண்டாவுஞ் செல்வாவும் எழுதி
அம்புலத்தில் வெளிவந்த அமைதிதருந் தீர்வு
அழிந்தகதை யானதுவே! அணிநாடா மிலங்கை
வெம்புலத்தில் எரியுமொரு வீழ்ந்தநா டென்கும்
வேதனையில் நீளுலகம் மிதக்கிறதே இன்றும்!


ஆயிரத்தித் தொழாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு
ஆனமுஸ்லீம் கலவரத்தில் அடைந்துசிறை காண
வாயிலடை பட்டதொரு வரலாற்றில் இலண்டன்
வரைசென்ற இராமநாதன் வாதிட்டு வென்று
தாயினொரு பிள்ளையென்று சிங்களத்தை நம்பித்
தந்ததொரு ஒற்றுமையாற் தான்சிறையி லிருந்து
ஆயசேன நாயக்கா ஆனவரும் சிங்க
ஆக்ரோச மானவரும் அடைந்ததடை வென்றார்!

கலைமற்றும் மூதாதைக் கைவினைகள் புகட்டிக்
கல்வியிலாச் சிங்களர்க்குக் கருதுவகை யாக்கிப்
தொலைநோக்கைப் புகட்டியதே சேர்அருணா சலமும்
தேர்ந்ததொரு தமிழார்வார் குமாரசாமி யாவார்!
நிலைதந்த அவர்நன்றி நிசத்தையெலாம் மறந்து
நெருப்புவெறி தமிழரிடம் நிறுத்திவைத்த ஆட்சி
வலையிட்ட சிங்களத்தின் வஞ்சத்திற் தமிழர்
மனம்நோக அடிபட்டார்! மனையிழந்து மாண்டார்

**The TimeLine-The Crisis of Ceylon 1957:**

The BC Pact was signed to protect Tamil interests with a regional autonomy package. Brokered between Sinhala Prime Minister Bandaranaike and the Tamil leader Chelvanayakam, the pact was broken under pressure from Sinhalese ultranationalist extremists (who themselves were, encouraged by Buddhist fundamentalist clergy).

**Arunasalam and Ramanathan Story: The Fall and Rise of Tamil Nation-Page 109.**



அகவைப்பா: 12

# 1958: அழியாதவடு ஐம்பத்தெட்டு!

(பாவடிவம்: கலித்தாழிசை)

ஐம்பத்தி யெட்டு அருந்தமிழர் ஆயிரமாய்க்
கும்பிடவுங் கொன்ற கொடூரங் குவலயத்தில்
அம்பிடப் பட்டதொரு ஆட்சி இரத்தவெறில்
எம்பிப் பரந்த இனவழிப்பு! என்சொல்வேன்!
இன்னும் எரிகிறதே என்நாடு என்சொல்வேன்!

வவுனியாவி லங்கைத் தமிழரசுக் கட்சி
அவனியை ஈர்க்கும் அளப்பெருங் கூட்டம்
கவனத்தை ஈர்த்துக் கருத்தைக் கவர்ந்த
சிவந்தநாள் ஆகவே சிங்களர் ஆக்கினர்!
சேருவார் கூட்டத்தைச் சேரவே தாக்கினர்!

தமிழரைத் தாக்குந் தணலொடுஞ் செய்தி
சுமையார் கொழும்பிற் சுழன்றே யடிக்க
அமிழும் இலங்கையாய் ஆகும் இரத்தக்
குமிழுவாய் கொட்டக் குருதியா றானதே!
கொத்தாய்க் கடைகள் கொழுத்திடப் போனதே!

கடைகள் எரிந்தன! கண்டகண்ட வாறு
உடைகள் பார்த்து இழுக்கத் தமிழர்
மடைகள் எனவே மடிந்தனர்! உடைமை
படையாய் நெருப்பிற் பறக்கவே சாய்த்தனர்!
பன்னிரண் டாயிரம்

பாணந்து றையார்ப் படித்தபெண் ணாளையே
காணவே வெட்டிடக் கண்டனள் சாவென
வாணமே போலே வடித்திடு செய்தியால்
பூணொடும் கோவிலில் போட்டு எரித்தனர்!
பெருங்காடை என்கப் பொலியப் படர்ந்தனர்!

சொல்லில் அடங்காச் சிதறுதேங் காயென்க
நல்ல தமிழர்களை நாசக் குழியாக்கி
வல்ல அவர்நிலத்தை வார்த்த பறிப்பிலே
அல்லையும் கந்தளாய் அள்ளுண்டு போனதே!
அகில இலங்கையும் ஆனதே கொலைக்களம்!

மேயிரு பத்திரண்டு மூட்டிய தீயினுள்
காய்நகர்த் திட்ட கலவரம் நான்குநாள்
போய்விட வைத்தார்! புருடா கொடுத்துமே
சாயவே வைத்த சதுர்வினை யாக்கினர்
சரித மிதுவுஞ் சாவிலா தாக்கினர்!

அரைநூற்றாண் டும்போய் அழிந்தன வாயின்
புரைகொண்ட தேசப் பொரிகேடு இன்னுங்
கரையிலாச் சாவுங் கதறலுங் கேட்கும்
வரையாட்சி இன்றும் வருகிறது அம்மாவே!
வன்முறையும் சாவும் வருகிறது அம்மாவே!

**1-From: Anti-Tamil Pogroms and Killings**
**22 May 1958 :Anti-Tamil riots break out in the island's history.**

At Vavuniya (160 miles north of Colombo), murders four of them, assaults and robs the rest. in Polonnaruwa and Hingurakgoda, where Tamils are cut down with home-made swords.

அகவைப்பா: 13

# 1959: வகுத்த குழியில் வீழ்ந்த பண்டா!

(பாவடிவம்: கலித்துறை)

மொழியி லூன்றிய வேணவாச் சிங்கள விகற்பங்
குழிப றித்ததாற் திருமலை யிற்தமிழ்க் கூட்டம்
வழியெ டுத்தனர்! வன்முறை இன்றியே காணும்
பழியி லாத்தமிழ் மாநிலஞ் செய்குவோம் என்றார்!

சிங்க ளச்சிறீ யோடுவா கனத்தொடுஞ் சேர
துங்க மாநகர் தீட்டிய சட்டத்தாற் துவளப்
பங்க மாயுணர் தமிழரும் மேலுமாய்ப் பதைத்தார்!
அங்க வீனராய் ஆக்கிடும் ஆட்சியென் றறைந்தார்!

இப்ப டிப்பல இடைச்சலாற் தமிழரின் வாழ்விற்
முப்பொ முந்தறி கெட்டிட நின்றிடும் முழுக்கால்
எப்ப டித்தொட ரின்னலை ஏற்பரோ வென்றுஞ்
செப்ப டித்திடுங் கலவரந் தொடரவோ என்றார்!

இந்நி லையென இன்தமி ழாளரும் இயம்பச்
சந்த தங்கொளுஞ் சிங்கள வாணருஞ் சிலம்ப
அந்த ரத்தொடும் பண்டார நாயகா அழுந்த
வெந்த வாறனை வீடென ஆட்சியென் றாச்சே!

ஆட்சி யென்றடை கின்றவோர் ஆக்கலில் புத்த
மாட்சி யென்னடை மாட்டிய நாயகா மனதில்
ஊட்டிச் சிங்கள மோம்பிய உட்புதர் வெறியால்
கூட்ட மாகிய அவரொடுங் கூற்றமே ஆச்சே!

சிங்க ளர்மகா சங்கமென் றறைந்தவர் சுவடுஞ்
சிங்க ளத்தொடும் மட்டுமே ஆட்சியென் றறைந்தும்
சிங்க ளம்மதம் பௌத்தமே என்றவர் சுவடுஞ்
சிங்க ளப்புக லாகியும் போனரே பண்டா!

புத்த காவியைப் போட்டவர் சோமரா மதேரர்
நித்தம் புத்தர கித்தர தேரரும் நேர்த்தி
மெத்தக் கண்டதோர் திட்டமே பண்டவின் சாய்ப்பாய்
சித்தம் கண்டதே நீதியை வாரிடும் நெஞ்சம்!

புத்த வாதமே பொங்குரு வானதாய்ப் பொலியக்
குத்து வெட்டொடுங் குரோதமுங் கூடிய குழியும்
சித்தந் தாங்கிய தேசமா வாட்சியின் ஈர்ப்புஞ்
சத்தம் ஆகிடப் பண்டார நாயகர் சரிந்தார்!

COURTESY: Asian Times SRI LANKA: THE UNTOLD STORY
Chapter 17: Assassination of Bandaranaike By K T Rajasingham

....................As the factional struggle within the SLFP grew, on the morning of September 25, 1959, Talduwe Somarama Thero called on Bandaranaike by appointment at his residence at Rosemead Place. Just when Bandaranaike was in the act of paying obeisance to the Buddhist monk, Somarama whipped out a revolver and shot at the Prime Minister, hitting him in the stomach at point blank range. It was later revealed that the disillusioned monk, the assassin, was manipulated by former supporters of the Prime Minister. On September 26, Bandaranaike succumbed to the gunshot injuries.

Earlier, C P De Silva, the leader of the House, was taken ill on August 25, 1959, and was sent to England for medical treatment. He fell seriously ill after consuming a glass of milk in the cabinet room. It was alleged that the milk contained some poisonous substance and it was rumored that it had been meant for Bandaranaike. As at the time, immediately after the demise of Bandaranaike, De Silva had not recovered fully and W Dahanayake, the acting Leader of the House, was invited to form a Caretaker Government.................

On November 26, seven people were charged in the Magistrate's Court of Colombo. Charges were filed against: (1) Mapitigama Buddhrakkita Thera (2) Hemachandra Piyasena Jayawardena (3) Pallihakarage Anura se Silva (4) Talduwe Somarama Thera (5) Weerasooriya Arachchige Newton Perera (6) Vimala Wijewardene and Amerasinghe Arachchige Carolis Amerasinghe.

On a charge of conspiracy to murder Bandaranaike, and the fourth person abovenamed, was alone additionally charged with committing murder. The seventh person, Amerasinghe Arachchige Carolis Amerasinghe, not long after the filing of the charge, received conditional pardon in terms of section 283 of the Criminal Procedure Code of Ceylon, and was thereafter called both at the inquiry and the trial as witness for the prosecution in the case against the other persons.

At the end of the Magisterial inquiry, which lasted for nearly eight months, Vimala Wijewardene, the sixth accused, was discharged on July 15, 1960. At the trial held in the Supreme Court before Justice T S Fernando, Puisne Justice and an English-speaking jury, the third and fifth persons above named were acquitted with the jury returning an unanimous verdict in favor of the former and a 5-2 divided verdict in favor of the latter. The first, second and fourth persons above named were found guilty by the unanimous verdict of the jury and sentence of death was pronounced on each of them......

அகவைப்பா: 14

# 1960: வேலணைத் திருக்குறள் மாநாடு! ஐம்பத்தெட்டு அழவைத்த அமிரின் கண்ணீர்

(பாவடிவம்: குறள்வெண்பா)

மனத்தி னதிர்வுத் திரையிலே அன்று
இனத்துநாள் ஆனதே என்க!

திருக்குறள் மாநாடு வேலணை தன்னில்
உருப்பெற ஓடினேன் ஆங்கு!

தென்மாட வீதிப் பெருங்குள அம்மனின்
மன்றதிற் பூத்தது மன்று!

பள்ளிக்குக் கள்ளம் பகரவே அன்னையின்
உள்ளத்திற் பொய்சொன்னேன் ஓடி!

திருக்குறள் வாரும் அரசியற் பேச்சே
கருப்பொரு ளானது அன்று!

ஐம்பத்தி யெட்டின் அனர்த்த இரத்தமெலாம்
கும்பத்தில் இட்டதே கோலம்!

மாதரார் பெண்கள் மழலையர் தந்தையார்
சோதரர் துடித்த தினம்!

சுதந்திர முற்றதே சத்திற் படிந்த
அதிரும் சரித்திரம் ஈது!

“அல்லற்பட்டு ஆற்றா தழுதகண் ணீரன்றோ
செல்வத்தைத் தேய்க்கும் படை!”

வள்ளுவன் நோவின் வசனத்தில் வெம்பியே
உள்ளம் வெடித்தழுதார் வேக!

மார்பை அறுத்து, மடிசுமந்த அன்னையைச்
சாப்படச் செய்ததிந்தச் சாதி!

காலப் பெருஞ்சுழியிற் கண்ணீரி றைத்தவடு
சூழும் எனவுரைத்தார் சொல்!

திருக்குறள் மாநாடு விளம்ப அமிரின்
கருப்பொரு ளானதே கண்!

ஆயிர மாயிரம் ஆண்டுகள் போயினும்
தாயினமாய் நிற்கும் தமிழ்!

"ஆற்றங் கரையில் அரசெறிய வீற்றிருந்த
வாழ்வும் ஒருநாட் கெடும்!"

ஆன்ற கருத்தோடு அள்ளினதே மாநாடு
சான்றாய்த் திருக்குறளைச் சாற்றி!

பள்ளி முடிந்து பரந்துவெளி தேடிவந்து
அள்ளி அணைத்தளேயென் தாய்!

அகவைப்பா: 15

## 1961: சத்தியாக்கிரகமும் சப்பாத்துக் கால்களும்!

(பாவடிவம்: நேரிசை வெண்பா)

காலம் எழுதிக் கனிநாடு கெட்டழிந்து
கோலம் பழுதாகிக் கொண்டிலங்கை-ஆலம்போற்
சட்டங்கள் இட்டுச் சரிதமொழி சிங்களமாய்த்
திட்டம் புரிந்ததுமோர் தீ!

இந்தப் படியிருந்து ஏகத் தரசியலில்
முந்தத் தமிழழிக்கும் மோகத்தால்-சந்ததமும்
முங்கி வளர்மூட்டம் மூட்டி யினமழிக்கும்
அங்கங்க ளானதுவாம் ஆட்சி!

ஐம்பத்தி யாறில் அரச மொழியென்கச்
சிம்மம் படைத்த செருநாளில்-தம்முணர்வின்
சத்தியத்தைச் சொன்ன சரமார் தமிழர்களை
மொத்தியதே வன்மை முகம்!

நூற்றைம் பதுவாய் நிசத்தமிழர் தாக்குண்டு
போற்றும் உயிர்துறந்து போனதுவுஞ்-சாற்றுமொரு

ஐம்பத்து எட்டில் அரிவாளும் பொல்லுகளும்
கும்பிடக் கொன்றதுவுங் கேடு!

மன்னிலங்கை என்ற மணிநாடு பேர்கெட்டுப்
புன்னிலங்கை என்று பெயர்சொல்லப்-பன்கறைகள்
ஆட்சி அரசியலார் ஆக்கத் தமிழ்செத்த
காட்சியதில் வெந்தார் கனியர்!

கொத்தாட்சி யான குடிலிலங்கை வன்மையதாற்
செத்தார் மலிந்த சேராண்டாய்-மொத்திவிழச்
சாத்வீகம் என்ற சரித்திரத்திற் போராட
காத்திரம் கொண்டாரே காண்!

யாழ்ப்பாணக் கச்சேரி யாப்பெரும் வாயிலில்
தாழ்ப்பாள் வகுத்துத் தடையாக்கி-ஏழ்உலகுங்
கூட்டி அதிர்வித்துக் கூடுமொரு சாத்வீகம்
காட்டினர்சத் யாக்கிரகம் தான்!

அறுபத்தி யொன்றுமாசி ஆரம்பம் சட்ட
மறுப்பாம் அஹிம்சையிலே மாதம்-ஒருமூன்றாய்ச்
சித்திரைக்குட் தோய்ந்து செறிவுற்ற போதுதமிழ்
முத்திரையை ஆக்கினார் முன்!

கச்சேரி முன்றலிலே கால்மடித்தென் அண்ணனுடன்
உச்சிப் படியமர்ந்தே யூன்றிமனம்-அச்சமின்றிப்
பாலகனாய் அந்தப் படியளந்த வேளையதும்
காலமதின் கட்டளைதான் காண்!

அணைகள் பிளந்து அலைமோதும் வெள்ளக்
கணையாகப் பாய்ந்துவரு தல்போல்-சுணையாகத்
திக்கெல்லாம் கூடித் தினவெடுத்தார்! மக்கவெள்ளம்
பக்கம் புரளவந்தார் பாடி!

சாத்வீகப் போரின் சரிதம் காப்பியமாய்ப்
பூத்த தடாகப் புதுவிலங்கைச்-சாத்திவிடச்
சிங்களத்து ஆட்சிச் சிறமாவோ வன்படையை
எங்கும் புரளவிட்டார் ஏவி!

அரசுச் செயலகத்தை அண்டிப் படைகள்
அரவாய் நுழைந்தார்! அஹிம்சை-புரிந்தவராம்
பாராளு மன்ற உறுப்பினருந் தொண்டருமாய்
சேராகக் கைதானார் சொல்!

சப்பாத்தும் கைத்தடியுந் சத்தியாக் காரர்களை
ஒப்புரவாய்த் தாக்கி இரத்தமிடக்-குப்புறவே
வீழ்ந்தார் பலபேர் விடியலுக் கானபோர்
ஆழ்ந்தஅறு பத்தொன்றே ஆர்!

**Windows Internet: Anti-Tamil Pogroms and Killiings**
**20 February 1961 of Satyagraha!**

20 February 1961:The Satyagraha proper is limited to approved volunteers of the Federal Party who are strictly forbidden from any form of violence either by deed or word, even under grave provocation; but the tremendous enthusiasm generated by this resistance movement among all sections of the people, gives the impression of a popular uprising, resulting in an initial sharp reaction from the government. On the morning of the 20th at 7.30 am, when around 200 volunteers led by Federal Party leader S J V Chelvana-yakam, squat opposite all entrances to the Jaffna Kachcheri (the provincial secretariat), a huge crowd gathers filling the streets, pavements and all approaches.

A bomb and stones are thrown at the Satyagrahis in front of the Jaffna Kachcheri causing severe injuries to them.

April 18, The special train carrying the soldiers arrives in Jaffna at 2.30 am, and the troops are promptly moved into the sprawling secretariat grounds through the rear, while about 200 Satyagrahis, nearly 90 of them women, unaware of developments, tired from the day's fasting and prayers in the hot sun, are yet squatting or stretched out at the Kachcheri entrances. Some of them are in deep slumber. While usually there are thousands of supporters fringing the Satyagrahis during the day, there are hardly any at that hour of the night.

The crackdown begins. Some police officers emerge first, approach two MPs A Amirthalingam and V Dharmalingam, who had been keeping watch, and inform them that they had been instructed to take them into custody under the Emergency Regulations. The MPs submit without protest and Mrs Amirthalingam is also taken into custody. Thereafter, an estimated 500 army men, some of them carrying rifles, swoop on the passive Satya-grahis, attack them with rifle butts, belts and clubs. The sleeping volunteers wake up groan-ing and writhing in pain. They are trampled with boots, kicked, and dragged away from the entrances. Proctor S Nadarajah, one of the joint secretaries of the Federal Party sustains head and shoulder injuries, his clothes drenched in blood. Another Congress MP for Udupiddy, M Sivasithamparam who, fearing assault on the women Satyagrahis, stands with his arms stretched out and is himself attacked and sustains injuries on his face, shoul-ders and arms. The soldiers go berserk and attack everything on sight. They pull down the Federal Party "Post office" structure, smash up cars and bicycles parked in the vicinity, rip-ping tyres with the bayonets, and ramming the windscreens.

Although all news from the Northern and Eastern provinces are strictly censored, government statements allege that resistance continued in these province and that it some-times took violent forms, whereas in fact strict non-violence is observed by the Tamils before the proclamation of the Emergency.

## அகவைப்பா: 16

# 1962: சட்டென்று முடிந்த சதி!

(பாவடிவம்:இன்னிசை வெண்பா)

சுதந்திரம் செப்பிச் சிலபல ஆண்டு
மிதந்தபின் னாலும் மிளிர்ந்தபா டில்லை!
சிதைந்ததாய் வன்மைத் திரட்டுப் புகைய
உதைத்ததே காலம் உருண்டு!

தேச பிதாவென்று சேனநாய காவினைப்
பாசப் பிணைப்பொடும் பார்த்தனர் சிங்களர்!
நேசக் குதிரையில் நின்றுலாப் போகையில்
வீச இறந்தார் விழுந்து!

பண்டார நாயகா பண்பார் கிறிஸ்தவத்
தொண்டார் மத்தவர் தேசத் தரசியலில்
கொண்டாட வென்று குதித்துப் புரள்புத்த
வண்டார்க்குள் வந்தார் வலம்!

புத்தர கித்ததேரர் பிக்குவென் னங்கமாகி
நித்தமும் ஆட்சியோடு நின்றிடுங் கட்டளையைக்
கத்தியாய்க் கண்டபண்டா காண்புய லாகநாளுஞ்
செத்திட நின்றார் சுயம்!

விமலா ஜெயவர்த்த னேயென்ற பெண்ணின்
கமழுமோர் வெற்றியைக் காணிடநூ றாயிரம்
தமதாய் விசுக்கினார்! புத்தர கித்தர்
அமிழ்ந்த கதைதான் அளந்து!

சோமராம தேரரொடும் புத்தர கித்தருங்
கேமசந்தி ரர்ரென்ற கூடாய்ப் பிணைந்தவரும்
நாமத்தார் பண்டா நசும்கொலையின் பாகமென
மாமன்ற நீதியினார் வைப்பு!

இந்நிலை யாயிருந்த ஏறிடர் ஆட்சியோடுங்
கொந்தளித் திட்டகாலம் கூடவேயி ருந்தபோதும்
வந்தசதி யென்ற வரலாறு ஒன்றுண்டு
அந்தமாய்ப் போன தது!

கிறிஸ்தவர்கள் சேர்ந்த குறித்த கவிழ்ப்பில்
எறிந்த தெதுவும் இலையாயின் ஆட்சி
நெறியிற் பதவியெலாஞ் சிங்களர்க்கே யாகுஞ்
செறிவே கவிழ்ப்புச் சதி!

*Asia Times.

SRI LANKA: THE UNTOLD STORY

Chapter 17: Assassination of Bandaranaike

.....When the police arrested Vimala Wijewardene on November 21, 1959, on a charge of complicity in the murder, the Prime Minister had no option other than to remove her from the cabinet. Stanley de Zoysa, the Minister of Finance, resigned on November 23, 1959. On November 26, seven people were charged in the Magistrate's Court of Colombo. Charges were filed against: (1) Mapitigama Buddhrakkita Thera (2) Hemachandra Piyasena Jayawardena (3) Pallihakarage Anura se Silva (4) Talduwe Somarama Thera (5) Weerasooriya Arachchige Newton Perera (6) Vimala Wijewardene and (7) Amerasinghe Arachchige Carolis Amerasinghe.....

**From Wikipedia, the free encyclopedia**

The 1962 Ceylonese coup d'état attempt (also known as the Colonels coup ) was a failed military coup planned in Sri Lanka (Ceylon). Several Christian senior military and policy officers planned to topple the democratically elected government of Prime Minister Mrs. Sirimavo Bandaranaike in the night of 27 January 1962, however, key leaders were arrested before the coup was carried out.

## அகவைப்பா: 17

# 1963: கவிதைக் கருக்கள்!

**(பாவடிவம்:இன்னிசைச் சிந்தியல் வெண்பா)**

காலப் பொழுது கருக்கட்டிச் செந்தமிழின்
கோலக் கவியுங் குறிப்பும் இலக்கியமும்
தூலிகை யாக்கியதென் தூர்!

நீலப் படுகை நெருப்பு அடர்காடு
ஞாலக் குறிப்பு நகர்த்தும் மனத்தாங்கல்
மூலிகை யானதென் மூடு!!

காசி மகாகவி கம்பன் முருகையன்
மாசற்ற செஞ்சொல் வரைவாணர் எல்லோரும்
வீசுங் கவிதந்தார் வீசி!

தில்லைநா தப்புலவர் தில்லைச் சிவனாரும்
வல்ல மறைஞான வன்தொண்டர் அப்பரெனக்
கெல்லோருந் தந்தார் கொடை!

தீண்டாமை என்றுந், திருத்தாயை அம்மாவை
காண்டற் பெருங்கவியாய்க் கட்டுத் தறியாக்கித்
தூண்டுங் கவிவரைந்தேன் திண்!

தாய்நாடு பத்திரிகை தாங்கி முதற்கவியைச்
சேய்என்று ஆக்கிச் சிகரத்தில் வைத்தகதை
காயும் உளத்தென் கனி!

வயலும் மணிக்காற்றும் வாடைதரும் மண்ணும்
புயலும் மழையும் புதுவசந்தப்
பச்சை அயலும் எனதே அறி!

அகவைப்பா: 18

# 1964: ஆறு இலட்சம் இந்தியரை அகலவைத்த ஒப்பந்தம்!

(பாவடிவம்:ஏழடி இன்னிசைப் ப∴றொடை வெண்பா)

பூச்சியும் பூரான் புகலட்டை-மாச்சருக்குக்
காய்ச்சுங் குளிருங் கனவறுமை-யோச்சும்
பெருகுதமிழ் மக்கள் பொலியக்-குருதி
உருக மலையை உழக்கி-உருகவைத்து
தேயிலைப் பண்ணார்ந்த தேநாடாய்த்-தோயவைத்து
ஆயவையந் தன்னில் அழகிட்ட-நேயாரைப்
காயவைத்த ஆண்டுஇது காண்!

சாஸ்தி ரி-சிறிமா சந்திப்பு-காத்திரமாய்த்
தோத்திரம் பாடித் துயிலெழுப்பி-நேத்திரமாய்ப்
பாத்திரம் செய்து படியேற்றி-நீத்தலொடும்
மாத்தமிழ ராறிலட்ச மாகவைத்த-மாத்துயரை
ஏற்றியிவ் வாண்டு இருந்தகதை-ஏற்றிவிட்ட
சாற்றுஞ் சரிதையினைச் சந்தித்தேன்-ஆற்றலொடும்
ஊற்றுளார் விட்டனரிவ் வூர்!

**Indian Tamils of Sri Lanka**
**From Wikipedia,**
**the free encyclopedia**

The Indian Tamils of Sri Lanka are Tamil people of Indian origin in Sri Lanka. They are also known as Hill country Tamils, Up-country Tamils or simply Indian Tamils. They are partly descended from workers sent from South India to Sri Lanka in the 19th and 20th centuries to work in coffee, tea and rubber plantations. Some also migrated on their own as merchants and as other service providers. These Tamil-speakers mostly live in the central highlands, also known as the Malayakam or Hill Country yet others are also found major urban areas and in the Northern province.

Although they are all termed as Tamils today, some have Telugu and Malayalee origins as well as diverse South Indian caste origins. They are instrumental in the plantation sector economy of Sri Lanka. In general socio economically their standard of living is below that of the national average. In 1964 a large percentage were repatriated to India, but left a considerable number as stateless people.

By 1990s most of these have been given Sri Lankan citizenship. Most are Hindus with a minority of Christians and Muslims amongst them. Politically they are supportive of trade union derived political parties that have supported most of the ruling coalition since the 1980s.

## அகவைப்பா: 21

# 1967: அரசியல் வாதம்!

(பாவடிவம்:நேரிசைக் கலிவெண்பா)

தென்றல் மருவுந் திசைநாடு மாண்புகளின்
அன்றில் படிந்த அகப்பருவம்-துன்ப

குருவித் தலையிற் குதிக்கும் பனங்காய்
உருவாகக் கொட்டி உழக்கப்-பெருவாயாய்

நோக்கும் இலங்கை நுனியிற் பருத்துவரும்
போக்காகித் தீவிரத்தின் பொல்லாராய்-சாக்கில்

விழுந்த சணல்வாதம் வேக்காடாய்த் தொட்டு
எழுந்தசுயம் மாறாது எம்பி-மழுவாய்க்

குவியாத வாறும் கொடுக்காத வாறும்
அவியாத பருப்புக்கள் ஆக்கி-புவிகாணச்

சிங்களத்துத் தீவிரத்தார் துட்டாய் மொழிச்சட்டம்
பொங்கிலங் கைஇட்ட பூதமாய்-செங்குருதி

வார்த்துத் தரையாக வாருயிரைக் கொய்திட்ட
சேர்ப்போடுங் கண்ட சிலம்போடும்-நீர்ப்பாய்

வருகின்ற கொள்கை மடப்போக்குப் போகா
ஒருபாதை மாற்றிவிட எண்ணார்-பெரும்போரை

யாசித்து நிற்கின்ற யாப்போடும் மாவரசு
தேசியத்தைச் சொல்லித் தினம்பேசும்-பாசத்

தமிழர் பெருவாழ்வைத் தாக்கவரும் துன்பம்
செமியாது நிற்குதெனச் செப்பும்-அமிழ்தான

தீர்வொன்றும் தீட்டாத் திருச்செல்வத் தாரமைச்சு
கோர்க்காத வாறு குழப்பியதும்-பூர்வாங்கப்

பேரின வாதம்தான் பொன்றும் ஒருகாலம்
நேரிலிட மாட்டாது நேர்!

அகவைப்பா: 22

# 1968:நிசவாழ்வில் ஒரு நிமிடம் !

**(பாவடிவம்:கட்டளைக் கலித்துறை)**

கால உசுப்பொடுங் காட்டாற் றதனிற் கவிந்தநிலத்
தூலத் தொடும்வரை ஓடிய கண்ணீர்த் திவலைகளாற்
ஆலைப் பொழிவாய் அகவைக ளோடும் அழுததல்லால்
பாலைத் தருவார் எனவே பகுத்தல் பலனிலதே!

இதனுடை யாலும் இளங்கவி யான இதயமதாற்
சதமுறை கின்ற சரவணன் கோவிற் சரிதமொடும்
பதமுறை கின்ற வயததுங் கூடிய மன்புகழில்
நிதமுறை யானதாற் தென்மண வாழ்வதும் நேர்ந்ததுவே!

கவியாற் செறிந்தேன்! கனியுமோர் வாழ்விற் கலந்துமணப்
புவியாற் செறிந்தேன்! பொழுதெலா மென்தமிழ்ப் பூந்திடலாய்
குவியச் செறிந்தேன்! குமரக் கடவுட் குளிர்ந்தபதஞ்
செவியிற் செறிந்தேன்! திருத்தமி ழாளொடுஞ் சேர்ந்தனனே!

**1968-ஐப்பசி** தலைத் தீபாவளியன்று ஈழநாடு வாரமலரில்
சசிபாரதி பிரசுரித்த என்மனக் கவிதையிது!

## அன்பளிப்பு!

முத்தெழிற் புன்னகை எத்திவர-ஒரு
மோகன குஞ்சரி போல்நடந்து-மிக
மெத்தச் சிறுத்த இடைவளைவில்-எழில்
மின்னென மண்டபம் இடும்மயிலே-உன்
பத்தரை மாற்று மேனிப் பரப்பிலே-வெளிப்
பகட்டுப் புடவையுங் கொஞ்சுவதோ-அடி
சித்திரக் கைத்தறிச் சேலையடி-காதற்
சேயிழையே என் அன்பளிப்பு!

சேலை யுடுத்துநீ லாவகமாய்ச்-சரி
செய்து கொய்யகம் முன்னிருத்தி-ஒரு
கோல முகிலில் அம்பிறைபோல்-குழல்
கோதி மல்லிகை மலர்நிறைத்து-வெறுங்
காலச் சுவட்டினில் தீவினை போவென-ஒளி
காட்டித் தேவன் திலகமிட்டு-எழில்
வாலைக் குமரியாய் வாசலிலே-நடை
வந்து பயிலடி நான்வருவேன்! **-ஈழநாடு வாரமலர்-1968**

அகவைப்பா: 23

## 1969: குப்பையாய்ப் போன திருவின் வெள்ளையறிக்கை!

(பாவடிவம்:காப்பியக் கலித்துறை)

ஆட்சி யரசில் அமர்ந்தாரெனினும் ஆகு மாறு
ஊட்ட மெதுவும் உரைக்காதவா றென்ன திட்டம்
தீட்டி யதுமோர் வெள்ளையறிக் கையும் வீணாய்த்
தோட்டி யனைய வெறிந்தாரது வாகப் போச்சே!

தேசி யமாகி யரசாளவென் றான நோக்கிற்
பேசி யுரைத்த படியாறெனப் பூத்த பக்கம்
நாசி இறுக்கி நடிப்பாரொடுங் கூடி நாத்திக்
கூசி அழிந்தார் தமிழானவர் மீண்டு மாமே!

திருச்செல் வமைச்சர்த் தூருகையெழுத் தாகத் தோன்றி
வருவெள் ளறிக்கை யழிப்பாரொடுங் கூட வாகி
நெருப்பா கியதோர் நிசத்தாலினி நிற்க வாட்சி
ஒருக்கா லுமில்லை எனவோடியே வீழ்ந்த தாமே!

ஊரார் உருகத் துறுவார்திரு ஊர்வ லம்மாய்
வாரார் உரைக்கும் மதியாளராய் வண்ண மேதை
தாரார் விளக்கம் மதியாதவர் தானு மென்றுந்
தேரார் எனவே சொலவேநிசம் வீழ்ந்த தாமே!

கூறி உருவாய்க் கூட்டாரெனக் கூறி நிற்பார்!
தேறி யரசத் துறுவாயொடுந் தீட்டிப் பின்பு
மீறி நடப்பார்! புதவாதிதன் பேரிற் காட்டி
நாறி அடிப்பார் இதுவாதலே நாளுங் காண்பே!

தேசித் தயாகத் தொடுவாயொடுந் தீய்ந்த தாலே
யாசித் தநீதி அகல்வாயென ஆன காண்டம்
மூசி விளாசி முடித்தாரினி மூள லின்றி
யோசித் ததுவாய்த் தமிழார்நிலை யின்னு மாமே!



அகவைப்பா: 24

# 1970: கிளிநொச்சி தந்த தமிழ்!

(பாவடிவம்:ஆசிரியத் தாழிசை)

இன்றும் புதிதாகி இத்துவிடப் பட்டதொரு
இன்னோர் அரசாங்கம் என்றகதை ஆகிவிடப்
பொன்னார் இடட்லி புரிந்தாரே தோல்வியதே!

தமிழர் உறுதுணையாய்த் தந்த அரசாய்க்
குமிழநின்ற போதுங் குலைத்ததுவே புத்த
உமிழ்தலொடுங் கூடி ஒடுக்கிவரும் தீவிரமே!

சென்று கிளிநொச்சிச் சீதனத்து மாகடையில்
என்றன் வியாபார ஏற்றமுடன் அக்காலத்
துன்பத்தி லல்லாடுந் தேசமும் பார்த்தேனே!

பொங்குங் கவியரங்கம் பூத்தகவி வாணருடன்
தங்கக் கருவான தமிழெடுத்த உள்ளத்தார்
எங்கும் வியாபிக்க ஏறுநடை யானேனென்நான்!

கவியரங்கங் கண்டு கவருஞ் சிறுவர்
அவிசொரிந்தாற் போல அகிலாவர் என்றே
செவியரங்கந் தேடிச் செறியுஞ் சிறப்புண்டோம்!

சென்திரேசா பாத்திமா சேரிந்துச் சாலையும்
பொன்வட்டக் கச்சியின் பொற்பள்ளி மீதோடுங்
குன்றாய்க் கவியரங்கு கொண்டோமே யந்நாளே!

வானக் கருமுகிலாய் மண்ணின் மழையாருஞ்
சேனைக் கரும்பாகிச் சென்றுபாண்டி யன்குளத்தும்
மானக் கவியரங்கு வண்ணமிட்டோம் தோளீரே!

வாசிக சாலையின் வாணிக் கவியரங்கம்
கூசிய ஆளுனர் குத்தி நிறுத்திட
ஊசிபோல் மக்கள் உருவானார் ஆங்கேயே!

இவ்வாண்டுத் தேர்தல் இடட்லியார் கட்சிபோய்
ஒவ்வாத வாறு ஒழியச் சிறிமாவார்
கவ்விக் குளித்தாட கண்டார் பெருவெற்றி!

அகவைப்பா: 25

# 1971: சேகுவேரா: ஆயுதப்போரின் அறிமுகம்!

(பாவடிவம்:கட்டளைக் கலிப்பா)

வேறோர் கட்சியும் வேணுமென் றில்லதாய்
வீர வெற்றியின் மீதொடுங் கூடிய
சூறை வீச்சொடுஞ் சூடிய தேர்தலில்
செப்ப நின்றசு தந்திரக் கட்சியின்
கூறை யாக்கிய கொள்ளர சாட்சியின்
கொண்ட சாதனைக் கூட்டிலே நின்றிடுங்
காறை போற்பலக் கட்டொடுங் கூடிய
கந்த மாருதம் என்றிடக் கண்டதே!

தீர்வு கொண்டிடில் திப்பொழு தில்லையேல்
தேச மெப்பவுந் தீர்க்குமென் றில்லையால்
ஆர்வ முற்றிட ஆக்குக என்றொரு
அள்ளு மாசையில் விள்ளுமார் பேசவும்
நேர்வ தம்மெலாம் நித்தியப் பூசையாய்
நின்ற வாக்கிலே நீங்கிட வில்லையாய்
பூர்வ புண்ணியப் புத்தமாய்த் தெள்ளிய
பிக்கு கள்ளோடும் பின்புலம் ஆனதே!

சோச லித்துவம் பேசவும் சுந்தரத்
தூம கேதென தர்மமுஞ் சூழவும்
தேச முற்றிலுஞ் செவ்வரி யாக்கவுந்
துள்ளு ரஷ்சிய லெனினிசத் தீர்க்கமும்
வீசுஞ் சிங்கள வாலிபர் மேவிய
மீட்டும் போரென விஞ்சவும்
மூசும் போர்ஒன்று மூட்டினர் மொத்தமாய்
மூண்டு மொய்த்தது முற்றிலங் கையும்மே!

விஜய வீராவென் வித்துவ மாணவன்
விளங்கு சேகுவா ராவெனும் வீச்சிலே
பசத்தில் பல்கலைப் பாலிளை யோர்களும்
படைஞர் உள்ளொடும் பாங்குளார் பற்றிலும்
நிசத்தில் ஊன்றிய நெட்டுமூ வாண்டதில்
நிழலில் ஊட்டிய ஓர்படை யானதாய்
அசத்தல் போரினை ஆக்கியே காட்டினர்
அனைய யாழிலும் கோட்டையைத் தாக்கியே!

சில்ப லப்பல சீண்டுதல் காணவே
சேகு ராவெனும் சிங்களத் தாரொடுஞ்
சொல்ப ரப்பிய 'யேவீபீ' யானவர்
தூண்டு காட்டிடுஞ் சிக்கலில் ஆட்சியர்
வல்த லைவராம் வீராவை யாழ்சிறை
வைத்த காரணம் மீட்கவே அங்குமாய்
சொல்லும் தாக்குதல் தோய்த்தனர் அப்படை
தென்னி லங்கையும் தீவிரம் கண்டதே!

சிறிமா வெற்றிக்கு வோங்குதீ யாக்கிய
விளம்பு வெற்றியால் 'ஜேவீபீப்' பின்னணி
அறிவித் தார்த்ததும் ஆங்குபோர் ஆக்கிய
அனைத்து மாகிலும் ஆயிரம் மாண்டனர்!
பொறிவை மீட்டிட இந்தியா பாகிஸ்தான்
இரஸ்ஷி யாவென எல்லமும் வந்ததால்
குறிவைத் தாடிய கொள்ளுபோர் நின்றிட
குதரில் மீண்டுமே சூர்ந்தது ஆட்சியே!


## 1971 JVP InsurrectionFrom Wikipedia, the free encyclopedia

......................

The 1971 JVP Insurrection (also known as the 1971 Revolt) was the first unsuccessful armed revolt conducted by the Janatha Vimukthi Peramuna against the Government of Ceylon under Prime Minister Sirimavo Bandaranaike. The revolt on April 5, 1971 and lasted till June 1971. The insurgents were able to capture and hold several towns and rural areas for several weeks until they were recaptured by the armed forces.

.................

CasualtiesThe official death toll was 1,200 but unofficial figures reliably estimated it to be around 4-5,000. 53 service personnel were killed and 323 were wounded from 1971 to 1972.[5]...............



## அகவைப்பா: 26

# 1972: எஸ்.ஜே.வி பதவி துறப்பும்

(பாவடிவம்: இயல் தரவினைக் கொச்சகக் கலிப்பா)

மின்னுஞ் சுதந்திரம் பெற்று இலங்கையின்
இன்னல் அடைந்ததே மிச்சம் அனையதாய்
இன்னும் இலங்கையின் ஈனம் இருக்கையில்
குன்றும் அரசியல் கொள்நிலங் காடுதல்
என்றும் கலவரத் தோடிடும் வன்முறை
அன்றைம்பத் தெட்டும் அளந்துபல் லாயிரமாய்
கொன்றும் பறித்தும் குடிநிலம் போனதும்
இன்று வரைக்கும் இருக்கிறதே எம்பாவாய்!

ஆத்திப் பறித்து அருந்தமிழார் மக்களது
ஏத்தும் உயிரை எடுத்துக் கலவரங்கள்
சாத்துப் படியாகச் சார்பாட்சி ஆளுடையார்
பார்த்து இருந்தும் பலகாட்சி யாய்மாறி
மாத்துச் சுதந்திரத்தின் மன்றாகிக் கானகத்தே
கூத்துப் படியாகிக் கோனாட்சிக் கோலுடையார்
சேத்துப் படியாய்ச் சிறிமா அம்மையரின்
யாத்த அரசமைப்பும் யாப்பாகி வந்ததுவே!

பாதுகாப் பாகப் பிரித்தானி யர்வைத்த
ஏதிருபத் தொன்பதென்ற இன்சட்டம் தீய்த்தாடி
ஈதுபுதி தானதென்று இன்றோர் அரசமைப்பை
தாதுபுதி தாக்கித் தனியிலங்கைப் பேர்மாற்றி
போதாய்ச் சிறீலங்காப் பொன்நாடு என்றாக்கி
நாத ஒருநூற்றி முப்பத்தி நான்கான
ஓதலொடுங் கூட உருவாக்கி வாரமைப்பை
பூதகர மாக்கிப் பொலியவைத்தார் அம்மையரே!

நீதி முறிந்ததென்று நெஞ்சில் அடித்துஅழப்
பாதி புதைந்தென்று பட்டமரம் போலிருக்க
ஆதிக் குடித்தமிழர் அல்லற்பட் டானபின்பும்
சாதிக்கும் புத்தச் சரித்திரமாய்ப் பிக்குகளின்
மோதற்குப் பின்னாடி முட்டி முகம்புதைத்து
ஆதற்கு ஆட்சி அனைத்தும் கிழித்தெறியுஞ்
சாதனைக்குள் அல்லாது சாற்றும் இனங்கூட்டும்
வேதனைக்குத் தீர்வென்றும் விட்டாரே யில்லையடி!

ஆன அரசமைப்பு ஆக்கும் இனமிதிப்பு
மானத் தமிழர்களை மாட்டும் உருவழிப்பு
கூனற் படுகின்ற கூட்டாய்க் கொட்டுண்ட
ஞானம் மதமென்ற ஞான்றின் அவமதிப்பு
ஈனம் இதுவேன்றே என்பதவி விட்டேன்யான்
தானம் இதுவென்றே தன்னாட்சி கொண்டீரேல்
யானும் உமதோடும் யாப்பிடுவோம் தேர்தலென்று
வானப் பதவி துறந்தாரே செல்வாவே!

**Asian Times**

**SRI LANKA: THE UNTOLD STORY**

**Chapter 24: Tamil militancy - a manifestation**

**By K T Rajasingham**

................................

"And whereas the leader of the TUF, Mr S J V Chelvanayakam resigned his membership of the National State Assembly on October 2, 1972, in order democratically to establish that, the Tamil people have rejected the constitution and also to give an opportunity to the government to put to test their claim that a considerable section of the Tamil people have accepted their constitution and whereas, the government by not holding the by-election for a period of over seven months, is striking the death knell of parliamentary democracy in the country....................

அகவைப்பா: 27

## 1973: தரப்படுத்தல்: போரின் ஆரம்பச் சுழி!

(பாவடிவம்:கலிவிருத்தம்-1)

மேற்கு நாட்டுளார் மேவியே வந்ததும்
ஆற்குங் கல்வியால் ஆர்தமிழ் மக்களின்
நோற்கு மாபலம் நுண்ணறி வாகியும்
சாற்றும் பாலதாய்ச் சந்ததி ஆனதே!

இந்தக் கூரறி வாளராய் ஏறியோர்
முந்துங் கல்வியால் முன்மொழி யாற்பட
உந்தப் பட்டதோர் ஏர்தொழில் பெற்றதுஞ்
சிந்திப் பார்எனச் சிங்களம் ஆனதே!

தரப்ப டுத்தலாய்த் தண்தமிழ் மாணவர்
நிரைப்ப டுத்திய மேம்படு புள்ளியைப்
வரப்பெ டுத்ததாய் வைத்ததோர் சட்டமே
உரம்ப டுத்திய ஓம்புதல் ஆனதே!

மாண வர்களாய் வந்தவை யாயிரம்
ஏணி போலவர் ஈர்த்திடும் ஊர்வலம்
காண வந்தது! கற்குழாம் எம்பியே
ஆண வத்தர சாமெனச் சொன்னதே!


## Policy of standardisation
## From Wikipedia, the free encyclopedia
## The implementation of the law

The government policy of standardization in essence was an affirmative action scheme to assist geographically disadvantaged students to gain tertiary education. The benefits enjoyed by Sinhalese students also meant a significant fall in the number of Tamil students within the Sri Lankan university student populace.

University selection of 1971 was calculated based on language they sit. Numbers of allocations were proportional to the number of participants who sat to the examination in that language. As guaranteed before the exam, Tamil share was dropped to the proportion of the Tamils medium students(According to 1971 consensus 27% of the total population used Tamil as first medium).[1]

According to 1971 exam results, a large proportion of the Tamil allocation was enjoyed by Tamils in Jaffna and a large proportion of the Sinhalese share was enjoyed by the Sinhalese in Colombo.

In 1972 government added district quota as a parameter within each languages.[1] 30% of university places were allocated on the basis of island-wide merit; half the places were allocated on the basis of comparative scores within districts and an additional 15% reserved for students from under privileged districts.



# 1974: தமிழினம்: மூண்டு கனன்ற தமிழாராய்ச்சி மாநாடு!

(பாவடிவம்:கலிவிருத்தம்-2)

பொற்தமிழ் வையத்தில் பூத்த ஆய்வினிற்
திற்குளார் சேர்ந்தனர் தெள்ளு யாழ்நகர்
அற்புத மாய்எழில் ஆக்கச் சனத்திரள்
நிற்பதற் கில்லையாய் நிறைந்த தாமலோ!

தாய்தமி ழாரொடும் தந்த பேரிகை
வாய்த்திடும் மாந்தரும் வண்ண மாகிட
சேய்த்தமிழ் செந்தமிழ் லென்ன மாதுளம்
வாய்த்தவா ராய்ச்சியில் வண்ண மானதே!

ஈர்த்தவித் தேர்விழா எங்கு மாகிலுங்
கோர்த்தது மக்களைக் கொண்ட பல்லாயிரம்
ஆர்த்தது! யாழ்நகர் அள்ளப் பரந்தது
வேர்த்தது ஆட்சியர் விதந்த போதிலே!

நான்குநாள் அள்ளவும் நம்மின் நாத்தமிழ்
தேன்குடம் செய்யவும் திரும்பு மெங்ஙணும்
பான்தமிழ் நெய்யவும் பண்பும் ஆய்வொடுங்
கூன்தமிழ் நீங்கிய பொற்பு மலர்ந்ததே!

வாரர சாள்வரும் மருங்கு சூரியர்
பேரர சென்கவும் பொரும நின்றவர்
தேரர வின்றிய தீய எண்ணமாய்த்
தூரர வொன்றதாய் துடித்துப் பார்த்தனர்!

ஈதொரு தோல்வியாய் எள்ளு தீயிலும்
சோதர ரென்றொரு சோதி யில்லவர்
மீதநாள் ஈற்றிலே மிதந்த மக்களை
மோதிடத் தாக்கிய மிலேச்சம் நடந்ததே!

மின்சரம் பாய்ந்ததும் மிதிக்க ஓடிய
வென்சனக் காலிலும் முட்டி ஒன்பவர்
அன்றுசா வெய்தினர் அழலு வார்படை
நின்றுழக் காடிய நெருப்பு மாறுமோ?

சத்திய சீலனும் சார்சிவ குமாரனும்
மொத்த இளைஞரின் முகங்க ளானவர்
சத்திய வேள்வியிற் சார்சிவ குமாரன்
இத்தரை மீது இன்னுயிர் போனதே!

**Asian Times**
**SRI LANKA: THE UNTOLD STORY**
**Chapter 24: Tamil militancy - a manifestation**
**By K T Rajasingham**

....................

According to available reports, on June 5, 1974, the officer in charge of the Kopay Police Station, Sub Inspector Wijesundera, followed the youth named Sivakumaran consequent to having received information that the Peoples Bank was to be attacked. Sivakumaran fired two shots at Wijesundera but both were misfired, did not attack the intended target. Wijesundera then overpowered Sivakumaran and took him under custody, whereupon Sivakumaran swallowed some poison which he took from his waist and died....................

## அகவைப்பா: 29

# 1975: முஸ்லீம்கள் மீதும் எதிர்ப்பு! செல்வா வெற்றி!துரையப்பா மறைவு!

(பாவடிவம்:கலிவிருத்தம்-3)

பாசி யானதும் பழுதுப் படிவமும்
தூசி யானதும் தூர்ந்த காலமும்
நேசிப் பின்றிய நூற்றும் நெய்தலுங்
கூசிப் போகவே கொழுந்தில் எரிந்ததே!

நாடு வன்முறை நயந்த காலையும்
வீடுங் கொள்ளையும் விளைந்த வேளையும்
கூடு கலைந்ததும் கூட்டி அள்ளிய
கேடும் மலிந்ததாய்க் குதர்க்கம் மலிந்ததே!

தமிழர் கூட்டணித் தலைமை அகத்திற்
கமழ்நிலங் காக்கக் கனிந்த கூட்டத்தில்
அமையுந் தமிழ்நில அகத்தொடு மான
அமைவே இனியென ஆனது உரையே!

ஈறோஸ் அமைப்பென இங்கி லாந்திலே
கூறும் ஈழத்துக் கொஞ்சும் அமைப்பது
வாறு பெற்றிட வகுத்த மேதையர்
பேறு பெற்றிடும் பொன்தமி ழாளரே!

எழுபத் திரண்டிலே இணைந்த இயக்கமே
குழுபல வாகிக் குவிந்தன வாயினும்
எழுபத் தாறுதான் ஏர்புலி இயக்கம்
முழுப்பல மானதாய் முன்னணி யானதே!

வாச இயக்கமும் வசத்த லைவரும்
வீச நடந்ததும் விளைத்த போதிலும்
தேச ஆட்சியர் திளைத்த முஸ்லீமொடும்
நாசப் போரினை நடத்தினர் அறிகவே!

பண்டார கமவெனும் மகியங் கனையிலே
உண்டான போரில் எரிந்தன வீடுகள்
வண்டாரும் இசுலாம் வர்த்தக நிலையம்
விண்போன தீயில் விட்டெரிந் ததுவே!

அல்பிரட் துரையப் பாவெனும் அரச
நல்துணை யாளர் நயந்தவா ராட்சி
கொல்களத் தன்று யாழ்நகர்ப் பிதாவார்
வல்லுயிர் மாய்க்க நடந்ததிக் கொலையே!

செல்வ நாயகந் தொடுத்த தேர்தலில்
வெல்ல நடந்தவர் விள்ளு மரசிலே
சொல்லி வைத்தவர் செந்தமிழ் நாடதே
நல்ல மாகதை யாகுமென் றறைந்தார்!

**Asian Times**
**SRI LANKA: THE UNTOLD STORY**
**Chapter 24: Tamil militancy - a manifestation**
**By K T Rajasingham**

.....................Alfred Duriyappah, though a Christian, use to go regularly to Hindu temples, especially to the Varadaraja Perumal Temple at Ponnalai. When he went on July 27, 1975, four young men were waiting for him. As he left his car, one of the men opened fire from point blank range, and he collapsed and died.

.................In another development, after 1972, Muslims in the country gradually began to feel concerned at Sinhalese atrocities. To begin with, the Company-Veediya Mosque, in the heart of the Colombo, came under attack by Sinhalese hoodlums and police. In 1975, a Muslim village, Bandaragame, near Mahiyangana, was set ablaze and 61 houses and seven shops were looted and torched. In the early part of 1976, Gampola, Panadura including Nikweretiya and 40 other villages where Muslims predominated, came under attack, resulting in damage to property.

The police assumed the role of implementing government policies and they ran amok in several parts of the country. The police, almost 90 percent of whom were ethnic

Sinhalese, massacred seven Muslims praying inside a mosque in Puttalam, in February 1976, and later they torched more than 200 houses, 50 shops and two coconut fiber processing factories, all belonging to Muslims. Again, police burnt down two more mosques, killing several Muslims praying there........................................................

அகவைப்பா: 30

# 1976: பண்ணாகத்தில் தமிழ் வரலாற்றுப் பிரகடனம்!

(பாவடிவம்:சந்தக் கலிவிருத்தம்-1)

உன்னுபல நண்பரென ஒற்றுமையி னோடும்
மன்னுரிமை கொண்டவின மாண்புகளி னோடும்
முன்னுநில மோதலென முட்டிவர நின்றும்
நன்புகல்சு தந்திரத்தின் ஞான்றுமிசை கண்டோம்!

பொன்இராம நாதனுயர் பொங்குபணி யோடும்
வன்புரிக ளென்னுநிலை மாற்றுவிருப் பாகித்
மென்தமிழர் நின்றநிலை மீட்டுவது இன்றி
இன்றுவரை சிங்களத்தில் ஒன்றுமிலை யாமே!

வாக்குரிமை இன்றியொரு மன்மலையில் நின்றார்!
நீக்கமறப் புத்தநிலை பூட்டியவர் பின்னால்
ஆக்குமொழி சிங்களமாய் ஆதரித்து நின்றார்
தீக்கறைகள் பட்டதுதான் தேசவழி யாச்சே!

சொந்தநிலம் வன்புலத்தில் தீய்ந்துவிடல் ஆச்சே!
கந்தலென முன்தமிழர் கண்டதுண்ட மானார்!
வெந்தநிலக் காதையொடும் மீள்கதைக ளோடும்
எந்தவொரு ஆட்சிலும் இந்தநிலை யாமே!

குன்றுநிலை அன்றியொரு கொள்ளுநிலை இல்லை!
என்றுவரும் தீர்வதுவே என்பதுவும் இல்லை
நன்றுவருங் கல்வியிலும் தரப்படுத்த லாச்சு
இன்றிலொன்று காண்பதென்று இன்றுநிலை கொண்டார்!

தொல்லைபல கண்டுவர தேர்தமிழ ரானோர்
இல்லையினி ஒட்டுறவு எங்களினம் மீளும்
எல்லையிது என்றதொனி ஏற்றுபண்ணா கத்தில்
சொல்லவரும் மாத்தமிழர் சேர்ந்துவரக் கண்டோம்!

வட்டுகோட்டைத் தீர்மானமென் வைத்தபெரு மன்றில்
ஒட்டநின்ற பேர்த்தலைவர் செல்வரொடும் பொன்னர்
வட்டமெனத் தொண்டமானென் மாபெரியர் ஒன்றாய்
எட்டுதமிழ் ஈழமென்றே ஏற்றகனம் இட்டார்!

தென்னிலங்கை ஆனகட்சி எல்லவர்க்கும் அன்றாம்
நின்றதொரு மாப்புயலின் வண்ணமெனச் சேயார்
வென்றுவரத் தேர்தலதும் மீட்டரசுப் பீலிக்ஸ்
என்னவர்நம் பிக்கையிலார் என்றமன்றும் கண்டார்!

சேர்ந்துவாழ மார்க்கமில்லை செப்பரிய ஈழம்
நேர்ந்துவிடும் என்றவறை யிட்டகதை வட்டுப்
பேர்பிரகட னத்தோடுபின் னார்அமிரும் மற்றும்
சேர்தலைவர் நால்வருமாய் சென்றுசிறை யானார்!

**வேறு**

**உதயசூ ரியன்கொடியே உதித்ததுவே உலகமுய்ய**
**எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்குதே-எம்**
**எழுச்சிக்கொடி அழைக்குதடா எழுகவே!**

**-கூட்டணி ஆரம்பமான போது சுதந்திரனில் வெளிவந்த ஒரு கவிதை**

**அகவைப்பா: 31**

# 1977: ஆட்சி மாற்றமும் சேயாரின் வன்முறையும்!

(பாவடிவம்:சந்தக் கலிவிருத்தம்-2)

வென்றேயொரு மாதம்முடி வாகாநிலை யோடும்
கொன்றாடிய முன்னூற்றவர் கொண்டார்தமிழ் மாந்தர்
மன்றோடிய சேயார்வெறி மாற்றார்எதிர்ப் பாளர்
பன்னாயிரத் தார்வீட்டினை பந்தாடிய பெருமான்!

வென்றார்தமிழ்க் கூட்டாயென வீற்றார்எதிர்க் கட்சிப்
பொன்னார்தலை வர்ரார்என பூத்தார்அமிர் தானே
என்றோர்நிலை ஏற்காமனம் இட்டார்தமி ழர்மேல்
கொன்றாடிய மாகேவலம் கொண்டார்சரி தம்மே!

நல்லார்தலை வன்னென்றவர் செல்வாவொடும் பொன்னர்
வல்லாரெனும் வாதார்திருச் செல்வம்முடன் மூவர்

எல்லாரொடும் இவ்வாண்டது எட்டாரினி என்றே
சொல்லாயிடச் சென்றாரெனச் செப்புந்தமிழ் ஆச்சே!

தென்னைஇலை யென்னுஞ்சிரம் என்பார்தமிழ் அன்பர்
தன்னார்நிலை தள்ளாடவும் தாங்கிக்குடை யானார்
பொன்னார்ஒரு பொய்யாரிலாப் பெற்றார்பிதா வென்கச்
சொன்னார்தமிழ்ச் செப்பாரினம் தெய்வாமெனக் கண்டார்!

முப்பார்பெருஞ் சொல்லார்வலர் மீட்டாரினஞ் சேர்த்தார்
எப்போதிலும் தன்மானமே என்னும்நிலை பெற்றார்!
இப்போதுமென் உள்ளேநிதம் உண்டேயவர் தோற்றம்
முப்பார்கூடல் தன்னில்அவர் விள்ளும்உரை பெற்றேன்!

காங்கேசனின் வீதித்தொடும் பின்னால்நடை யுற்றே
ஆங்கேயவர் அற்றாமுடல் ஆரார்பசன் பூக்கப்
பாங்காய்மொழிப் பாவார்கவி பண்ணாமிடச் செய்தேன்
தாங்காவுளத் தோடேயவர் தண்ணார்வலம் இட்டேன்!

ஜீஜியெனும் வாதார்புகழ் வல்லாரவர் தானும்
தேசார்தமிழ்ப் பேராரிடப் பெற்றாரவர் தேரீர்!
நாசார்அர சாள்வார்தனின் நத்தும்படி ஆண்டோர்
கூசார்எனும் படியாலொரு கூட்டாகியே வந்தார்!

பொன்னம்பலம் திருச்செல்வமும் பெயர்ந்தாருயிர்ப் பூமி
அன்னார்பினே அடைந்தார்பரம் ஆனார்உயிர்ச் செல்வா
வன்போல்அர சாள்வார்தமின் வண்டல்நிலை கண்டார்
தென்னாரிறை தன்னைத்தொழச் சென்றார்அவர் தாமே!

ஆண்டானிறை தானேயினி எம்காவலன் என்றே
பூண்டோடினிப் போகும்எனும் புயலால்மனம் எண்ணி
விண்டாரவர் மொழியாற்கரம் விண்காட்டிய பின்னால்
மண்டாடிய இறைவன்னொடும் வாழ்வேகினார் அம்மா!

**வேறு**

**செல்வாவின் இறுதி யாத்திரை அன்று, பூதவுடலின் பின்னால், எனதும் இன்னும் மூன்று வர்த்தக நிலையங்களின் பேரிலும் கிளி-நொச்சியல் இருந்து, நான்கு அஞ்சலிப் பிரசுரங்கள், எனது ஆக்கங்க ளில் வெளியிடப்பட்டது.**

**அதில் எனது சார்பாக வெளியிடப்பட்ட ஞாபகத்தில் இருக்கும் ஒரேயொரு செய்யுள் இது!**

நில்லென்ற போது நின்றோம்!
நெடும்புயல் ஈது என்று
செல்லென்ற போது சென்றோம்!
செகத்தொடும் அழைப்பு வைத்து
வெல்லென்ற போது காங்கை
வெற்றியிலே நீதி சொன்னோம்!
சொல்லொன்றும் இன்றி எங்கள்
செல்வாநீ சென்ற தெங்கே?

**SRI LANKA: The Untold Story**
**Chapter 22: 'Only God Can Save the Tamils'**
**By K T Rajasingham**

"Aandavan than aeni Tamilarai Kappatra Mudyum" - Only god can save the Tamils - were the prophetic words of S J V Chelvanayakam, the leader of the Thamil Arasu Kadchi. Chelvanayakam sensed the gathering storms in the context of the overwhelming majority secured by the Buddhist Sinhala supremacist, United Front coalition parties. He made the above statement, after the results of his own Kankesanthurai constituency was announced in the 1970 general elections. ..................

## Riots in Sri LankaFrom Wikipedia, the free encyclopedia

**1977 riots Main article: Sri Lankan riots of 1977**
The anti-Tamil riots, targeting the minority Sri Lankan Tamil people started on the August 12, 1977, less than a month after the United National Party came to power in 1977. Over 300 Tamils were killed during these riots........................

அகவைப்பா: 32

## 1978: சிறிமா அரசின் அகல்வும் ஜேயார் வரவும்!

(பாவடிவம்:சந்தக் கலித்துறை-1)

ஊண்டும் பற்று ஓர்தமி ழான இளைஞர்கள்
தூண்டும் பக்தித் தேருயிர் ஈயத் துடிப்போரைத்
தாண்டும் ஆட்சி தாக்கிடும் வன்மைத் தடங்கண்டார்!
நோண்டிக் கொல்லும் நோர்படை யிட்டார் நிசத்தாள்வோர்!

விள்ளும் ஆட்சி விட்டுமே மாறி விடஜேயார்
கொள்ளும் ஆட்சி கூர்ந்தது இன்னுங் குணம்மாறி
நுள்ளுங் கூர்ப்பில் நின்றுமே வேகும் நிசத்தாலே
அள்ளக் கோடும் ஆள்வரைத் தாக்கும் அணியானார்!

பஸ்தி யாம்பிள் ளைப்புல னாளர்ப் பழிவாங்க
முஸ்தீ பிட்டார் மூள்கறை போக்க முனையின்னும்
அஸ்தி ரங்கள் பல்வழி ஆக்கிப் படையோரை
இஸ்தி யாக்கிப் போட்டது மெல்லாம் இளையோரே!

ஏழ்பத் தெட்டில் இன்னொரு யாப்புப் புதிதாக
சூழ்வைத் தார்த்துச் சேயரின் ஆட்சி சுதியாகக்
கூழ்வைத் திட்டார்! கொள்தமிழ் மக்கட் கெதிர்ப்பாக
மூழ்கிப் போகா முன்னமைப் பிட்டார் முகத்தாரே!

ஓர்ந்து கூர்ந்து ஊர்நெருப் பார்ந்து உவந்தாராய்ச்
சேர்ந்து வாழ்ந்து தென்தமி ழோடு சொலும்தீர்வாய்
ஆர்க்கும் மன்னாய் ஆகுவார் இல்லா அகத்தாராய்ப்
பார்க்கார் ஆகிப் பக்குவம் இன்றிப் படிந்தாரே!

தென்னை நின்றும் வீழ்ந்தவ னேறத் திடுமாடு
நன்னிப் போயே நாரென வாக்கும் நடைபோல
குன்னார் நுட்பம் கொண்டிடும் சேயார் குணத்தோடு
இன்னும் தீர்வு எட்டிடா வாறே தொடர்ந்தாரே!

**1977 riots in Sri Lanka-From Wikipedia,**

By 1977 the voters were tired of Bandaranaike's socialist policies and elections returned the UNP to power under Junius Jayewardene, on a manifesto pledging a market economy and "a free ration of 8 seers (kilograms) of cereals". The SLFP and the left-wing parties were virtually wiped out in Parliament, although they garnered 40% of the popular vote, leaving the Tamil United Liberation Front led by Appapillai Amirthalingam as the official opposition. This created a dangerous ethnic division in Sri Lankan politics.

அகவைப்பா: 33

# 1979: தேச பயங்கரவாதத் தடைச்சட்டம்!

(பாவடிவம்:சந்தக் கலித்துறை-2)

வேகமாய் நின்றிட மீட்குமி யக்கமாம் என்றாகி
யாகசு டத்திலே யாப்பிட வும்தமிழ்ப் பாகாகி
ஆகவு யிர்ரினை ஆகுதி யாக்கவும் அன்றான
தாகமிட் டாடினர் தாய்மொழி ஏந்திய தக்கோரே!

தாக்குதல் மாபடை மீதொடு மோதவுந் தாங்கோராய்
ஆக்கிய தாம்தமிழ் ஆனவி யக்கமே அன்றாகித்
தூக்கிய போர்க்கொடி தேசிய யந்திரத் துப்பாகி
நீக்கிலா தானதே நெஞ்சுரம் மிக்கதாய் நெய்யாகி!

யாழொடுங் கூடிய காவல மேலவர் மீதான
ஆழமாந் தாக்குத லாளொடும் மாத்தடை மன்றாக்கிச்
சூழர சாங்கமும் செய்தடைச் சட்டமும் சொல்லாக்கிச்
தோழமை யற்றதாய்ச் செந்தமிழ் மீதொடும் செய்தாரே!

தேசப யங்கர வாதசட் டத்தில் உள்ளாக்கி
நாசஇ யக்கமே தேடிய ழிக்கவே நாளாக்கி
பேசுப டைகளைப் பொங்கிய தாகவே போதாக்கி
வீசுக என்றொரு கட்டளை யாட்சியர் விட்டாரே!

இந்தவ கையினில் கந்தலாய் ஆனது கார்தேசம்
நிந்தனை வற்தடம் தெள்நிலம் அள்ளுதல் என்றாய
முந்தைய ஆட்சியில் முற்படு காதையில் மீள்வாராய்ச்
சிந்தையில் வாய்ந்திட முப்படை ஆக்கியே நின்றாரே!

**History of Sri Lanka From Wikipedia, the free encyclopedia**

........The government passed the Prevention of Terrorism (Temporary Provisions) Act in 1979. The act was enacted as a temporary measure, but it later became permanent legislation. The International Commission of Jurists, Amnesty International, and other human rights organizations condemned the act as being incompatible with democratic traditions. Despite the act, the number of terrorist acts increased. Guerrillas began to hit targets of high symbolic value such as post offices and police outposts, provoking government counterattacks. As an increasing number of civilians were caught in the fighting, Tamil support widened for the "boys", as the guerrillas began to be called. Other large, well-armed groups began to compete with LTTE. The better-known included the People's Liberation Organization of Tamil Eelam, Tamil Eelam Liberation Army, and the Tamil Eelam Liberation Organization. Each of these groups had forces measured in the hundreds if not thousands. The government claimed that many of the terrorists were operating from training camps in India's Tamil Nadu State. The Indian government repeatedly denied this claim. With the level of violence mounting, the possibility of negotiation became increasingly distant.........................

**அகவைப்பா: 34**

## 1980:வாணிமகள் வீணை செய்தாள் !

**(பாவடிவம்:பொது)**

கஞ்ச மலர்க்கையும் பஞ்செனும் மேனியும்
கருணை யியற்றிடு மலர்முகமும்
கொஞ்சி வழிந்திடு குறுநகையும் தோகைக்
கோல மயிலிடுஞ் சிறுநடமும்
விஞ்சு வனப்புய லாகி எழுந்திட
வீணை இசையினில் நாதஞ்செய்யும்
வஞ்சி மகளொரு வண்ணமுதாள் எந்தன்
வாசல் வந்தெழிற் கோலம் செய்தாள்!

தெள்ளு தமிழினில் தீஞ்சுவையில் கன்னற்
தேமதுரம் தரும் தேன்மழையில்

கொள்ளை கொடுத்தெழு கோடி தமிழ்க்கவி
கொட்டி யளந்திடும் என்கவிஞர்
பள்ளி மகிழ்ந்தவர் பாங்கினில் ஆடிடும்
பாவை என்றவள் அருகணைந்து
வெள்ளைத் தாமரை மீதில் அமர்ந்தொரு
வீணை செய்தாள் அந்த வாணிமகள்!

**-எழுபதுகளில் ஈழநாடு வாரமலரில் வெளியாகியது**

அகவைப்பா: 35

# 1981: வாசகசாலை எரிப்பு!

(பாவடிவம்:எழுசீர்ச்சந்த விருத்தம்)

தமிழன்னை யோடுந் தறிகெட்ட தாகி
தழல்நின்ற வாறு தொடருங்
குமிழான வாழ்வு கொடிகட்டி நின்ற
குலக்கல்வி யோடுங் குறியாய்
செமியாத தாகிச் சிங்காளர் தீட்டுஞ்
சுரையான போதைச் சுமந்து
உமியாயெ ரிந்து உலகாய றிந்த
உதிவாச சாலை போச்சாம்!

மொழியாடிச் சிங்க முடிச்சோடு பண்டா
முத்தாக்கி ஆளும் மிதப்பில்
அழியாத வாறு ஐம்பத்தி யெட்டு
அடுப்பாக்கிக் கொன்ற அடியாய்ச்
சுழியாக வைத்து சொல்லாட்சி எல்லுஞ்
சிங்காளர் வாக்கு மாற்றும்
பழியாக நின்ற படியாக யாழின்
படிப்பாகும் பள்ளி முடித்தார்!




அன்றாகி ஆர கூட்டுர்வ லத்தில்
அம்பாகி வந்த படைஞர்
சென்றாடி மொய்த்த சிதைப்போடும் ஈர்வர்
செத்தார்க ளாமென் றுரைத்து
ஒன்றாக மொத்தும் இருளோடு வந்து
இட்டார்கள் தீயும் என்றார்!
நன்நீர மைச்சர் நலக்காமி னிய்யும்
நகர்யாழில் நிற்கும் போதே!

வணநேய டேவிட் வசமான நூற்கள்
வருங்காலத் திற்கு உகவே
துணையாக நின்று துரந்தாளுஞ் சாலை
துளிராக்கி வைத்த ரதனால்
மணையார்க ளிட்ட மலையான தீயில்
மனம்வேக மார்ப டைப்பில்
அணைந்தாகி னாரே! அழிவாக்கி நின்ற
அசிங்கமும் ஆட்சி யதுவோ?

எரிவான சாம்பல் இடம்மேடு ஆகி
இடுகாடு ஆச்சு இனிமேல்
புரியாத மாந்தர் புதைசாம்பர் இட்ட
பொற்கோவில் மீண்டும் வருமோ?
சொரிகின்ற கண்ணீர்க் குளத்தோடு அந்நாட்
சொல்வேந்தர் கூடி அழுதார்
நெறியான ஆட்சி ஒருபோதும் இல்லை
என்றென்னச் சொல்லி அழுதார்!

## Burning of Jaffna library
## From Wikipedia, the free encyclopedia

The burning of the Jaffna library was an important event in the Sri Lankan civil war. An organized mob of Sinhalese origin went on a rampage on the nights of May 31 to June 1, 1981, burning the Jaffna public library. It was one of the most violent examples of ethnic biblioclasm of the 20th century.Term[›][1] At the time of its destruction, the library was one of the biggest in Asia, containing over 97,000 books and manuscripts......

...............

### Background

The library was built in many stages starting from 1933, from a modest beginning as a private collection. Soon, with the help of primarily local citizens, it became a full-fledged library. The library also became a repository of archival material written in palm leaf manuscripts, original copies of regionally important historic documents in the contested Contest[›]political history of Sri Lanka and newspapers that were published hundreds of years ago in the Jaffna peninsula. It thus became a place of historic and symbolic importance to all Sri Lankans.

Eventually the first major wing of the library was opened in 1959 by then Jaffna mayor Alfred Duraiappah. The architect of the Indo-Saracenic style building was one Narasimhan from Madras,

India. Prominent Indian librarian S.R. Ranganathan served as an advisor to ensure that the library was built to international standards. The library became the pride of the local people as even researchers from India and other countries began to use it for their research purposes.

The riot and the burning[edit]On Sunday May 31, 1981, the Tamil United Liberation Front (TULF), a regionally popular democratic party, held a rally in which three majority Sinhalese policeman were shot and two killed.

**Political situation**

That night police and paramilitaries began a pogrom that lasted for three days. The head office of TULF party was destroyed. The Jaffna MP Mr. V Yogeswaran's residence also destroyed.

Four people were pulled from their homes and killed at random. Many business establishments and a local Hindu temple were also deliberately destroyed.

On the night of June 1, according to many eyewitnesses, police and government-sponsored paramilitias set fire to the Jaffna public library and destroyed it completely. Over 97,000 volumes of books along with numerous culturally important and irreplaceable manuscripts were destroyed. Among the destroyed items were scrolls of historical value and the works and manuscripts of philosopher, artist and author Ananda Coomaraswamy and prominent intellectual Prof. Dr. Isaac Thambiah. The destroyed articles included memoirs and works of writers and dramatists who made a significant contribution toward the sustenance of the Tamil culture and those of locally reputed physicians and politicians.

The office of the Eelanaadu, a local newspaper, was also destroyed. Statues of Tamil cultural and religious figures were destroyed or defaced.

Nancy Murray wrote in a journal article in 1984 that several high-ranking security officers and two cabinet ministers were present in the town of Jaffna, when uniformed security men and plainclothes[6] mob carried out organized acts of destruction.[7] After 20 years the government-owned Daily News newspaper, in an editorial in 2001, termed the 1981 event as an act by goon squads let loose by the then government.

## அகவைப்பா: 36

# 1982:நாளோடும் எரிந்த தமிழினம்!

(பாவடிவம்:சந்த வஞ்சி விருத்தம்)

எந்தோர் ஆட்சியும் வந்தாலும்
வெந்தோர் ஆகிடக் கொன்றோதும்
அந்தோ வென்குரல் அல்லாமல்
சிந்தாய்த் தீர்வெதும் இல்லையம்மா!

நன்றார் அன்பராய் நின்றாலும்
பொன்னார்ச் சோதரர் போன்றாலும்
வன்னார் கொல்லுறை வைத்தேதாம்
மின்னார் சரித்திரஞ் செய்தாரே!

கத்திக் காரிரை வைத்தோராய்
மொத்தி வாரிரை யிட்டோராய்
நித்தம் செய்திடும் ஆட்சியரால்
புத்தத் தத்துவம் போச்சேயாம்!

காவியு டையினர் நாடாளக்
கூவிய பண்டவைக் கொன்றாரே!
ஓவிய லங்கவின் ஓவியத்தில்
ஓட்டை யிட்டுமே காட்டிவிட்டார்!

ஐம்பத் தெட்டிலும் அதன்பின்னும்
எம்பிப் தாக்கிய அத்தனையும்
நம்பப் பாலதாய் இல்லையென்றே
கும்பத்தி லாயுதம் கொள்ளநின்றாா!

வேறு

பதறாதீர் இப்பதவி போதும் போதும்!

சாண்ஏற முழம்போன தமிழர் காதைச்
சரித்திர மென்றேனையா புலம்பு கின்றீர்
வீண்வம்பு சோலிவிர தங்கள் என்ற
விண்ணாப்பும் விட்டென்றன் பின்னே வாரும்!
ஆண்டாண்டு நூறுநாள் ஆகி னாலென்
ஆட்சிமன்றம் இருக்கிறதே அழுதும் கேட்க
நானும்ஒரு தமிழ்எம்பி இருக்கும் போதில்
நாதியில்லை என்றெவர்க்கும் பயமும் வேண்டாம்!

மரமரிந்தால் துண்டுவிழும் தமிழர் மாண்பு
மண்ணுமது அரிபடுமா? மடையீர் கேண்மின்
சிரச்சேதம் ஈதென்று சிலபேர் சொல்லும்
சிங்காரக் கூச்சலெல்லாம் சுயந லங்கள்
புருடாவாய்ப் பலகதைகள் புகல்வார் அந்தப்
பொய்யுரைகள் அத்தனையும் நம்ப வேண்டாம்!
இரடாநீ எங்கநிலம் இடித்து வந்து
இடர்தந்தால் எமக்கென்ன இடியா வீழும்!

சதையிருக்க எலும்பாடும் சரிதம் போன்று
சந்ததியார் குடியாடச் சாற்றும் போதில்
மிதமாகி யிருந்திட்டால் ஒன்றும் வாரா
மிலேச்சர் என்றெல்லாம் சொல்வார் விடுமின்
கதருடுத்த காந்தியையும் சுட்டான் கண்டீர்
கல்லெறியும் எனக்குவரும் அதனால் என்ன?
பதர்படைத்த தமிழினத்தைக் காக்க வந்தேன்
பதறாதீர் இப்பதவி போதும் போதும்!

**-அகாலத்தில் முடிந்த யாருக்கும் இப்பாடலுக்கும் சம்பந்தமில்லை. அரசாங்கத்தோடு நின்றிருந்த மூவர் காலத்தில் சுதந்திரனில் வெளிவந்த கவிதை**

**TAMIL NATION .ORG-DESTRUCTION OF JAFFNA PUBLIC LIBRARY - MAY/JUNE 1981**

Perversity of Pyromaniacs; part 1 – Revisiting the June 1981 Torching of Jaffna and Perversity of Pyromaniacs Part 2: Amirthalingam's Speech on the Torching of Jaffna in May-June 1981]

"...a large group of police (estimated variously from 100-200) went on rampage on the nights of May 31-June 1 (1981) and June 1-2 burning the market area of Jaffna, the office of the Tamil Newspaper, the home of the member of Parliament for Jaffna and the Jaffna Public Library... The widespread damage in Jaffna as a result of the actions of the police were evident during the visit of the ICJ observer in Jaffna in August...

The destruction of the Jaffna Public Library was the incident which appeared to cause the most distress to the people of Jaffna. The ICJ observer heard many comments from both Sinhalese and Tamils concerning the senseless destruction by arson of this most important cultural centre in the Tamil area.

அகவைப்பா: 37

# 1983: மீண்டும் இரத்தக் கடல்!

(பாவடிவம்: பன்னிருசீர்ச் சந்த விருத்தம்)

மொழியாலும் மண்ணோடும் வேரோடும் பெயர்ந்தோடும்
விதமாக வைத்த அரசும்
மிதமான வகையின்றி வெல்லாமுந் தாக்கியே
வீறாப்புக் கொண்ட வாறும்
அழிவாலும் படையாலும் ஆயிரம்பல் லாயிரம்
ஆருயிர் வீழ்ந்த தாலும்
அள்ளுவார் கொள்ளையும் அகதியென நிலம்போக
அலைந்தார்என் துயர வாழ்வும்
பழியாலுங் கழிவான பதைப்போடும் மாத்துயர்ப்
பதைப்போடும் ஆண்ட தாலே
படிப்போடும் பதவியொடும் பட்டார்கள் என்றதமிழ்ப்
பழிவாங்கக் கண்ட தாலும்
விழிப்போடும் இளைஞர்கள் வீங்குபோ ராடவென
வெளிப்பட்டார் இந்த வேளை
விண்ணென்று புறப்பட்டு வேகமாய் நின்றாராய்
வெம்போர்க்கு வந்து விட்டார்!

யாழ்ப்பாணப் பாய்க்கடை வசநூல கத்திலும்
வார்த்தவோர் நெருப்பி னோடும்
வாருருறும் படியாக வல்லாட்சிக் கார்படை
வாட்டிடுங் குணத்தி னாலும்

காழ்ப்பாகி வைத்ததும் மீட்பார்கள் இன்றிய
கனலாகிப் போன தன்றோ!
கனிந்தவல் லிளைஞர்கள் கையிலே ஆயுதங்
கண்டதும் உண்மை யன்றோ!
தாழ்ப்பாளே யிட்டொரு தருந்தீர்வு வைத்திடத்
தகவிலும் இல்லை யானார்!
தமிழ்ப்படை வளர்ந்திடத் தரசியல் ஆக்கியே
தந்ததும் உண்மை யானார்!
சூழ்ப்பானை ஆனதாய்க் கொட்டிய ஆட்சியாய்க்
கொதித்தது இலங்கை நாடே!
கிண்ணென்று இளைஞர்கள் கொண்டபோர் ஆற்றிடக்
கொடுத்ததும் இலங்கை நாடே!

பல்வேறு தாக்குதல் படைஞரும் இளையோரும்
பங்குக்கு எடுத்த நாளில்
பதைப்பான பயணங்கள் பறந்தோடும் மக்களென
பல்நாளும் தொடர்ந்த நாளில்
நெல்வேலி ஊர்ந்துவரும் நேரான இராணுவ
நிலக்கீழாய் வெடித்த குண்டு
நிகழ்வாலும் பதின்மூன்று உயிரோடிப் போனதில்
நெருப்பாக்கி இலங்கை மன்றில்
பொல்லாத கடுப்பேற்றி புரிந்திட்ட கொலையாடல்
பூகம்ப மான வாறே
பொன்தமிழர் மூவாயி ரத்தோடு செத்தனர்
பொருளதும் கொள்ளை போகச்
சொல்லாத தீமையிற் கொட்டுண்ட இரத்தத்தில்
கோலத்தை மாற்றி விட்டார்!
சுதந்திரம் பெற்றாலும் சீவிய தலைகளில்
சீலத்தை எழுதி விட்டார்!

உண்மையில் நித்திரை யுருக்கொண்ட பாசாங்கில்
உயிராடப் பார்த்து நின்றார்!
உமியாட்சி என்றதின் உள்ளாக்கம் கொண்டதாய்
இனத்தாடல் விட்டு வைத்தார்!
புண்பட்ட சதையாகிப் போட்டதை எடுஎன்ற
பிச்சைதான் தீர்வு என்றும்
போராடும் படியான பித்துக்குத் தண்டனை
பொல்லாத வாதை யென்றும்

கண்டாரே உருவாக்கம் கடிவாளம் இல்லாத
காட்டாறாய் ஓட விட்டுக்
கலவரம்தான் பதில்என்ற கணக்காக எரியவிட்ட
கைங்கரியம் மீண்டு மிட்டுக்
கொண்டாடி நின்றதனைக் கூட்டாகப் பாருலகம்
குறிப்பிட்டு வைத்த தையா!
கொடும்வதைக ளெனும்சரிதம் கொண்டிடவும் லங்கவொடும்
குறியீடு வந்த தையா!

**Black JulyFrom Wikipedia, the free encyclopedia**

**Black July**

Part of Riots in Sri Lanka

..............

Black July is the common name used to refer to the anti-Tamil pogrom and riots in Sri Lanka during July 1983. The riots began as a response to a deadly ambush on 23 July 1983 by the Liberation Tigers of Tamil Eelam, a Tamil militant group, that killed 13 Sri Lanka Army soldiers. Beginning in the capital Colombo on the night of 24 July 1983, the riots spread to other parts of the country. Over seven days mobs of mainly Sinhalese attacked Tamil targets, burning, looting and killing. Estimates of the death toll range between 400 and 3,000. 8,000 homes and 5,000 shops were destroyed. 150,000 people were made homeless. The economic cost of the riots was $300 million. A wave of Sri Lankan Tamils fled to other countries in the ensuing years and many thousands of Tamils youths joined the militant groups.

Black July is generally seen as the start of full-scale Sri Lankan Civil War between the Tamil militants and the government of Sri Lanka. July has become a time of remembrance for the Sri Lankan Tamil diaspora community around the world........

அகவைப்பா:38

# 1984:இந்திரா மறைவும் ஜே.ஆர் உலாவும்

(பாவடிவம்: சந்தக் குறட்டாழிசை)

அவல ஆடியென அதிர வாடியொரு
அலறு கின்றமன மதனிலே
துவள நின்றவொரு நினைவு வானதிர
திரளு கின்றதிது நாளிலே!

அறிவு கொண்டமன அரசு என்றபடி
அனைய தீர்வுஎன அறியவே
ஒளிவு மறைவாக எதுவு மில்லாத
இனிது ஆற்றுவது இறையதே!

இதய முனையாக உறவு வகையாக
இயலு மரசாட்சி ஏற்பதே
உதய அரசுமிடி வறுமையி
உதவு பேராட்சி என்குமே!

எனவு மெண்ணமொரு மனது பாதித்த
இதய வெம்பலுரு வானதே!
கனவு மெய்ப்பதொரு காலமினி இல்லையென
கனலு போர்வளரக் கண்டதே!

அமிரு(ம்) தலையான நிலவு நிலைமாறி
அகல போராளர் பக்கமே
அமைய வோரியக்க மாக முனையாக
அமையு மென்றநிலை போனதே!

உலக வலமெடுத்த ஜெயவ தனாசீன
உரசி யத்தோடு இந்தியா
கலக போர்முடிய கருவு பேச்சோடு
கனர கம்வரவு கண்டரே!

அமெரி காதனது அனைய நாடுஎன
அமைய போர்க்கருவி போனதே!
தமது பேராடி தமைக்க வில்லாது
தகுதி யாயுதமும் வந்ததே!

இதுவு நேரமது இந்தி ராதனது
இதய உயிராட நின்றதே!
உதவி தமிழாய உலவு நிலைபோக
இடியு மென்றாடி வீழவே!

எதிரு புதிராக எழுது போராடி
ஈழ லங்கமென ஆகவே
அதிரு மூராடி ஆகு பல்நூறு
ஆமி சனமாக போனதே!

**It became abundantly clear that without the participation of militant youths the TULF had lost its leadership role.**

.... Jayewardene discussed the possibility of American military assistance to fight Tamil militancy....

......It is believed that the arms supplied by Pakistan, China and Singapore to Sri Lanka were actually from the US, which did not wish to be seen to be directly involved.

It was reported that at least 100 gunboats and 50 helicopter gunships were supplied by the US through Pakistan and China...............

**........On October 31, 1984, Indira Gandhi was shot down while walking from her house to her office in New Delh**

............According to M R Narayan Swamy, the author of Tigers of Lanka: From Boys to Guerrillas, the Sri Lankan armed forces were happy at the news of the death of Indira Gandhi. He writes that Sri Lankan soldiers danced and were happy that Indira Gandhi was at last dead. "In Jaffna, Sri Lankan soldiers danced in the open on receiving the news of Gandhi's death, taunting Tamil passers-by: Amma Enge? Amma Enge? .

......On December 4, Sri Lankan army personnel shot and killed at least 90 Tamils unarmed civilians including, old men, women and children. They were all shot in cold blood by army personnel in reprisal for the killing of one of their colleagues in a landmine explosion on the same day.....

**THANKS: SRI LANKA: THE UNTOLD STORY**

**Chapter 31: Indira Gandhi - a casualty of terror By K T Rajasingham**

## அகவைப்பா:39

# 1985:கிளிநொச்சி விட்டுத் தீவகம் வந்தேன்!

(பாவடிவம்: சந்த வஞ்சித்துறை)

வடகி ழக்காக
அடர நின்றபோர்
படர நின்றதோர்
திடலு மதிரவே!

பொங்கு போரிலோர்
தங்கு தடையிலார்
வெங்க ளத்திலே
எங்கு மாக்கினர்!

ஆமி வந்திடும்
சாமி என்றிடக்
கூவி யோடினேன்
நோவி லதிரவே!

கரடி போக்கெனும்
வருகி ளிநொச்சியார்
பெருகு போரிலே
உருக விலகினேன்!

தீவ கத்திலே
மேவு வாழ்வொடுஞ்

சாவு மிரத்தமும்
யாவும் பரந்ததே!

மீது கடற்படை
போது தாக்கிடும்
போது குண்டிலே
வாதை படைத்தநாள்

நின்ற நிலத்திலே
இன்றி விலகினேன்
அன்று புறத்தொடு
சென்று விட்டனே!

### அகவைப்பா: 40

## 1986: என்னை வரவேற்பதில் மகிழ்ந்த கனடா நாடு!

(பாவடிவம்: கும்மி)

நுங்கைய றுத்தது போலுங்கொற் காட்சியில்
பூதக ணங்களாய் ஆனதி னால்
பொங்குமி லங்கையின் பொந்தைவிட் டேகியே
பொற்கன டாவினில் பூத்துவிட் டேன்!

இன்கன டாவெனை ஏற்குமிப் போதிலே
இன்முக மாய்வர வேற்கிற தே!
என்றொரு மாதுமை கைலாகு தந்தெனை
என்னையும் மானிட னாகவைத் தாள்!

என்னைய திர்ச்சியில் இன்னெழிற் பெண்ணவள்
ஏற்கவும் நாடும கிழ்கிற தாய்ச்!
சொன்னபொன் வார்த்தையைச் சொல்லவே கேட்டிடுஞ்
சொர்க்கமெங் காகிலும் இல்லையம் மா!

கண்ணீரில் வன்முறை கத்தியும் பொல்லாலும்
கண்டதுண் டாமெனக் கண்டத னால்
மண்ணீதில் இப்படி வார்மணி நாட்டிலே
வந்துளேன் நன்றியே ஏர்முரு கா!

வாக்குமூ லத்திலே மன்நில மோதலும்
வாதைக ளோடுமாய் வார்ந்துறைந் தேன்
காக்குமென் னாருடம் காட்டவோர் நாடிலை
காக்கவும் ஆளிலை என்றுரைத் தேன்!

தீர்வினை வைக்கவும் தேசம டங்கிலும்
துன்பம்வி லக்கவும் ஏதுமில் லை!
யார்வினை என்றுமே யார்த்தவென் வார்த்தையில்
அம்புபோல் ஆகினர் இங்குமம் மா!

நன்றியி றைவனே நன்றியென் றேமொழி
நண்ணவ ணங்கினேன் நன்னிறை யே!
என்நிலத் தேயொரு இந்தம னத்தொடும்
என்னிலை வாருமோ யானறி யேன்!

இந்தநி லையினில் எட்டுமா றெங்கணும்
ஏற்றகி ழக்கொடும் கொலையா டி
வெந்தனர் நூறுநூ றாமென இவ்வாண்டில்
வென்தமிழ் மாந்தர்கள் போயின ரே!

அகவைப்பா:41

## 1987:அமைதிப் படையும் ஈழப்படையும்!

(பாவடிவம்: நொண்டிச்சிந்து)

அன்பிலே வார்த்தெடுத்த-புத்தன்
அகத்தோடும் ஆட்சியரே கேட்டிடுவீரே!
ஒன்றெனச் சுதந்திரத்தின்-கொண்ட
ஒற்றுமை குலைந்தாடக் கொண்டதென்ன?
நன்றென இருந்தார்க்கு-எந்த
நாளிலும் வன்முறை வந்ததென்ன?
என்றுமே தமிழர்களும்-இந்த
இழிநிலைக் காளாகி மாள்வதுவோ?

என்றவோர் மனத்துடனே-கனடா
ஏழொடும் மாடியில் நின்றிருந்தேன்
இன்றுபோர் என்பதுவாய்-வந்த
எடுபேசிச் செய்தியில் இடிந்துவிட்டேன்
நன்றென ஒருசாதி-மற்றும்
நாயென இன்னொரு சாதியுண்டோ?-தமிழ்

குன்றிடும் கல்வியதாய்-விட்ட
கூட்டுங் குறைப்பும்போர்க் காரணியாம்!

எத்தனை நிலம்போச்சு-சொந்த
நிலத்தவர் எல்லாமுந் துரத்தினரே
சொத்துகள் எரிந்ததவே-கற்புச்
சூறையாகவே பெண்கள் செத்தனரே!
இத்தனைக்கும் பதிவேடு-கணினி
ஏட்டில் இருப்பது மறைந்திடுமா?
சுத்தமென் றாட்சியதே-இலங்கைச்
சுதந்திரம் வாழ வழிவகுக்கும்!

போரெலாம் தொடர்ந்ததுவாய்-உண்ண
பொழுதெலாம் பட்டினி ஆனதுவாய்
ஊரெலாம் கூவியதாய்-போர்
உந்தப்போய் நிலமெலாம் எரிந்ததுவாய்
நீரெலாம் மோதியதாய்-காற்று
நிலமெலாம் கந்தக மானதுவாய்
பாரெலாம் பார்த்ததுவாய்-எந்தப்
பாதையும் போரென நின்றதுவே!

இந்தநிலை யாகலுமாய்-நாளும்
எங்குமாய் வடகிழக்கு ஆனதுவாய்
வெந்துசா வாகையிலே-முற்றும்
வெங்கணும் மக்களைக் கொல்கையிலே
வந்ததுவே யமைதிப்படை-நாட்டு
வாதையைப் தீர்ப்பதற் காகவென்றே
இந்தியப் பிரதமராம்-ராஜீவ்
ஜெயவர்த்தனா ஒப்பந்தம் எழுதிடவே!

அரிசிப ருப்பொடுமாய்-வந்த
அமைதிப்ப டையெனும் பெயரதுவாய்
தெரியவே உறுதிமொழி-போர்
செய்பவர்க்கே யுத்தரவாத மளிப்பதுவாய்
வரிக்குவரி யாய்மொழியாய்-உறுதி
வாரொடும் பிரபர்க்கு வழங்கியதாய்
உரித்தபல் லாயுதமும்-இயக்கம்
எல்லாரி டமிருந்துமாய் எடுத்தனரே!

இந்தவகை யொடும்புலிகள்-கொண்ட
இயக்கத்தை அழிப்பதும் நோக்கமதாய்
வந்ததே அமைதிப்படை-என்னும்
வடிவமும் பின்னராய் தானுணர்ந்த
உந்தலில் இந்தியத்தார்-படை
யோடுசமர் தானென உரைத்திடவே
முந்துபவான் எனும்பெயரில்-யாழ்மீது
மூண்டதே இந்தியத் தாக்குதலே!

திலீபனே தன்சாவரையாய்-உண்ணா
திருந்தவா றிந்தியம் ஈர்ப்பதுவாய்
வலிந்துவ ழைத்திடவும்-அந்த
வார்த்தைக்கு யென்றொரு மதிப்புமின்றி
நலிந்திட வைத்ததுவும்-எந்த
நாளிலும் காந்திக்கும் மேலதுவாய்
பொலிந்திட நின்றவனாய்-உயிர்
போம்வரை யாக்கினன் சரித்திரமே!

## INDIAN PEACE KEEPING FORCE
## From Wikipedia, the free encyclopedia

........................

The Sri Lankan government, deducing a decline in support for the Tamil rebels from India, tried to rearming itself extensively for its anti-insurgent role with support from Pakistan, Israel, Singapore, and South Africa. In 1986, the campaign against the insurgency was stepped up. In 1987, retaliating against an increasingly bloody insurgent movement, the Vadamarachchi Operation (Operation Liberation) was launched against LTTE strongholds in Jaffna Peninsula. The operation involved nearly 4,000 troops, supported by helicopter gunships as well as ground-attack aircraft. In June 1987, the Sri Lankan Army laid siege on the town of Jaffna. This resulted in large-scale civilian casualties and created a condition of humanitarian crisis. India, which had a substantial Tamil population in South India faced the prospect of a Tamil backlash at home, called on the Sri Lankan government to halt the offensive in an attempt to negotiate a political settlement. However, the Indian efforts were unheeded. Added to this, in the growing involvement of Pakistani advisers, it was necessary for Indian interest to mount a show of force. Failing to negotiate an end to the crisis with Sri Lanka, India announced on 2 June 1987 that it wound send a convoy of unarmed ships to northern Sri Lanka to provide humanitarian assistance but this was intercepted by the Sri Lankan Navy and forced to turned back.

Following the failure of the naval mission the decision was made by the Indian government to mount an airdrop of relief supplies in aid of the beleaguered civilians over the besieged city of Jaffna. On 4 June 1987, in a bid to provide relief, the Indian Air Force mounted Operation Poomalai. Five Antonov An-32s under fighter cover flew over Jaffna to airdrop 25 tons of supplies, all the time keeping well within the range of Sri Lankan radar coverage. At the same time the Sri Lankan Ambassador to New Delhi, Bernard Tilakaratna, was summoned to the Foreign Office to be informed by the Minister of State,

External Affairs, K. Natwar Singh, of the ongoing operation and also indicated that the operation was expected not to be hindered by the Sri Lankan Air Force. The ultimate aim of the operation was both to demonstrate the seriousness of the domestic Tamil concern for the civilian Tamil population and reaffirming the Indian option of active intervention to the Sri Lankan government.]........................

**Operation Pawan**

**From Wikipedia, the free encyclopedia**

Operation Pawan was the codename assigned to the operation by the Indian Peace Keeping Force (IPKF) to take control of Jaffna from the Liberation Tigers of Tamil Eelam (LTTE), better known as the Tamil Tigers, in late 1987 to enforce the disarmament of the LTTE as a part of the Indo-Sri Lanka Accord. In brutal fighting lasting about three weeks, the IPKF took control of the Jaffna Peninsula from the LTTE, something that the Sri Lankan army had tried and failed to achieve for several years. Supported by Indian Army tanks, helicopter gunships and heavy artillery, the IPKF routed the LTTE, at the cost of 214 soldiers....

## அகவைப்பா: 42

# 1988: பெயர்தான் அமைதிப்படை

(பாவடிவம்: இலாவணி)

இந்தியத்தார் தில்லியிலே ஈர்த்தபிர பாகரனார்
இரஜீவா ரோடுமெனப் பேசிப் பேசி
எந்தநிலை யாயிடினும் என்னினத்தின் சம்மதமும்
இன்றியொரு முடிவில்லை என்றார் வீசி!

சொன்னபடி சுதுமலைச் சுடரம்மன் ஆலயத்துச்
சிரசாரும் பந்தலிலே நின்று.. நின்று
அன்றுரைத்த செம்மொழியை ஆயிரம்பல் லாயிரத்து
அகமக்கள் மீதுரைத்தார் அன்று.. அன்று

இந்தநிலை மாறியொரு சொந்தநிலை இந்தியத்தின்
கந்த(ல்)நிலை யாக்கியதே காலம் காலம்!
வந்தவினை மாறியொரு வன்செயலி லானதொரு
வண்ணமதாய் மாறியதே ஈழம் ஈழம்!

உலங்குவா னூர்தியிலே இறங்கியாழ் வீதியிலே
இந்தியத்துப் படைபோரும் ஓடி ஓடி
புலிகளை யும்பிடித்துப் போனதில்லை பலராகப்
போயிறந்தார் வீதிதொறும் தேடித் தேடி!

போர்தவிர்க்க வந்தவர்கள் போரெடுத்துப் போனநிலை
புவியார்ந்த நல்லறிவு இல்லார்... இல்லார்!

ஊர்தவிப்புக் காகவந்து ஊரெரித்து நின்றதெல்லாம்
உள்ளுணர்வு இல்லையெனும் ஒன்றாம்... ஒன்றாம்!

யாழ்நகர வைத்தியசா லையிலொடும் தாக்குதல்கள்
பாருலகத் தத்துவத்தில் இல்லை இல்லை!
பாழ்கொண்டு வல்லைநகர் பட்டெரித்த வற்காதைப்
படைப்பினிலே மானிடமே இல்லை.. இல்லை

கற்பழிப்பு வல்லுறவு கடுங்கொலை யும்முடனே
காந்திதேச இராணுவம் தந்தார் தந்தார்!
இற்றையொரு வியட்னாமாய் இலங்கையிற் பாரதமே
இடுங்காதை எல்லாமும் விந்தை.. விந்தை!

**Operation Pawan**
**From Wikipedia, the free encyclopedia**

The first IPKP operation was launched on 9 October 1987. Codenamed Operation Pawan (Hindi for Wind), it was expected to neutralise the LTTE operational capability in and around Jaffna. This included the capture or neutralisation of the LTTE's chain of command which was expected to leave the rebel movement directionless in the face of the impending assault on the LTTE strongholds by the IPKF.

## அகவைப்பா: 43

# 1989:திரும்பப்போன இந்தியா திரும்பவைத்த இலங்கை!

(பாவடிவம்: காவடிச்சிந்து)



இந்தியா வந்தாடி நின்று-மக்கள்
கொன்று-வலி
தந்து-படச்
சிந்திய தாம்கோடி நொந்து-இது
செகமேயொடும் பழியாகிய துருநாடுகள் வழீயோடிடச்
செய்பழி யாமிந்த எண்ணம்-இதிற்
சேர்ந்த தெல்லமும் சுண்ணம்!

சிந்தார்பழி தந்தாரொடுஞ் சென்று-வகை
என்று-இடர்
கொன்று-குறு
சொல்லுறு மாலவர் விண்டு-என்ன
தேரும்வழி யாரும்தொடச் சேரும்படி யாகுமென
சிந்திப் பாரவர் கண்டார்-என்ற
செய்தியே மிச்சம் உண்டார்!

நாடும் அடைந்ததாய்த் தீர்வு-ஒரு
கூர்வு-மக்கள்
சேர்வு-என்ன
நன்றென ஆனதென் றோரு-என்றும்
கூடாதவர் தாராதவர் பாராதவர் என்றானது
கூத்தாம் அரசியல் தானே-இது
கிட்டா தொன்றுமே தானே!

ஓடும்படி போகும்படி சொல்லி-விடை
நல்கி-பேசித்
தில்லி-வைத்து
உடன்பாடென நாளேவரம் மல்கி-இது
பலவாயிரம் படைபோகிடப் பலனாமெனப் பகுத்தாரது
படிப்பின் அனுபவம் தானே-ஆங்கே
பட்டுத் தெளிந்தமை காணே!

## Operation Pawan
## From Wikipedia, the free encyclopedia

Indian forces were accused of indulging in number of civilian massacres, Involuntary disappearances and rapes during their time in the Northeastern province of Sri Lanka.[20][21] These include complicity in the incidents such as Valvettiturai massacre in which on 2, 3, and 4 August 1989 over 50 Tamils were massacred by the Indian Peace Keeping Force in Valvettiturai, Jaffna. In addition to the killings over 100 homes, shops and other property were also burnt and destroyed. Another notable incident was the Jaffna teaching hospital massacre on 22 October 1987, following a confrontation with Tamil militants near the hospital, IPKF quickly entered the hospital premises and massacred over 70 civilians. These civilians included patients, two doctors, three nurses and a paediatric consultant who were all in uniform. The hospital never completely recovered after this massacre. The IPKF was also accused of complicity in murder of Sinhalese civilians in the 1987 Trincomalee massacre where according to Asian Times in August 1987, a number of majority Sinhalese civilians were massacred. The then Sri Lankan government accused the Madras Regiment posted in the Trincomalee district of complicity, although the Indian officials denied responsibility, they withdrew the Madras Regiment from Trincomalee district.

## அகவைப்பா: 44

# 1990: அடியும் முடியும் காணாது அகன்ற அமைதிப்படை

(பாவடிவம்: அறுசீர்ச் சந்த விருத்தம்)

வன்நாடு என்றாரும் வற்றாத நீதிகலம்
வகைநாடு என்பரதனால்
தென்நாடு தண்தமிழின் தேர்நாடு என்பதுவுஞ்
சிறகாக நின்றவதனால்
வன்பாடு ஈழமதில் மன்தீர்வு வகையாட
வந்தவரு மென்பரதனால்
பொன்பாடு மிந்தியமின் பொன்னேடு காணுமென
புத்தகமுஞ் செய்தாடினோம்!

கொல்லாடி வன்தொடரக் கொந்தாகிப் போயரசு
கொள்நாடு ஆகுமதனால்
எல்லோரு மெம்பியொரு இத்தான வார்க்குதிரை
ஏறிவர நின்றபடியால்
சொல்லாலுஞ் செப்பாலும் சேராடிப் பல்நேயச்
சிந்தாக நின்றவதனால்
வல்நாடு இந்தியமும் வந்தென்ன செய்யுமென
வடிவாகச் சொல்நின்றதே!

என்றாலு மெம்மவரின் ஈர்ப்பெழுத வந்தவரின்
மேலான தொண்டுவதனால்
நன்றாகப் புரியாது நன்றெழுத வந்தவரின்
நற்பாடம் ஒன்றுஅதனால்
சென்றாருஞ் சென்னையிடச் சென்றுவர வேற்பிடாத
சொற்கருணா மூப்பரதனால்
வென்றான தொண்டுஎன மிக்கோருஞ் சொல்லாத
வினையான மீட்டலிதுவாம்!

**THANKS: ASIA TIMES**
**SRI LANKA: THE UNTOLD STORY**
**Chapter 43: Aftermath of the Indian withdrawal**
**By K T Rajasingham**

**......**On March 6, 1990, two chartered ships, the Hrshavardan and the Tipu Sultan arrived at the port of Madras, with 1,375 members and supporters of the EPRLF, but Karunanidhi refused them entry, because they carried anti-LTTE Tamils. The ships were

subsequently diverted to Vishakapatnam in Andhara Pradesh and Biju Patnaik, the Congress party Chief Minister of Orissa, agreed to take them as refugees in his state. They were sent to Makangiri by road from Vishakapatnam. ....

....On March 11, Mahabaharat - an Il-76 Soviet-made aircraft - carried from Trincomalee 275 persons, including the EPRLF General Secretary, K Patmanabah and the two Tamil ministers of the North-East Provincial Government and others, to Bhubaneswar, in Orissa state....

### அகவைப்பா: 45

# 1991: இந்தியத்தின் மாகுடும்ப வாரிசு இரஜீவின் மறைவு

(பாவடிவம்: சமநிலைச் சிந்து)



எல்லாம் நமதெண்ணம்-என்று
எதுவும் நடக்காதே!
வல்லார்ப் பேருலகம்-எந்த
வாறும் கிடக்காதே!

ஆலோசர் யாரென்றும்-அரசம்
அளப்பார் தேர்வென்றும்
மாலோகப் பிரசன்னம்-பார்த்தே
வார்க்கும் ஜெயமென்றும்!

இந்திரா காந்தியவர்-அவர்
எதிர்த்து நீந்தியதும்
இந்தப் பாருலகில்-அவர்
இடத்தை நிரப்பாதே!

சஞ்சய் காந்தியவர்-தாயின்
சரிதம் படித்தமகன்
நஞ்சை அருந்திடல்போல்-வெளி
நாட்டைப் படித்திலரே!

இரசீவ் காந்தியவர்-தாயின்
இதயம் இருந்ததல்லால்

அரசு என்றஇயல்-அவர்
அளந்தும் பார்த்ததில்லை!

ஆலோச னைக்குழுவில்-வந்த
ஆலோச னைப்படியே
பூலோக சிந்தனையும்-அந்தப்
பொறியும் அப்படியே!

என்ன எதற்கென்று-வரும்
இயலைப் பார்ப்பீரேல்
கன்றும் கெடுதலையே-என்றும்
கணக்கில் எடுப்பீரே!

அமைதிப் படையாக-ரசீவ்
அனுப்பக் கண்டாரே!
சுமைகள் வளர்ந்தநெடி-இன்னும்
சுமக்கிறதே ஈழமையா!

சாமிகளும் அவர்சாவில்-எடுத்த
சரிதம் இருக்கிறது!
பூமிதனில் அவர்காலில்-பாம்புப்
பொட்டலமும் இருக்கிறது!

நல்ல மனிதரவர்-ஒரு
நடுநிலையாய்ப் போகாமல்
வல்ல கரங்களிலே-அவர்
மடிந்தே போனாரே!

**THANKS: Assassination of Rajiv Gandhi**
**From Wikipedia,**
**the free encyclopedia**

.......The stone mosaic that stands at the location where Rajiv Gandhi was assassinated in Sriperumbudur. The assassination of Rajiv Gandhi, the ex-Prime Minister of India, occurred as a result of a suicide bombing in Sriperumbudur, near Chennai, in Tamil Nadu, India on 21 May 1991. At least 14 others were also killed. It was carried out by Thenmozhi Rajaratnam, also known as Dhanu. The attack was blamed on the Liberation Tigers of Tamil Eelam (LTTE), a separatist organization from Sri Lanka; at the time India was embroiled, through the Indian Peace Keeping Force, in the Sri Lankan Civil War. Subsequent accusations of conspiracy have been addressed by two commissions of inquiry and have brought down at least one national government......

**.......Controversies:**

In a report published in 30 October 2012 DNA, K Ragothaman, former chief in-

vestigator of the CBI, talks about his new book Conspiracy to Kill Rajiv Gandhi: From the CBI Files and tells the reporter that while the CBI had started a preliminary inquiry in which MK Narayanan, West Bengal Governor and former Intelligence Bureau director, was named a suspect in hiding evidence, the case was buried by the then CBI chief.....

### அகவைப்பா: 46

# 1992: என்னுடன் இணைந்த என்குடும்பம்!

(பாவடிவம்: சமநிலைச் சிந்து-முச்சீர் இரட்டை)

ஊர்கா வற்றுறை ஊடே-வந்த
இராணுவ நகர்வொடும் தானே
கூர்வாய் விழுந்தது கிராமம்-என்
குடும்பமம் தப்பிய தாங்கே!

இருபது மைல்களைக் கடந்து-அருகுப்
புங்குடு தீவுக்கு நடந்து
பெருமழை சடலங்கள் ஊடே-அராலிப்
புகுங்கடல் மீதிலும் கடந்தார்!

இந்த நகர்வு பின்னாலே-என்
பெற்ற தாயுற வெல்லாம்
வந்து கொழும்பொடும் நின்றார்-கனடா
வந்தது இந்தவோர் ஆண்டே!

தாயை அழைத்திட முயன்றும்-என்
தவறாற் பிழைத்தது தானே!
சேயாய் அவர்க்கென நின்றும்-என்
சாகும்வரை துயர் கண்டேன்!

சுகத்தில் இருந்தொரு காலம்-அவர்
வவுனியா மண்ணொடும் வாழ
தகைமை இருந்தும் விட்டேன்-அழையாத்
தவறது வாழ்வெலாம் தானே!

என்னைப் பார்த்திட எண்ணி-அவர்
இருந்த போதிலும் ஆங்கே
சென்று பார்த்திட வில்லை-அந்தச்
சீரிலே நாடன்று இல்லை!

ஒசுலோ உடன்பாடு கண்டு-போர்
இல்லாத அந்நாளிற் சென்று
பசுந்தாயை பார்த்தனே நோயில்-என்
பழிபாவம் ஈதலோ தாயே!

### அகவைப்பா: 47

## 1993: பிரேமாவும் அத்துலத்தும்!

(பாவடிவம்: சிந்து-முந்நாற்சீர் இரட்டை)

துன்பப் படும்நேரம் இதுவாய்-பிரேம
தாசாரும் குண்டடி பட்டுமே இறந்தார்
வன்நாடு நின்றபா டில்லை-எந்த
வகையொடும் சமதானம் வருமென்ப தில்லை!

ஒன்றாய் ஒருகதை சொல்வார்-பின்னர்
எதிரியின் எதிரியை நண்பராய் இழுப்பார்!
ஒன்றிக் குழியிடும் பொறியாய்-செய்து
உள்ளுக்குள் திட்டமே போட்டுத் தறிப்பார்!

இந்தப் படுகொலை தானும்-அந்த
இயிலிலே வந்திட்ட இடுக்கண் ஈதாம்!
இந்தியப் படையோடும் ஏற்றார்-பின்னர்
இந்தக் கொலைபுலி என்றுமே சொன்னார்!

இன்னொரு மாதமே செல்ல-அமைச்சர்
அத்துல முதலியும் ஆங்கே இறந்தார்!
வன்செயல் இக்கொலை தானும்-புலி
வலையது தானேயென் றிப்பவும் சொன்னார்!

இந்தி யப்படையும் விட்டேக-வந்த
இக்கொலை யிரண்டொடும் எகிறிக் கலங்க
வெந்த இலங்கையில் மீண்டும்-போர்
வேகமாய் வீசவே வெங்கும் திரண்டார்!

**SRI LANKA: THE UNTOLD STORYChapter 58: Premadasa indicted**
**By K T Rajasingham**

.....At the commencement of the inquiry, the Commission advertised in local newspapers in all three languages, calling for information regarding the matters set out in the warrant. It should be remembered that, Lalith Athulathmudali was shot dead on April 23, 1993. Since then, President Premadasa had died on May 1, 1993 in a bomb blast. Prime Minister Wijetunga assumed the presidency of the country. **........**

அகவைப்பா: 48

# 1994: சனாதிபதியானார் சந்திரிகா!

(பாவடிவம்: தெம்மாங்கு)



பதினேழு ஆண்டுகாலம்
பதவிபோட்ட ஐ.தே.கட்சி!
அதிரடியாய் ஓடிப்போக
அம்மாவந்தா சந்திரிகா!

போராலே இடிந்தநாடு
பெருஞ்சனங்கள் வருந்தநாடு
சாராமல் மாற்றிவிட்ட
சந்திரிகா வந்தாரம்மா!

இச்செய்தி கேட்டுச்சற்று
இதமாகக் கனடாதன்னில்
மிச்சமொரு மகிழ்ச்சியிலே
மிதந்தேனே கேளுமம்மா!

ஊர்தோறும் பெரும்படைகள்
உயிர்குடிக்கப் புலிகளும்தான்
வார்தொடுத்த முகாம்களிலும்
மாபடையும் இறந்ததுண்டு!

நோவினிலே மாற்றமொன்று
நிகழ்ந்திடவே வேணுமென்று
சாவினிலே திளைத்தமக்கள்
சகட்டாகி மாற்றமிட்டார்!

முதுகுவலி போய்விடவும்
திருகுவலி வந்திடுமே
அதுவாகி விடுமென்று
அன்பருளம் எண்ணமிட்டார்!

ஆயினுமே ஒருமாற்றம்
அளப்பதற்கே சந்திரிகா
தாயெனவே பலபேசி
தன்பதவி வென்றுவிட்டார்!

காமினிதிச நாயக்கே
கடும்போக்குத் தலைவரெலாம்
சாமியென்ற சந்திரிகாச்
சரண்தோற்றார் சொல்லுவமே!

**THANKS:Sri Lankan Civil War**

**From Wikipedia, the free encyclopedia**

.........In the 1994 parliamentary elections, the UNP was defeated and, amidst great hope, the People's Alliance, headed by Chandrika Kumaratunga, came to power on a peace platform. During the Presidential election campaign, an LTTE bomb attack that was carried out during a rally held at Thotalanga, Grandpass eliminated the entire top brass of UNP leadership, including its presidential candidate Gamini Dissanayake. Kumaratunga became the president with a 62% majority. A ceasefire was agreed in January 1995, but the ensuing negotiations proved fruitless. The LTTE broke the ceasefire and blew up two Sri Lanka Navy gun boats known as SLNS 'Sooraya' and 'Ranasuru' on 19 April, thus beginning the next phase of the war, dubbed Eelam War III........

## அகவைப்பா:49

# 1995 தீர்வுஞ் சமாதானமும்!

(பாவடிவம்: ஒயிற்கும்மி)

தீர்வுஞ் சமாதானம் யாவுமாய் என்றொரு
திட்டம் பரிந்துரைப்போம்-அதுவாய்
எட்டும் எனவுரைப்போம்-போரும்
கூருங் கொடுமையும் கூட்டும் பறந்தோடக்
கொண்டார் மனம்மகிழ்வாம்!

என்றே யொருபேச்சு என்றவர் தங்களின்
ஏற்றம் எடுத்திருக்கும்-ஒரு
மாற்றம் இன்றிவரும்!-அந்த
வன்னிலை மீது வைத்த செயலெதும்
வாடி வதங்கிவிடும்!

இந்தநி லையிலே பேச்சென்று சொன்னவர்
பேசி முடிக்கவில்லை-ஒரு
பாசி பிடித்தநிலை-இந்தத்
தந்திரம் மந்திரம் யாவும் முடிந்தங்கு
போராய்ப் பரவியதே!

போரைத் தொடங்கி நாரைக் கிழித்ததாய்
எங்கும் பொடிப்படவே-குண்டு
தொங்கி இடிக்கையிலே-ஊர்தி
கூரையிற் கொட்டிட தேவாலயத் தோடும்
கொன்றிட வாயினரே!

யாழைக் கைப்பற்றி ஊடே புகுந்தவர்
வந்து நிலைத்துவிட்டார்-நிதம்
சந்தில் உறைந்துவிட்டார்-அங்கு
ஏழை மக்களாய் மூன்றரை இலட்சம்பேர்
இடறி வன்னிகண்டார்!

**THANKS:** **Sri Lankan Civil War**

**From Wikipedia,**

The new government then pursued a policy of "war for peace". Determined to retake the key rebel stronghold of Jaffna, which was occupied by 2,000 rebels, it poured troops into the peninsula. In one particular incident in August 1995, Air Force jets bombed St. Peter's church at Navali (Naavaella), killing at least 65 refugees and wounding 150 others.[60] In another instance in the same year, over 40 people were massacred in Nagerkovil and more civilian massacres followed in the subsequent years such as the Kumarapuram massacre, Tampalakamam massacre, Puthukkudiyiruppu massacre etc all of them perpetuated by the Government Forces. Government troops initially cut off the peninsula from the rest of the island, and then after 7 weeks of heavy fighting succeeded in bringing Jaffna under government control for the first time in nearly a decade. In a high profile ceremony, Sri Lankan Defense Minister Anuruddha Ratwatte raised the national flag inside the Jaffna Fort on 5 December 1995. The government estimated that approximately 2500 soldiers and rebels were killed in the offensive, and an estimated 7,000 wounded. Many civilians were killed as part of this conflict such as the Navaly church bombing in which over 125 civilians died. The LTTE and more than 350,000 civilians, compelled by LTTE pressure to leave Jaffna, fled to the Vanni region in the interior. Most of the refugees returned later the next year.

### அகவைப்பா:50

# 1996 ஓயாத அலைகள்-ஆரம்பம்-முல்லைத்தீவு!

(பாவடிவம்: எழுசீர்ச் சந்த விருத்தம்)

யாழி னோடு போன யாவும் மீள வேண்டு மென்கவே
கோழை யின்றி வேறு பாடம் கூட்ட வேண்டு மென்பதாய்
மேழி போல ஊர நினறு ஓய்வ தல்ல போரிலே
ஆழி யோடு முல்லை தீவு ஆன முகம் மீட்டரே!

ஆயி ரத்தும் மேலு மென்னும் ஆன படை போகவே
மாயி ரத்து வேக மென்ன வந்து சூரி லாடவே
சேய்க ளெல்லும் சூர ரென்று சூட்டு வாகு போரிலே
தாய்க ளென்ற மாதர் சேர தத்து வங்க ளானதே!

போரி லாடி பொங்கி னாலும் பேசு மாறு இல்லவேல்
ஏறு மென்ன வெற்றி யாலும் இன்றிப் பல னாகவே
தூரி யாகப் போக நிலம் தோல்வி யென்கப் போய்விடும்
ஓரி வந்த மோத லோடு உந்த வெற்றி ஆனதே!

நாளு மென்னக் கோளு மென்ன நம்பும் பாதச் சஞ்சரம்
வேள மென்று கொண்ட பாதம் மேவி வாழ்த லாகவே
தாளு மாக நீதி யாக தத்து வங்க ளாகவே!
தோளுஞ் சேர வாழ்வ மென்று தேச மாகி வாழ்வமே!

அகவைப்பா:51

# 1997 ஓயாத அலைகள் ஆரம்பம்-முல்லைத்தீவு!

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

பரந்தனும் வடக்கு ளான
      படையானை யிறவுப் பக்கம்
உரந்தரு போரை யிட்டு
      உலுப்பினர் புலிகள் தாமே!
நிரந்தரப் படைகள் சிங்க
      நிலையெடுத் தானோர் மீது
பரந்தவோர் தாக்கு தற்குப்
      பகுத்தொரு திட்டஞ் செய்தார்!

கிளிநொச்சி யூடே ஆனை
      யிறவொடும் தொடுத்த பாதை
உளியிட்டு வழியே கொள்ள
      உள்ளொடும் இலங்கை யாளர்
துளியிட்டுப் புலியை வென்று
      துரத்திடத் திட்ட மாக்கி
வழிசெயும் பாதத் தோடே
      வகையிட்டார் போரைத் தாமே!

இருநூற்றி யிருபத் தாறு
இலங்கையின் போரர் தம்மை
பெரும்புயற் தாக்கம் செய்து
போரினில் அழித்தார் ஆங்கு
நெருப்பென விளுந்த போதும்
நின்றனர் இலங்கை வீரர்!
இருப்பென இன்னோர் நாளில்
இப்போரும் வருதல் கண்டேன்!

**THANKS:** **Sri Lankan Civil War From Wikipedia,**

..The town of Kilinochchi was taken on 29 September. On 13 May 1997, 20,000 government troops tried to open a supply line through the LTTE-controlled Vanni, but failed.....

## அகவைப்பா: 52

# 1998: கிளிநொச்சிப் போர்!

### (பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

மத்திய வங்கி மற்றும்
மலைநாடு புத்த கோவில்
இத்தொடும் இந்த ஆண்டு
எங்ஙனும் குண்டு பாய
மொத்தமாய்த் தென்னி லங்கை
முழுசுமாய் ஆடல் கண்டேன்!
சத்தமும் போரின் வாதைச்
சரிதமும் கொழும்பில் கண்டேன்!

ஓயாத அலைகள் ஈராய்
எடுத்துகிளி நொச்சி யோடு
சாயாது எடுத்து விட்டார்!
சரித்திரம் புலிகள் பக்கம்
தேயாது நின்ற போதும்
தெளிந்திட இராணு வத்தார்
போயாகி விட்ட போதும்
பெரும்படை மீண்டும் செய்தார்!

கிளிநொச்சி புலிகள் கையில்
பெற்றது இந்த ஆண்டே!
வழியிட்டுப் புதுக்க நின்ற
மாபடை விலகி னாரே!

ஒளிவிட்டு சிலதாக் கங்கள்
உண்டுதான் எனினும் யாழின்
துளியிடா வண்ணம் படைஞர்
தேர்ந்திட நின்றார் தாமே!

அகவைப்பா: 53

# 1999: ரணகோச வெற்றி

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

ரணகோச வியூகம் என்க
இலங்கவின் அரசு தொட்டுக்
கணநெடும் போரில் வந்து
காணவாய் வன்னிப் பாதை
மணையென இன்றிப் போக
மடுவொடும் ஒட்டு சுட்டான்
அணையென நின்ற பாங்கும்
அனையபோர் வெற்றி தாமே!

தானையைப் புலிகள் மீண்டும்
தளைக்கவே தொடுத்தார் போரில்
ஆனையி றவும் மற்றை
அடர்கிளி நொச்சி யாவும்
சேனையோ டாங்கு நின்றார்
சிறுபடை வெற்றி யாவும்
தானைபோல் படைத்து நின்றார்!
தக்கவோர் குறிப்பு ஈதே!

குறிப்பிடத் தக்க தாக
குடிநிலம் வன்னி முற்றும்
நெறியொடும் புலிகள் நின்றார்
நேரொடும் போரின் ஓய்வு
கூறிட வைக்கும் பாங்கில்
கொண்டவோர் பலத்தில் நின்று
ஆறுதல் கண்டார் வெற்றி
அகலத்தில் புலிகள் நின்றார்!

தாக்குதல் ஒன்றில் கண்ணிற்
தாக்குண்டார் சந்தி ரிக்கா
ஆக்கவே வந்த தேர்தல்
அதனினும் ரணிலை வென்றார்!

தூக்கிய யாழின் வெற்றி
 தொல்நகர் தன்னை வைத்து
போக்கிடும் காலத் தோடும்
 பெய்திடும் ஆட்சி செய்தார்!

அலைகளின் மூன்றாங் கட்டம்
 ஆரம்ப மிட்டார் என்றே
வலைகளாய் ஆனை யிறவு
 வளைவுமுன் பரந்தன் மற்றும்
நிலைகளாம் குரக்கன் தேக்கம்
 நேரெலாம் முற்றும் வன்னி
புலிகளே எடுத்தார் என்ற
 புள்ளிமின் கலத்தில் உண்டு!

**THANKS:**

**Sri Lankan Civil War**

**From Wikipedia,**

......The LTTE returned to the offensive with the Operation Unceasing Waves III on 2 November 1999. Nearly all the Vanni rapidly fell back into LTTE hands. The LTTE launched 17 successful attacks in the region which culminated in the overrunning of the Paranthan (Puranthaenna) Chemicals Factory base and the Kurrakkan Kaddukulam (kurakkan-kaela vaeva) base......

..........President Chandrika Kumaratunga in a suicide attack at a pre-election rally. She lost her right-eye, among other injuries, but was able to defeat opposition leader Ranil Wickremesinghe in the Presidential election and was reelected for her second term in office...........

## அகவைப்பா: 54

# 2000: ஆனையிறவு வீழ்வு!

**(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)**

வன்னியெலாம் விட்டகல வார்ப்போரின் மூன்றலைகள்
 வந்த திந்தப்
பொன்னிரண்டு ஆயிரமாம் பேராண்டு தன்னோடும்
 புகுந்த வெற்றி
பன்மடங்கு பெரியதுவும் படுங்கழுத்துக் குரல்வளையில்
 பருத்து நின்ற
தொன்னானை யிறவோடுந் திடும்போராய் ஆனதுவாய்த்
 தொடுத்தார் போரே!

பேரிழப்பு அரசாங்கப் போர்ப்படைக்குப் போனதுவாய்
 புலிகள் செய்த

வாரிழப்பு என்பதுவும் வரலாற்றில் மிகப்பெரிய
வகையில் நின்றோர்
நேரிழப்பு என்பதுவும் நெடுங்கோடு யாழ்ப்பாணம்
நோக்கிச் செல்லும்
போரெடுப்பு என்பதுவாய்ப் போகநிலை வந்ததுவும்
பூமி கண்டார்!

யாழ்ப்பாண மரியாலை யாத்தவொரு எல்லைவரை
அணித்த போராம்
தாழ்ப்பாளை இட்டரசம் தடுத்ததுவும் பாரியதோர்
தகமை யாற்றல்
சூழ்இலங்கா தன்படைக்கு சொருகியொரு தூரமது
சுற்ற நின்றும்
ஆழஅங்கும் போகாது அடுப்புவைத்த இலங்கவதின்
அரணே கண்டார்!

**THANKS:**

**Sri Lankan Civil War**

**From Wikipedia,**

.....On 22 April 2000, the Elephant Pass military complex, which had separated the Jaffna peninsula from the Vanni mainland for 17 years, completely fell to the hands of the LTTE leaving 1,008 soldiers dead. The army then launched Operation Agni Kheela to take back the southern Jaffna Peninsula, but sustained losses. The LTTE continued to press towards Jaffna, and many feared it would fall to the LTTE, but the military repulsed LTTE offensives and was able to maintain control of the city........

**அகவைப்பா:55**

# 2001 சர்வதேச விமான நிலையத் தாக்குதலும் போர்ஓய்வும்!

**(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)**

இரண்டாயி ரத்தொன்றில் போர்நிறுத்த மென்றுரைத்த
புலிகள் பின்பு
விரண்டுபடச் சர்வதேச விண்ணூர்தி நிலையத்தில்
விதந்து இட்ட
அரண்பதித்த தற்கொலையின் அங்கமெனத் தாக்குதலை
அளித்த போதில்
அரசாங்கப் பொறிமுறைகள் ஆயமொடு வருமானம்
அனைத்தும் போச்சாம்!

இந்தவொரு பேரிடியில் ஏழ்உலக வையமெல்லாம்
இடிந்து போக

நொந்தவொரு புலிகளுமே நிந்திப்பை வெளியுலகம்
நீட்டும் என்ற
சிந்திப்பாற் வந்ததுவும் செப்ரெம்பர் பதினொன்று
நியூயோர்க் மைய
வந்தவொரு தாக்குதலும் மாறியொரு எண்ணமிட
வகுத்த தாமே!

**THANKS:**

**Sri Lankan Civil War**

**From Wikipedia,**

..........In July 2001, the LTTE carried out a devastating suicide attack on Bandaranaike International Airport, destroying eight of the air force's planes (2 IAI Kfirs, 1 Mil-17, 1 Mil-24, 3 K-8 trainers, 1 MiG-27) and four Sri Lankan Airlines planes (2 Airbus A330s, 1 A340 and 1 A320), dampening the economy and causing tourism, a vital foreign exchange earner for the government, to plummet. Impact of the attack was such that the Sri Lankan economy recorded a negative growth for the first and the only time since its independence, in that year.........

### அகவைப்பா:56

## 2002: ரணிலின் ஆட்சி!

(பாவடிவம்: எண்சீர் விருத்தம்)

சமாதான இருப்புக்காய் போரே என்ற
சகட்டுக்கு நின்றதொரு சந்தி ரிக்கா
அமைவான திட்டமெதும் ஆகா நின்ற
அழற்போதில் நம்பிக்கை அற்றார் என்று
சுமையான ஓர்நிலையிற் செப்ப நின்ற
சேராளும் பார்மன்றத் தேர்தல் வந்தே
இமையோடும் பணியாக இட்டார் மக்கள்
இந்தவோர் தேர்தலிலே ரணிலே வென்றார்!

புலிகளுமார் போர்நிறுத்த மென்று சொல்ல
புத்தரசு ரணிலும்ஓம் போட்டுச் சொல்ல
வலிகளுக்கு ஒத்தடங்கள் செய்ய வென்றே
வந்தாரே நோர்வேயின் எரிக்ஸ்சொல் காய்மே
நிலையிலொரு ஈர்நாடு என்றே வைகும்
நேர்த்தியிலே பேச்சுவைத்து நின்றார் தாமே!
வலைவாழ்வில் மாறுதல்கள் வண்ணங் காண
வந்ததுவே புதியசமா தா்னம் தானே!

ஏயொன்ப வீதியது திறந்தே விட்டார்
விண்ணூர்தி தன்னில்யாழ் விரைந்து சென்றார்

காயென்பர் சந்திரிகாச் சனப தியார்
கருத்தென்பார் ரணிலான பிரத மர்தாம்!
பாய்கின்ற இருகட்சி மேலும் கீழும்
பகுத்தாயும் இந்தநிலை பதட்ட மாகி
மேய்கின்ற சமதானம் விளம்ப லான
மிதக்குநிலை வந்ததுவே மீண்டும் மீண்டும்!

புலிகளுமே வீதிக்கு வரியே போட்டார்!
புதிதென்ற இடம்தேடி முகாம்கள் இட்டார்!
மெலிதான அரசாட்சி விள்ளும் நீதி
வித்திடவே நின்றதனி விதிகள் செய்தார்
ஒலிபோல வேகமொடும் உலவும் தொண்டர்
ஊர்தோறும் நோய்நொடிக ளுறுவோர் பார்த்தார்
பொலிவான சமதானப் பெற்றி ஆட்சி
புகலான ஒப்பந்தம் போட்ட தாமே!

அகவைப்பா:57

## 2003: பேச்சு முடிவு: மகிந்த ஆட்சி!

(பாவடிவம்: எண்சீர் விருத்தம்)



இக்கணமா யிருந்தநிலை இழுத்து மூடி
இனிவேண்டாம் பேச்சுஎனப் புலிகள் சொன்னார்!
முக்கியமார் விடயங்கள் மீது எங்கள்
மேலான பார்வையிலே விகற்பம் என்றார்
தக்கதொரு மறுமொழியிற் தங்கள் கேட்பை
தரவில்லை என்றதொரு தாக்கம் சொன்னார்
பக்கபலம் வாசிங்ரன் தன்னின் பேச்சில்
பவித்திரத்தின் பதிலெதுவும் இல்லை என்றார்!

இடைக்கால அரசாங்கம் வேண்டும் என்ற
எழுத்துமுறை வேண்டுதலை ஏற்றா ரில்லை!

முடையாலே தென்னிலங்கை மோதல் பெற்று
வீறாப்பாய் புலிகளுக்கே விற்றார் என்ற
அடையாளம் ரணிலுக்கே அளந்தார் அந்த
அவதூற்றில் ஒப்பந்தம் அரற்ற லாகி
விடையாகப் புதுத்தேர்தல் விட்டார் மற்றும்
விதமான கட்சியொடுங் கூட்டுச் சேர்ந்தே!

ஐக்கியசு தந்திரமுன் னணியே வென்று
அகல்வாயிற் பிரதமராய் இராஜ பக்சா
பக்கமது ஓங்கியதால் ஒஸ்லோப் பேரம்
படுத்துறங்கிப் போகையிலே மகிந்தர் ஆட்சி
மிக்குறவே வந்ததினால் மீண்டும் போராய்
மிதந்துவரும் சூழ்நிலையிற் போக நாடு
கக்கியதே புலிகளுக்கு இடையார் ஆட்சி
காணமுடி யாதுஎன்ற கருத்துள் நின்றே!

**THANKS:**

**Sri Lankan Civil War**
**From Wikipedia,**

....On 31 October, the LTTE issued its own peace proposal, calling for an Interim Self Governing Authority (ISGA). The ISGA would be fully controlled by the LTTE and would have broad powers in the North and East. (see the Full text of the proposals) This provoked a strong backlash among the hardline elements in the South, who accused Prime Minister Wickremasinghe of handing the North and East to the LTTE. Under pressure from within her own party to take action, Kumaratunga declared a state of emergency and took three key government ministries, the Ministry of Mass Media, the Interior Ministry and the crucial Defense Ministry. She then formed an alliance with the JVP, called the United People's Freedom Alliance, opposed to the ISGA and advocating a harder line on the LTTE, and called for fresh elections. The elections, held on 8 April 2004, resulted in victory for the UPFA with Mahinda Rajapakse appointed as Prime Minister.....

### அகவைப்பா:58

## 2004: புலிகளின் பெரும் உடைவு!

(பாவடிவம்: எண்சீர் விருத்தம்)

வாருலகம் பேரியக்கம் வல்லியக்கம் என்றே
வரலாறு படைத்தபுலி வல்லநிலை ஒன்றே
நேருலகந் தமிழினத்தை நினைத்ததுவே என்று
நிகழ்காலம் சொல்லுமொரு நிதர்சனத்தின் ஊடே
பாருலகம் பார்க்குமொரு பரந்தநிலை விட்டுப்
பெருவீரன் புகழ்வீரன் என்றநிலை போக்கி
சேருலகம் மாறியொரு சிந்தனையிற் கருணா
சென்றாரே புலியென்னுஞ் சிந்தனையை விட்டே!

கருணாவைப் புலிகளொடும் கண்டதொரு காலம்
களப்புயலை யாத்தவராய்க் காலமொரு காலம்
உருவாகக் காரணமாய் இருந்தவொரு காலம்
உடைந்தவொரு காலமென உள்ளகதை எழுதி
நெருடாகிப் போனதினால் நிறைந்தபுலி ஊடே
நெருப்பென்க விழுந்தகதை நீள்வெடிப்பு ஆகி
ஒருகாலம் எழுதியதே! உலகமதிற் கருணா
என்றகதை என்றுமென எழுதியது தானே!

இவ்வாண்டு சுனாமியெனும் சுழியாலே செத்துச்
சென்றார்கள் முப்பத்தி ஐந்தாயி ரம்பேர்!
ஒவ்வாத காலநிலை ஒன்றையல காக
உள்ளிட்டு எச்சரிக்கை இன்றியது மாக
எவ்வாறு மக்களையே காத்தலென முடியும்
ஈதுஒரு வாதையென ஏசியத்தில் எங்கும்
கவ்விவருங் கேள்வியிது காப்பதென்ற வாறு
காணவரும் ஆட்சியதே கனியவைக்கும் நாடு!

**THANKS:**

**Sri Lankan Civil War**

.......Tsunami and aftermath The Batticaloa Lagoon at Uppodai ravaged by the Boxing day TsunamiOn 26 December 2004, the Indian Ocean tsunami hit Sri Lanka, killing more than 35,000 people, and leaving many more homeless. Aid poured in from donor countries, but disagreements arose instantly over how it should be distributed to the Tamil regions under LTTE control....

அகவைப்பா:59

# 2005: கதிர்காமர் மறைவு!

(பாவடிவம்: கட்டளைக் கலிப்பா)

கதிர்காமர் ஆட்சிக் கருமமே கண்ணார் கொலையுடனே
எதிர்மறை யானதோர் எண்ணம் பரவிய ஏர்ப்புலகம்
அதியுயர் தாக்குதல் ஆக்கு மரசுடன் அட்டியில்லா
மதியுரை கொண்டு வகுத்தபோர் ஒன்றையுங் கேட்டிலதே!

சனாதி பதியாகும் தேர்தலிற் சாராப் புலிகளினால்
சுனாமி அடித்த மகிந்தரும் வெற்றி சுழன்றதினால்
அனாதை யாக அரசொடுமாய் நின்ற அருந்தமிழர்
வினாவா யமைந்திட வேகப் படுநிலம் வீழ்ந்ததுவே!

கிழக்கொடும் தாக்கும் முனைப்பில் எழுந்த அரசினது
முழக்கம் புலியொடும் மீண்டும் வகுத்திட வந்ததினால்
குழப்ப மிகுந்த வரிசையிற் பற்பல போர்முனையில்
விழுந்த நிலையிற் புலிகளும் வந்திட நின்றதுவே!

கிழக்கின் தொடர்நிலை வந்து கிளரத் தொடுத்ததெலாம்
உழைப்பின் உறுதி உறுநிலை சுற்றி எழுந்ததினால்
சுழற்சிப் படையில் பின்புலம் இல்லா உடைப்பதனால்
அழற்புலம் விட்டு அகன்றனர் மீண்டும் அடைவதென்றே!

THANKS:

Sri Lankan Civil War

However, limited hostilities renewed in late 2005 and the conflict began to escalate until the government launched a number of major military offensives against the LTTE beginning in July 2006, driving the LTTE out of the entire Eastern province of the island. The LTTE then declared they would "resume their freedom struggle to achieve statehood"

### அகவைப்பா:60

# 2006: அரசின் வெற்றி ஓலம் !

### (பாவடிவம்: கட்டளைக் கலிப்பா)

மூர்க்கத் தொடுவயல் முற்றிடப் போரினிற் மீக்குறவே
ஆர்க்க நெடுஞ்சனம் அள்ளவும் ஓரிலா ஆட்சியதாய்
சேர்த்துப் புலிகளின் சித்திரக் கூட்டுடன் சூர்களத்தே
நேர்ந்தது வெற்றியே என்று அரசிட்டார் செய்தியதே!

ஒப்பந்தம் மீறி உருவாக்கிப் போரது உக்கிரமாய்ச்
செப்ப நடந்திட்ட ஒஸ்லோப் பதிவெலாம் சீவியதாய்
தப்பெனப் போனது தாக்குபோர் வந்திட ஏவுகணை
உப்பி வெடிக்க உருக்கொண்ட பேச்சும் உடைந்ததுவே!

போரது ஓடும் பொழுதது வான புரிந்துணர்வாய்த்
தேரது வாகித் திருந்திட ஒஸ்லோத் திருப்புமுனை
வாரது வாகும் வழியினி இல்லை வகுத்தவழி
கூரதும் வாழ்வெனக் கூட்டியதாம் போர்க் கொடுநிலையே!

## அகவைப்பா:61

# 2007:குடும்பிமலை!

### (இன்னிசைக் கலிவெண்பா)

ஒப்பந்தம் தீட்டியே ஒஸ்லோ வரைசென்று
அப்பமும் பங்கிட ஆன குரங்கென
உள்நோக்கு ஒன்றும் வெளிநோக்கு மொன்றுமாய்
கிள்ளக் கரைந்திடக் கேடாய் மடிந்திட
அல்லோல கல்லோலம் ஆக அருஞ்சனம்
நில்லாது ஓடி நெருப்பென்றும் நீரும்
உடுக்காகி ஓட உலகெல்லாம் மூட
அடுக்காகிச் சாவில் அயலெல்லாம் தாவ
சவக்கிடங்காய் ஆகச் சரிந்தமெலாம் தூவி
அவப்பெயரும் நீரும் அரும்மாவி லாறிருந்து
மூதூரும் சம்பூரும் முற்றுமாய்த் தீயாட
மீதூரும் போரில் மிதந்து குடும்பிமலை
இந்த வருடம் இலங்கபடை ஏறியதே!
செந்தமி ழர்நிலங்கள் சூறைத் தீயாய்
பெருகிச் சருகாய் பிடித்த நெருப்பாய்ப்
பொரும அகதிகளும் பெற்றோர் வயதார்
அருந்தாத்தா பாட்டி அருகும் நடக்கார்
நெருக்கி இடம்மாறி நெய்யுயிரை மாய்த்துவிட
பின்வழியும் முன்வழியும் போகா இடங்களெல்லாம்
சென்றுவழி காட்டச் சிடுந்தமிழர் நின்றாரும்
உப்பாறு மற்றும் ஊரெல்லாம் போராட
தப்பாகிப் போனதினாற் சாகப் படையினரும்
எப்பாரும் மக்கள் இடிந்தாரே ஊரைவிட்டுக்
கொப்பாயக் கொண்டுண்ட கொப்பாடன் முப்பாட்டன்
கொண்ட நிலபுலனும் இன்றுவரை வெற்றாகி
அண்டமுடி யாதெனவே ஆயிருக்கும் நாளிதுவில்
சாவும் வெடிலுமாய் சார்ந்த புலமக்கள்
கூவிப் பரந்தோடக் கூத்தாகி ஆங்கே
அனல்மின் நிலையம் அடுக்களை கட்ட
முனைப்பில் வரும்வெளியார் மொய்க்க இருந்தேச
வாக்கு யுடையவர்கள் வண்ண மக்களொலம்
நீக்கவும் வீட்டை நிலபுலங்கள் வன்னாடிப்
போக அவர்தேசப் பூண்டாறென் றில்லாமற்
தாக அடித்தாரே தான்!

அகவைப்பா:62

# 2008: ஒப்பந்தம் தீய்த்த மகிந்தா! வடக்குக்கு நீண்ட மாபோர்!

(இன்னிசைக் கலிவெண்பா)

வகுத்தபோர் ஒப்பந்த வால்நறுக்கி ஆட்சி
உகுத்த மறுமொழியில் ஊருலகம் எல்லாம்
உருகிப் பிழையென்று உக்க மனிதப்
பருமார் இயக்கங்கள் பண்பாடச் சொல்ல
பெருகும் கருத்தாடல் பொங்க அரசார்
கருக்கும் அறிவித்தல் காண வந்ததின்பின்
இந்தாண்டு மாகாணத் தேர்தலிலே வந்தாரே
சந்திர காந்தன் சரிதம் முதலமைச்சர்
மக்கள் விடுதலைப் மாப்புலிகள் என்றாக
நிற்கும் கருணா நிலங்கிழக்கு ஆகியொரு
பொற்குடங்க ளென்னப் புகுந்து விளையாடி
சிக்கித் தமிழர் சிறப்பும் தீய்ந்துவிட
கக்கத்துள் மற்றோர் கலசம் நிறைந்தாடப்
பந்தாடிப் போக படித்துறைக்கு மாற்றோர்கள்
வந்தாடி நின்றார் வண்ணநிலம் துப்பாக
நொந்துபோய்த் தேச நுகமெல்லாம் இன்றி
எவர்தலைவர் யார்தலைவர் என்றவொரு தேடல்
நுவர்வாரிற் சிக்கி நிலம்குலைந்த பின்னாங்கே
கற்றோரும் வல்லோருங் கல்வி நிலம்நின்ற
பொற்தேரும் போகப் பொடியாய் அலகுமொரு
நற்தேர்தல் என்றே நசுங்கப்போய் ஆங்கொடுமாய்
ஒற்றுமையும் மாற்றும் உரசுபொன் பார்க்கையிலே
போரை வடக்கிட்டுப் போன சமநேரம்
கூரை இடிந்ததுபோல் கூர்ப்போர் நடந்ததுவே
மன்னார் கிளிநொச்சி மாமகுடம் எல்லாமும்
மின்னாகிப் போக மிதந்தார் படைஞர்
பெருகி வழிந்தோடிப் போக இடங்கள்
சருகாய் எரியச் சரிந்த வழியெங்கும்
ஒன்றாய்க் குடும்ப உறுப்பினர்கள் மாண்டாராய்
நின்றபோர் நீண்டு முள்ளிவாய் காலோடும்
பல்லாயி ரம்மாய் பருத்தபோர் வந்துவிட
எல்லா மிழந்தார் எடு!

அகவைப்பா:63

# 2009: இறுதிக்கு வந்த போர்!

**(இன்னிசைக் கலிவெண்பா)**

மன்னார் முருங்கன் வருமூர்உ ருத்திபுரம்
நன்னூர் கிளிநொச்சி நசுங்கியா னந்தபுரம்
என்ன ஒடுங்கி எடுத்தவொரு தாக்குதலில்
ஐந்நூறு போராளி ஒன்றாய் எரிந்துவிட
பின்னால் இருந்து பொசுங்கிரச வாயுதங்கள்
மின்னிப் பொழிய மிகுந்தவிச் சாப்போரில்
வேர்நாடு நின்று விசுக்கியது இந்தியா
ஓர்நாடு என்று எடுத்தகதை எல்லாம்
கணினி நிறைந்து கசிந்து உலக
மனித உரிமை மகத்தான அமைப்புக்கள்
கூற்றுப் படைத்துக் குறுத்தும் கருத்தாடல்
சாற்றும் படங்கள் சரிந்த உடலங்கள்
மாத்தருக்கள் மீது மனிதச் சிதறல்கள்
ஆத்திரங்கள் ஆட்டிலறி அக்கோரம் வல்லாட
தண்ணீர் கேட்டு தவிப்பார் குழந்தைகளும்
உண்ணீர் எனவில்லா ஒப்பாரி யும்மோடே
வையப் புனலெங்கும் மாபெரிய ஊர்வலங்கள்
‘கைவே’த் தெருவெங்கும் காண்லட்ச மாயுருவி
ஆட்சி யரசியலை ஆட்டிப் படைத்திட்டும்
மீட்சியிலா மக்கள் விழுந்தெரிந்து போனார்கள்!
போராளி யாய்க்கனிந்த பேரார் புலிகளையே
நாராக விட்டு நனித்தலைவன் போய்விடவோர்
ஓரோசை இன்றி உகுத்த புலிகளுடன்
சேராய் நிற்க செகம்பார்க்கப் போரிட்ட
போராரும் ஓர்தலைவன் என்ற சரிதத்தால்
நீராரும் வாருலகம் நெருப்பில் எழுதிவைத்த
பொன்னெழுத்து என்றும் பொசுங்காது மானிடத்தின்
மன்னன் அவனென்று மன்றிட்ட தத்துவத்தின்
இன்னோர் தலைவன் இனிப்பிறக்க மாட்டானாய்
மின்னுஞ் சரித மெழுதியவன் இந்நேரம்
முள்ளிவாய்க் காலிற் பிரபாவைக் கண்டமென
உள்ளார் பலராய் உலகமெலாம் கேட்கிறதே!
காலப் பருவில் கருதுபோர் ஆட்சியர்க்கு
சாலும் நிலையதென்று சாற்றுவோர் உண்டாமே!
இந்தியா தான்தமக்கு இன்தமிழ் நாடுமுன்

செந்தமிழ் நாடொன்று தீட்டுமிப் போரொன்றைக்
கொன்றுவிட வென்றேயாம் கூடுவைத்தார் லங்கவொடும்
சென்று பொறித்தபின்னும் தேய்மானம் இல்லாத
சட்டம் பொறித்ததுவாய்ச் சான்றுபல மில்லாத
திட்டம் என்பதது தேன்தமிழர் நன்கறிவார்!
செந்தமிழர் லங்கத் தொடுநாடு ஒன்றாகி
விந்துக்கள் நிற்கும்வேர் விள்ளாத ஆட்சிகளே
இந்தப்போர் வாருதற்கு ஏடிட்டார் தானே!
மொழியின்றிப் போக மிகுபுலங்கள் தீயில்
அழித்துப் பறித்து அகழ்ந்த சரித்திரங்கள்
மின்கணனி தோறும் மிதந்து வழிகிறது!
கொன்றபின்னும் கேட்கக் கொடுத்தார இல்லையது
இன்றும் தமிழர் இதுவே நிலையென்று
வின்னார் அரசம் விரும்பார் உலகறியும்!
சுதந்திரத்தின் பின்தெறிப்பிற் செத்தவராம் பண்டா
விதந்த இரத்தம் முதற்குருதி தீவிரத்தின்
குன்றா வடிவதுவாம்! கூத்துப் பலகயவாய்
என்றும் வாழும் எடு!

## முட்டி எரிந்த முள்ளிவாய்க்கால்





காப்பு வலையமென்று கட்டுண்ட மக்கள்மேல்
கோப்புக் கணக்காய்க் குறிபார்த்துக் குண்டு
விசுக்கப் படவே விழுந்தோர் இறந்தோர்
நசுக்குண்டோர் சாகவும் நாவறளத் தண்ணீர்
கிடைக்காமற் சிக்குண்டு கொட்டுண்டார் நூறாய்ப்
படைக்குண்டிற் செத்தார் படுமணிலில் வைத்தியத்தைப்
பார்த்தவொரு சாலையும் படுங்குண்டில் மக்களுடன்
சேர்ந்துநின்ற வைத்தியரும் செத்து மடிந்தனர்காண்!
இந்தப் படிக்கு இறப்புக்கள் கூட்டியள்ள
முந்திப் படைநிலத்தை மேவி நடந்தவர்கள்
சிந்திக்க வொண்ணா துயரத்தி னுள்ளேயும்
சந்தித்த துன்பம் சரித்திரங்கள் ஆச்சுதம்மா!

**Mullivaikkal Hospital bombings**

**From Wikipedia, the free encyclopedia**

## Mullivaikkal Hospital bombing

Mullivaikal Hospital was a makeshift hospital located in the Safe Zone in northern Sri Lanka. An alleged series of shellings and aerial attacks began on 23 April 2009 when the Mullivaikal Hospital was hit by three artillery shells. It continued on 28 and 29 April when the Mullivaikkal Primary Health Center was hit multiple times over a two-day period with six killed and many injured including one medical staffer. On the 29th and the 30th the Mullivaikal Hospital was again hit multiple times with nine more killed and fifteen injured. There were two attacks against the Mullivaikal Hospital on 2 May, one at 9 a.m. and a second at 10.30 a.m. resulting in sixty-eight killed and eighty-seven wounded, including medical staffers. On the morning of 12 May 2009 it was hit by an artillery mortar, killing at least forty-nine patients and injuring more than fifty others. All of these attacks were allegedly by the Sri Lankan Army; however, the Sri Lankan Government denied the allegation stating there is no evidence.

At the time of the last bombing, Red Cross was scheduled to ship around 2,000 of the patients out of the Safe Zone over the next couple of days, according to Tamilnet.

### அகவைப்பா:64

# 2010: பொன்சேகா கைது!

### (இன்னிசைக் கலிவெண்பா)



போரார் மகிந்தர் பெருமரசத் தேர்தலிலே
பேராரும் வெற்றி பெயர்த்தெடுத்துப் போனார்காண்!
வென்றான போரில் விளக்கேற்றிப் போரிட்ட
பொன்சேகா ஆனயான் போரின் முழுநேர
வெற்றிக்குப் பாடுபட்டேன்! வீரம் தனதென்றே
பொற்காப்புச் செய்து புரண்டார் தேர்தலிலே
விக்கிரம சிங்கேயும் வீழ்ந்தவித் தேர்தலிலே
அக்கிரமம் செய்து அடிபட்டேன் என்றோத
வெற்றிக்குள் மீசை முறுக்கி மகிந்தாரும்
சொற்றாடல் செய்தார்! சுதந்திரமாய்த் தேர்தலது
இல்லை நடக்கவில்லை என்று ரணிலாரும்
கல்லை எடுத்தெறிந்தார்! கத்தினார் என்றாலும்
இவ்வாண்டு ஆரம்பம் இற்றை வரைந்ததுகாண்!
அவ்வாறே பாராளும் ஆட்சிமன்றத் தேர்தல்
தொடுத்து வந்ததுவும் துப்புரவாய் வாகை
அடுத்தும் வரவே அகத்தே மகிந்தர்

தொடுத்த படியோடுந் தேவாரம் பொழிப்புரையும்
விட்டவா றெங்கும் மிதப்பில் இலங்கச்
சனாதி பதியார்க்கும் சர்வ அதிகாரம்
இனாமாய் அளிக்க எடுத்தபா ராளுங்
கொடுத்ததுவார் சட்டம் கொடுப்பனவாய் ஆக
அடுத்ததிந் தாண்டு ஆனாலும் பொன்சேகா
முட்டும் படியாக மெட்டிட்டார் என்றதினால்
பட்டுச் சிறைப்படவே பார்த்தார்! மகிந்தாரும்
ஐரோப்பா மன்றம் அடுக்கா மனிதப்போர்
செய்தாரே என்று சிறப்பான பொறகடனை
நிப்பாட்டி வைத்தார்! நெளியா இராசபக்சர்
செப்பாடி நின்றார்! சிறீலங்கா ஓர்போதும்
சிக்காது என்றுரையில் செப்பித் திருந்தவரின்
இக்கால மெல்லாம் இவர்க்கு!

BBC NEWS
ASIA:

................2010 February - Gen Fonseka is arrested on corruption charges, and jailed for 30 months by a military court in September. He is convicted of further charges in November 2011 and sentenced to another three years in jail.

President Rajapaksa dissolves parliament, clearing way for elections in April.

European Union suspends Sri Lanka's preferential trade status because of concerns over its human rights record.

2010 April - President Rajapaksa's ruling coalition wins landslide victory in parliamentary elections.

2010 September - Parliament approves a constitutional change allowing President Rajapaksa to seek unlimited number of terms............

## அகவைப்பா: 65

# 2011: சனல்4(CH4) தொலைக்காட்சி!

### (கொச்சகக் கலிப்பா)

போர்முடிந்த புதுக்கதையில்
சிலம்படித்த ஒருகாலம்
நார்உரித்த உலகமொடும்
நடந்தகதை விடநினைந்து
ஊர்முழுக்க நடைநடந்து
உலவியொரு திறம்பாடி
தேர்வாங்கத் திரிந்ததல்லால்
துடிப்புவெலாம் மறந்தனரே!

வெற்றியிலே விழுந்தகதை
வெம்புயலில் மிதந்தகதை
சுற்றிவைத்துப் பிரசங்கம்
சுழற்றியதுஞ் சதுர்க்கடலில்
பற்றவைத்துப் பரம்பலிட்டு
படைத்துறைகள் புரிந்தகதை
முற்றிலுமாய்த் தொலைக்காட்சி
முகிழ்த்துலகம் கலங்கியதே!

குப்புறவே படுக்கவைத்து
குறிமுதுகில் துவக்குவைத்து
அப்புறமாய்ச் சுடுகையிலே
அருமுயிரும் பறக்கையிலே
எப்படியோ படமெடுத்து
எவருக்கோ கொடுத்தனுப்பி
தப்புவெல்லாம் கொடுத்துவிட
ததும்பியதே உலகமெலாம்!

பொய்யென்றும் புழுகென்றும்
புரிபோரைச் சிதம்பவைக்க
நொய்கின்ற மனத்திலளல்
நொருக்கிவிடும் மனிதவினம்
நொய்யெனவே நுழைந்தவர்கள்
நெடுநாற்றம் புரிந்துவிட்டார்
செய்கின்றார் பெருங்குற்றம்
சிறீலங்கா பயப்படாதே!

என்றுரைத்த அரசவர்க்கு
எடுத்தவிந்த திரைப்படத்தை
மன்றைனா வகைநாடும்
மருவுநாடு அனைத்திலுமே
நின்றாகச் சபையனைத்தும்
நிசக்கொலையின் படமிதென்று
நன்றாற்றித் திரையிடவே
நடுத்தடையை எடுத்திலரே!

ஏந்திளையாள் இசைப்பிரியா
இடையுடுப்பு மிலாச்சடலம்
கூந்தலொடும் புனைமகளிர்

குலைந்தசக உடலங்கள்
ஆந்தைபோற் படமெடுத்து
அகிலமெலாங் கொடுத்தவர்கள்
மாந்துமொரு உணர்ச்சியின்பாற்
மனிதத்தின் அழுகையதோ?



சனல்போரின் நிசப்படங்கள்
சருகாகி எரிகையிலே
இனம்வேறு மனம்வேறு
இதயமொடும் மனிதரென்று
அனல்பாய உலகமெலாம்
அழுதவர்கள் கணக்கிலதாய்
கனமான இதயமொடுங்
கரைந்தார்கள் கலங்கினரே!

**IN .. CHANNEL 4 TV**

Fresh footage reveals new evidence of Sri Lanka executions
Fresh footage reveals new evidence of Sri Lanka executions
by SARAH CHARLTON

New video evidence of the alleged executions of bound prisoners in Sri Lanka has emerged and is to be broadcast in full in a documentary, as pressure builds for an international investigation.

அகவைப்பா: 66

# 2012: யாழ்வந்த மகிந்தா! போரின்பின் ஒருகணக்கு!

(கொச்சகக் கலிப்பா)

போர்க்குற்றம் உருவில்வந்து
புலமெல்லாம் அகிலமெல்லாம்
கூர்க்குற்ற மெனவுமாகும்
கொடுங்குற்ற விசாரணைக்குள்
சேர்த்தாடி உதிர்க்குவையம்
சினத்தோடு உருகுநாளில்
பார்க்கின்ற வடக்கிலேயே
பலகாட்சி மகிந்தவைத்தார்!

இந்தவோராண் டுடைத்ததுவாய்
இதற்குமுத லிறுதிப்போர்
தந்திரத்தும் உளவாலும்
தறித்தவர்கள் அருகுநாடு

இந்தியத்தில் இருந்துவந்த
இராணுவமும் புலனாய்வும்
வந்ததுயா வடங்குசெய்தி
வரவெளிச்ச மெழுந்ததுவே!

வெள்ளைக்கொ டிபிடித்து
விரும்பிய ரசாங்கமொடு
உள்ளக்கி டுக்கியிலே
உறுதியொடுஞ் சரணடைந்து
கள்ளவிஷய் நம்பியரும்
கசுப்பாரும் பலராலுந்
தள்ளப்ப டுகையிலே
தமிழரிவர் கொலைவைத்தார்!

பான்கிமூனும் படுதுரோகிப்
பழிவாங்கல் தமிழருக்கு
ஊன்றிவிடச் சரணடைந்தோர்
உதவிகேட்டார் அனைவருக்கும்
தான்தவறு இழைத்ததுவாய்
ததிங்கிணத்தோம் உருட்டுகிற
கூன்குருடாய்க் கிடந்தகதை
கொடுக்கின்றார் இதுதருணம்!

மூற்றுமுடிந் ததின்பின்னர்
முடிச்சாகி இறந்தவர்கள்
நாற்பதினா யிரவரென
நனிச்சனல்போர் கொடுக்கிறதே!
வீற்றபெரும் களம்பின்னே
விழுந்தார் ஒருஇலட்சம்
ஏற்றபெருங் கணக்கினொடும்
எடுத்தியம்பி உலகமிட்டார்!

இந்தியத்துத் தமிழ்நாடு
இயலோடும் நெடுமாறன்
செந்தமிழன் புதல்வசீமான்
திருவைக்கோ செயலலிதாய்க்
கொந்தளிப்புக் கொடுத்திடுமோர்
குவியலென உழைத்திடுவோர்
உந்துமொரு கணங்களென
உயர்ந்ததிது வருடமென்பேன்!

# ஆயர் ராயப்பு யோசெப்பு சமகால நீதியின் வடிவம்!

(அறுசீர் விருத்தம்)



ஒன்றரை இலட்சம் பேர்க்கு
என்னதான் நடந்த தென்று
நின்றிட வைத்த போரின்
நிலையிலே விளக்கம் வேண்டும்
இன்தமிழ் நிலத்தில் வந்து
எதிரியாய்த் தண்ட னைகள்
நன்றென ஆட்சி செய்யின்
அதையெலாம் விலக்க வேண்டும்!

என்றிட ஆட்சி யார்க்கு
ஏற்றதும் சமாதா னத்தும்
வென்றதாய் நாட்டி னுள்ளே
விஞ்சவும் புரிவ தன்றி
இன்தமிழ் நிலத்தை அள்ளி
இழுப்பதும் நிறுத்த வேண்டும்
அன்பொடு ஆயர் ஜோசெப்
அறைந்தனர் ஊட கத்தே!



அகவைப்பா: 67

## 2013: வரலாற்றுப் பொன்னேடு!

**(பாவடிவம்: பண்ணத்தி)**

வரலாறு எழுந்ததுவே-புதிய
வரலாறு எழுந்ததுவே!

பரலாகிப் பெருந்தமிழர்
பட்டுவிடப் போனபின்பும்
வரலாறு எழுந்ததுவே-புதிய
வரலாறு எழுந்ததுவே!

வடகிழக்குத் தமிழரெலாம்
வாய்த்தபெருந் தேர்தலிலே
வடமென்க வொற்றுமையாய்
மணிமகுடம் இட்டாரே!
குடமுழுக்காய்த் தமிழரெலாம்
கொடுத்தாரே அபிடேகம்
படமெடுத்த உள்தமிழர்
படுத்தார் இதுதருணம்! -வரலாறு

கூட்டமைப்புப் பெரும்பான்மை
கொள்ளுகின்ற பொற்காப்பை
ஊட்டமுடன் கொடுத்திடவே
உலகமெலாம் மகிழ்ந்ததுவே
நோட்டமிட்டு வெளிநாட்டார்
நோக்கிலொரு வெற்றியினை
காட்டிவிட்டார் என்பதுவே
கனிவான செய்தியம்மா! -வரலாறு

வாழிய தமிழா! வாழிய தமிழா!
வாழிய செந்தமிழ் மணிப்புல மெங்கும் -வரலாறு

## கடன்கேட்ட முதல் வருடம்
## அகவைப்பா: 68
# 2014: நவிபிள்ளை நீதிச் சுவர்



(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

அழுது அழுது விழுந்தவர்கள்
அழைத்தி முத்துப் போனவரை
பொழுதுந் திரும்பப் வில்லையெனும்
பொல்லாக் காலம் வழிபார்த்துத்
தொழுதும் கேட்டும் தெரியாதாய்
துக்கித் திருக்கும் வேளையிலே
முழுதும் உலகம் நவிப்பிள்ளை
மிதந்தார் இலங்கை நாட்டினிலே!

உறுமை யாக்கள் பலசேனா
உலுக்கும் மாந்தர் எதிர்ப்போடும்
பொறுமை இழந்து பேசவென
பொதுவாய் வந்தார் நவிப்பிள்ளை!
சிறுமை யிலாது அனைவரொடுஞ்
சிலாகித் தறிந்து கதைகேட்டு
வறுமை யோடும் வதையுருளும்
மனிதக் கோட்டின் மனமறிந்தார்!

இலங்கை வந்து திரும்பியதும்
எழுத்தில் வடித்தார் இதுகாறும்
கலவ ரங்கள் கந்தகத்திற்
கருகி எரிந்த மக்களொடும்
குலவித் துயரைக் குறித்துவந்து
கொடுத்தார் அறிக்கை அவர்செயலின்
பலமாய்த் தெறிக்குஞ் சார்பின்மைப்
பகுப்பாய் நீதிக் குரலிட்டார்!



கடன்கேட்ட இரண்டாம் வருடம்
அகவைப்பா: 68

# 2014: செல்வா பின்வந்த சம்பந்தர்

(பாவடிவம்: அறுசீர் விருத்தம்)

நில்லென்ற போதும் நின்ற
நிலத்தமிழ் மாந்த ரோடுஞ்
செல்வாவார் தந்தை என்ற
துய்யதோர் வழியே பற்றி
முல்லையும் பூவும் வாடாப்
முகத்தெழிற் சம்பந் தன்வாழ்
எல்லையிற் தமிழர் கண்ட
ஈடிணை அற்றார் வாழ்க!

உள்ளுக்குள் பொறியே வைத்து
ஊத்தையாய்ப் போட்ட திட்டம்
கள்ளுக்கும் பாலும் வேற்றைக்
காட்டிடா மாந்தர் வந்தும்
விள்ளுதேர் இழுத்து வந்து
விளையாட வடக்கில் இட்டு
முள்ளொடும் பூவைச் செய்த
முனிவனே சம்பந் தன்னாம்!

நல்லவர் அவரைப் பேணும்
நடுநிலை கல்வி மேன்மை
சொல்வளர் உதிரத் தோடுஞ்
செறிந்தவர் இந்நாள் நின்று
எல்லமும் இயக்கு கின்றார்
எழில்முகம் கண்டு யானும்
வல்லதாய் அகவைப் பாவில்
வரைகிறேன் நீடு வாழ்க!

## கடன்கேட்ட மூன்றாம் வருடம்
## அகவைப்பா: 69


# 2015: அன்பு வேலவா இன்பமே தாராய்!

(பாவடிவம்: வண்ணப்பா-திருப்புகழ்)

தமிழ்த்தி றத்தொடு தாகரும் பாவிடத்
தளிர்க்க ரத்தொடு தண்ணளி யிட்டெனை
தகைக்கு மாதுளத் தந்துமே ஆண்டிடுந் தங்கவேலா
தனஞ்செய் யம்புல தண்முரு கோட்டமென்
தவழு மூறொடும் தாவியே ஈர்த்திடத்
தளைத்து நின்றனை தார்மயில் ஏறிய தகையோனே!
உமிழ்த்த சென்னியில் ஊரைவிட் டோடிட
உகுத்த போரொடுங் கூவிய மாசனம்
உசுப்பி மீண்டவர் இன்னிலம் போற்றியே ஏற்போனே
உழைப்பு மேலிட ஊன்றிய மேற்கிலே
உறைக்க வந்தவர் மேவிட வாழ்வராய்
உனைப்பு கழ்ந்திடுஞ் சோதியே தண்ணளி உலகோனே
கமழு மார்கடப் பம்பனே காத்திடுங்
கதிரு சோதியின் கார்த்திகை நாதனே
கனத்த வென்னுளங் காட்டிய ஞானவேற் கைவேலா
கனலை ஏந்திய காலமும் பொங்கிடக்
கறுத்த வாழ்வினைக் கண்டவர் ஈர்த்திடக்
கனியி னூரொடும் காட்டியே மீண்டிடக் காவாயே
அமிழ்து மென்கடல் ஆக்கிய சோதியிற்
அற்பு தம்பொலி வானையும் வள்ளியும்
அகத்து மேனியில் ஆடிடும் வண்ணமாம் அழகோனே
அசைத்து வென்நிலம் ஆளுமை தந்திட
அலைக்கு மாந்தரின் அன்புமே மேலிட
அன்னை மாநிலம் ஆக்குவை யாமடா ஆரூரா!

அகவைப்பா நூல் முகம் முற்றிற்று

## மறக்காத கணனியின் மடிப்புக்குள் இருந்தவை



சவப்பெட்டி இல்லாமலேயே
சடலங்கள் எரிந்தன..!

நேசிப்புக்காய் ஒரு இனம்
நேர்த்திக்கடன் வைத்த போதும்
யாசிப்பதற்கு
யாருமில்லாத போது...
தேசம் விளாசி எரிந்தது!

நிதானத்திலிருந்து
விடுவிக்கப்பட்ட..
சமாதானம் யமதர்ம
வாகனத்தில் ஏறிக்கொண்டது..

நேற்றும்.. இன்றும்.. நாளையும்
நான் மறந்தவற்றை..
காற்றும் ககனமும் மறந்த
கந்தகச் சுவடுகளை
பார்ப்பதற்கு வைத்திருக்கிறது..
கணனிச் சாதனம்..!
அவையே இவை!

52000
9 780992 148119

~புதியபாரதி
JJ Printers - Scarborough, Canada 416 298 9322